# பொருளியல் நோக்கு

நவம்பர் / டிசம்பர் 1999

# கல்வித் துறை சீர்திருத்தங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வங்கி வெளியீடு

# முன்னோட்டம்

சுதந்திரத்துக்கு பிற்பட்ட 50 வருட காலத்தில் இலங்கை கல்வித் துறையில் பாரிய முன்னேற்றங்களை சாதித்துக் கொண்டுள்ளது. ஒன்றன் பின் ஒன்றாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய அரசாங்கங்கள் செயற்படுத்திய கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள் காரணமாகவும், கல்வி வசதிகளை விருத்தி செய்யும் பொருட்டு தொடர்ச்சியாக வளங்கள் வழங்கப்பட்டு வந்ததன் காரணமாகவும் இது சாத்தியமாயிற்று. பாரிய அளவிலான இந்த முதலீடுகள் குறிப்பிடத்தக்க பல சாதகமான நிலைமைகளை நமது நாட்டுக்கு பெற்றுத் தந்துள்ளன. இலங்கையின் எழுத்தறிவு விகிதம் தென் ஆசியப் பிராந்தியத்தின் மிக உயர்ந்த விகிதமாக இருந்து வருவதுடன், அண்மைக் கால தலைமுறையினர் உயர் கல்வித் தகைமைகளையும் பெற்றுக் கொண்டுள்ளனர். மேலும், மிகுந்த அரசியல் விழிப்புணர்ச்சி கொண்ட வாக்காளர் தொகுதி ஒன்றையும், பெருமளவுக்கு திருப்தி தரக்கூடிய பௌதீக வாழ்க்கைத் தர குறிகாட்டிகளையும் இலங்கை இதன் விளைவாக பெற்றுக் கொண்டுள்ளது. இந்தச் சாதனைகள் அனைத்துமே கல்வித் துறையின் மேம்பாட்டில் இலங்கை இதுவரை காலமும் மேற்கொண்டு வந்திருக்கும் பாரிய முதலீடுகளை நியாயப்படுத்துகின்றன. சமகால இலங்கையில் வருடாந்த வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள், உள்கட்டமைப்பு வசதிகள், வருடாந்தம் பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை, அப்பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை என்பவற்றின் நியதிகளில் கல்வித் துறை மிகுந்த முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. நாடெங்கிலும் பரவி வியாபித்திருக்கும் சுமார் 10,500 அரசாங்கப் பாடசாலைகளில் 40 இலட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் தற்பொழுது கல்வி பயின்று வருகின்றார்கள். இப்பாடசாலைகளில் பணி புரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 190,000 ஆகும். அரசாங்கப் பாடசாலைகளில் ஆண்டொன்றுக்கு வருடாந்தம் சுமார் 4 இலட்சம் மாணவர்கள் புதிதாக சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள். 1998 இல் 6.3 சதுர கிலோ மீற்றருக்கு ஒரு பாடசாலை என்ற விகிதத்தில் பாடசாலைகள் அமைந்திருந்ததுடன், ஆசிரியர்-மாணவர் விகிதாசாரம் 22 ஆக இருந்து வந்தது.

உயர் கல்வித் துறையைப் பொறுத்தவரையில் எமது பல்கலைக்கழக அமைப்பில் சுமார் 38,000 மாணவர்கள் சேர்ந்து கொண்டுள்ளனர். இது தவிர, சுமார் 17,000 மாணவர்கள் திறந்த பல்கலைக்கழகத்தில் பல்வேறு பாட நெறிகளையும் பயின்று வருகின்றனர். தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் கல்வி ஆகிய துறைகளில் தொழில்நுட்பக் கல்லூரிகள், தொழில் பயிற்சி அதிகார சபை, தேசிய தொழில் பயிற்சி மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை போன்ற அரசாங்க நிறுவனங்களால் நடத்தப்பட்டு வரும் பல்வேறு பாட நெறிகளிலும் சுமார் 55,000 மாணவர்கள் இணைந்து கொண்டுள்ளனர் கடந்த 10 வருட காலத்தின் போது அரசாங்கம் அதன் வருடாந்த செலவில் 8.3 சதவீதம் தொடக்கம் 11.3 சதவீதம் வரையிலான ஒரு தொகையை கல்விக்கென செலவிட்டு வந்துள்ளது. மேலும், தனியார் துறையைச் சேர்ந்த பல நிறுவனங்களும் கணிசமான அளவிலான மாணவர்களுக்கு பல்வேறு பாடநெறிகளையும் வழங்கி வருகின்றன.

பாடசாலைகளில் மாணவர்கள் சேரும் விகிதம், எழுத்தறிவு மட்டம் மற்றும் கல்விச் சாதனைகள் என்பன தொடர்பாக நாம் பெருமிதமடையக் கூடியவர்களாக இருந்து வந்த போதிலும், இரண்டாம் நிலைக் கல்வியையும் உயர் கல்வியையும் பெற்று வரும் அதிகரித்த அளவிலான இளைஞர் யுவதிகளுக்கு உற்பத்திசார் வேலை வாய்ப்புக்களை வழங்கும் விஷயத்தில் இலங்கை இடையறாது பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றது. க.பொ.த. உயர்தர தகைமையையும் பல்கலைக்கழக பட்டத்தையும் பெற்றிருக்கும் பெருந்தொகையான வேலையற்ற இளைஞர்கள் - சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் நிலவிவரும் வேலை வாய்ப்புக்களுக்குப் பொறுத்தமற்ற இளைஞர்கள் - இருந்து வருவதானது கொள்கை உருவாக்குபவர்கள் சந்திக்கும் முக்கியமான ஒரு சவாலாக உள்ளது. மேலும், இது 1960 களின் பின்னர் எமது அரசியல் சமூகத்தில் கொந்தளிப்பு நிலையை தூண்டி வந்துள்ள ஒரு பிரச்சினையாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது. சுமார் 3 தசாப்தங்களுக்கு முன்னர் படித்த இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டம் மிக உயர் மட்டங்களை எட்டியிருந்த சந்தர்ப்பத்தில், அப்பொழுது அதிகாரத்திலிருந்த ஐக்கிய முன்னணி அரசாங்கம் அதன் கொள்கை ஆவணம் ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தது: "வேலை உலகத்திலிருந்து கல்வி புறம்பாக ஒதுங்கியிருந்த நிலை காரணமாக ஒரு முழுத் தலைமுறையும் நாட்டை உடனடியாக அபிவிருத்தி செய்யக்கூடிய உற்பத்தி முறை ஒன்றிலிருந்து வேறாக்கப்பட்டுள்ளது. ஏதேனும் உற்பத்தி நடவடிக்கையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கக் கூடிய இந்த இளைஞர்கள் மேசையில் அமர்ந்து செய்யக்கூடிய தொழில்களை எதிர்பார்த்து வீணே அலைந்து திரிகின்றனர். இத்தகைய வெள்ளை வேட்டி உத்தியோகங்களின் விரிவாக்கத்துக்கு நாட்டின் உற்பத்தித் துறைகளினால் இனிமேலும் ஆதரவு வழங்க முடியாது."

சுதந்திரத்துக்கு பிற்பட்ட காலப் பிரிவு முழுவதும் படித்த இளைஞர்களிடையே தொடர்ச்சியாக நிலவி வந்த உயர் மட்டத்திலான வேலையில்லாத் திண்டாட்ட விகிதம் கடந்த தசாப்தத்தின் போது ஓரளவுக்கு வீழ்ச்சி கண்டிருந்த போதிலும் மேலேயுள்ள கூற்றின் பொருத்தப்பாடு இன்றைக்கும் கூட பெருமளவுக்கு மாறாமல் இருந்து வருகின்றது. உள்ளார்ந்த பல வீனங்களையும் பொருத்தமின்மைகளையும் தன்னகத்தே கொண்டிருக்கும் எமது கல்வியமைப்பே எமது பெரும்பாலான சமூக அவலங்களுக்கு வழிகோலியுள்ளது என பொதுவாக குற்றம் சாட்டப்பட்டு வருகின்றது. அண்மைக் காலத்தில் இடம்பெற்ற (1971 மற்றும் 1987 89) இரு இளைஞர் கலவரங்களின் பின்னணியில் இத்தகைய இளைஞர்களின் விரக்தி நிலையே இருந்து வந்தது எனக் கூறப்படுகின்றது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின் போது அவர்களுடைய வணிகப் பொருளாதாரத்துக்குத் தேவையான இலிகிதர்களை உருவாக்கிக் கொள்வதற்கென வடிவமைக்கப்பட்ட கல்வியமைப்புக்கும் சுதந்திரத்துக்கு பிற்பட்ட காலத்தில் புதிதாக உருவாகிய தொழில் வாய்ப்புக்களுக்கும் இடையில் ஓரளவுக்கு ஒரு பொருத்தமின்மை நிலை நிலவி வந்தது. கடந்த இரண்டு தசாப்த காலத்தின் போது செயற்படுத்தப்பட்ட திறந்த பொருளாதார கொள்கைகளின் பிரகாரம் அரச துறையில் தொழில் தொழில்வாய்ப்புக்கள் குறைவடைந்து தனியார் துறையில் இடையறாத விரிவாக்கம் ஏற்பட்டு வந்த பின்னணியில் இந்தப் பொருத்தமின்மை நிலை மேலும் தீவிரமடைந்தது. இதன் விளைவாக வேலைவாய்ப்புத் துறையில் ஒரு எதிர்முரண் நிலை தோற்றியது. அதாவது, ஒரு புறம் உயர் அளவிலான வேலையில்லாத் திண்டாட்டம் நிலவி வந்த அதேவேளையில், மறுபுறத்தில் தனியார் துறையில் நிலவி வந்த பெருந்தொகையான வேலை வாய்ப்புக்களுக்கு பொருத்தமான ஆட்களை சேர்த்துக் கொள்ள முடியாத ஒரு நிலை காணப்பட்டது.

1994 இல் ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பொதுசன முன்னணி அரசாங்கம் அதன் ஒட்டுமொத்த மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பாகமாக எமது கல்வியமைப்பை, எழுச்சி கண்டுவரும் புதிய சமுதாயத்தின் தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைத்து பலப்படுத்திக் கொள்ளும் குறிக்கோளுடன் பல முன்முயற்சிகளை மேற்கொண்டது. இந்தச் செயன்முறையின் போது அரசாங்க ஆசிரியர்களின் சம்பளங்கள் முன்னொரு போதும் இல்லாத அளவுக்கு உயர்த்தப்பட்டன. ஆசிரியர்களின் சம்பளம் சீரமைக்கப்பட்டு, இலங்கை ஆசிரியர் சேவை உறுதியாக ஸ்தாபிக்கப்பட்டதனை அடுத்து தேசிய தொலைக்காட்சியில் தோன்றி உரை நிகழ்த்திய ஜனாதிபதி அவர்கள், மாறி வரும் சமூகத் தேவைகளுக்கு ஏற்ப மேலும் அதிகளவு அர்ப்பணிப்புடன் தமது பொறுப்புக்களை நிறைவு செய்து வைக்க ஆசிரியர் சமூகம் முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். அதேவேளையில், கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பாக தேசிய கல்வி ஆணைக்குழு தன்னிடம் சமர்ப்பித்திருந்த கொள்கை முன்மொழிவுகளை அரசாங்கத்தின் செயல்திட்டத்தின் ஒரு முன்னுரிமை விடயமாக உள்ளடக்கிய அவர் 1997 ஆம் வருடத்தை கல்விச் சீர்திருத்தம் மற்றும் மறுசீரமைப்பு என்பவற்றுக்கான ஆண்டாக பிரகடனம் செய்ததுடன், உத்தேச சீர்திருத்த செயன்முறைக்கு செயல் வடிவம் கொடுக்குமாறு அதிகாரிகளைப் பணித்தார்.

தற்போதைய கல்விச் சீர்திருத்த செயன்முறை பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துகின்றது: (I) கல்வி வாய்ப்புக்களை விரிவாக்குதல் (II) கல்வியின் தரத்தை விருத்தி செய்தல், (III) நடைமுறை மற்றும் தொழில் நுட்பத் திறன்களை அபிவிருத்தி செய்தல், (IV) ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி, (V) முகாமையும் வளங்களை வழங்குதலும்.

இலங்கை இன்று ஒரு புதிய நூற்றாண்டில் புதிய ஆயிரமாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்திருக்கும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க இந்தத் தருணத்திலே நிலையான சமாதானம், நல்லிணக்கம் என்பன எமது தாய் மண்ணில் மலர வேண்டும் என்பது குறித்த பொதுக் கருத்து எமது சிவில் சமூகத்திற்கிடையே மெதுவாக ஆனால் நிச்சயமாக உருவாகிக் கொண்டிருக்கிறது. இந்த உன்னத குறிக்கோள்களை சாதித்துக் கொள்ளும் பொருட்டு நாங்கள் குறுகிய சிந்தனைகளை களைந்து விடயங்களை ஒரு பரந்த கண்ணோட்டத்தில் நோக்குவது அவசியமாகும். எமது சமூக அமைப்பின் பன்முகத் தன்மை மற்றும் அனைவரையும் அரவணைத்துச் செல்லும் இயல்பு என்பவற்றுக்கு உரிய அங்கீகாரம் அளிப்பது இச்செயன் முறையின் ஒரு முக்கிய கூறாக இருந்து வரும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. சிறுவர்களிடையே இத்தகைய உயர் விழுமியங்களை பதியச் செய்வதில் கல்வி வகித்து வரும் முக்கியத்துவத்தை கவனத்தில் எடுத்தே இச்சீர்திருத்தங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

பொருளியல் நோக்கு சஞ்சிகையின் முன்னைய பல இதழ்கள் (மே 1976, டிசம்பர் 1982, ஏப்ரல் 1983, மே/ஜுன் 1994 மற்றும் ஜனவரி 1997) கல்வி தொடர்பான பல்வேறு அம்சங்களையும் விரிவாக கலந்துரையாடியுள்ளன. இந்த இதழ் அந்த வரிசையில் புதிய கல்விச் சீர்திருத்தங்களை விரிவாக கவனத்தில் எடுத்து ஒரு பகுப்பாய்வினை மேற்கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் 25 இதழ் 8/9 நவம்பர் / டிசம்பர் 1999

# பொருளியல் நோக்கு

வெளியீடு: ஆராய்ச்சிப் பகுதி
மக்கள் வங்கி, தலைமையலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை
கொழும்பு 2.
இலங்கை.

பிரதம ஆசிரியர் பீட ஆலோசகர்:

கலாநிதி காமினி பெர்னான்டோ
பீ. ஏ. சிறப்பு (இலங்கை)
எம். ஏ. (இலங்கை)
எம். எஸ். ஸி. (USA), பீ. எச். டி. (UK)
தலைவர், மக்கள் வங்கி

பிரதம ஆசிரியர்:
கலாநிதி எஸ். எஸ். ஏ. எல். சிரிவர்தன
ஆராய்ச்சிப் பணிப்பாளர்

இணை ஆசிரியர் / நிர்வாக ஆசிரியர்:
டப். ஜீ. எஸ். வைத்தியநாத

இணை ஆசிரியர்: (சிங்களப் பதிப்பு - ஆர்திக விமசும)
ஈ. டி. சி. புஷ்பகுமார

இணை ஆசிரியர்: (தமிழ் பதிப்பு - பொருளியல் நோக்கு)
எம். எல். எம். மன்சூர்

*பொருளில் நோக்கு கருத்துக்களையும் அறிக்கைகளையும் புள்ளி விவரத்தரவுகளையும் உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தினைத் தூண்டி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட இதழாகும்.*

*பொருளியல் நோக்கு வெளியீடு மக்கள் வங்கியின் ஒரு சமுகப்பணித் திட்டமாகும். எனினும், அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோகபூர்வமான கருத்துகளையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.*

*பொருளியல் நோக்கு மாதந்தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்தியோ அல்லது விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ள முடியும்.*

## உயர் கல்வி அனுபந்தம்

| | | |
|---|---|---|
| வின்சன்ட் மேர்வின் பெர்னான்டோ | 32 | வரவு செலவுத்திட்டம் 2000: ஒரு கண்ணோட்டம் |

## விஷேச அறிக்கை

| | | |
|---|---|---|
| | 2 | கல்வித் துறை சீர்திருத்தங்கள் |
| விமல் சியம்பலாகொட | 5 | கல்விச் சீர்திருத்தங்களும் புதிய ஆரம்பக் கல்வி முறையும் |
| ரஞ்சித் பத்மசிறி | 9 | புதிய சீர்திருத்தங்களும் இடைநிலைக் கல்வியும் |
| கே. டி. அருள்பிரகாசம் | 15 | பல்கலைக்கழக கல்வி தொடர்பான சீர்திருத்தங்கள் |
| ஏ. ஈ. இஸட். பெர்னான்டோ | 20 | தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சி என்பவற்றில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்கள் |
| அனுர குமாரசிங்க | 24 | கல்வி அமைப்புக்கு ஊடாக தொழில் ஆலோசனை வழங்குவதன் முக்கியத்துவம் |
| ஏ. ஏ. நவரத்ன | 27 | பாடசாலை மட்டக் கணிப்பீட்டின் அறிமுகம் |
| ஆர். எஸ். மெதகம | 28 | அடுத்து வரும் பத்தாண்டுகளில் கல்வி: ஒரு கண்ணோட்டம் |

**அடுத்த இதழில்**
**யுரோ: ஒரு புதிய நாணயத்தின் எழுச்சி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பான ஒரு குறிப்பு

மனிதனின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் பல்வேறு காரணிகளில் கல்வி முதன்மையானதாகும். கல்விக்கூடாக மனிதனின் முழுமையான வளர்ச்சிக்கு அளப்பரிய ஒரு பங்களிப்பு வழங்கப்பட்டு வருகின்றது. அது ஒரு மனிதனை,

* பண்பட்ட மனிதனாகவும்,
* நன்கு தகவல்களை அறிந்து கொண்டவனாகவும் தகவல்களை அறிந்து கொள்ளும் ஆற்றல்களைக் கொண்டவனாகவும்,
* திறன்களை பெற்றுக் கொண்டவனாகவும்,
* சுய கட்டுப்பாட்டினை கொண்டவனாகவும்,
* தாக்கமான சுமுகமான பேச்சுக்கு ஊடாக தொடர் பாடலை மேற்கொள்ளக் கூடியவனாகவும் ஆக்கு கிறது.

ஒரு மனிதன் சமுதாயத்தில் வாழ வேண்டியவனாக இருந்து வருவதனால் சரியான முறையில் பேசக் கூடிய ஆற்றல் அவனைப் பொறுத்தவரையில் மிக முக்கியமானதாகும்.

இந்த வகையில், கல்வியைப் பெற்றுக் கொண்டிருக்கும் ஒருவர், வன்முறையை பிரயோகிப்பதற்கு ஊடாகவன்றி கலந்துரையாடல் மற்றும் பேச்சுவார்த்தை என்பவற்றுக்கு ஊடாக தனக்கு வேண்டியவற்றை பிறரிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கும் ஒருவர் என வரைவிலக்கணம் செய்யப்படுகின்றது. இவை ஒரு வகையில் மனிதனின் தனிப்பட்ட குறிக்கோள்களாகும். இது தவிர கல்வி என்பது ஒரு மனிதனை, அத்தியாவசியமான சமுதாயக் குறிக்கோள்களை அவன் சாதித்துக் கொள்வதற்கு உதவும் வகையில் அதற்குத் தேவையான திறன்களையும் மனப்பாங்குகளையும் அவனிடத்தில் அபிவிருத்தி செய்தல் வேண்டும். இக்குறிக்கோள்களை ஒரு சிறந்த சமுதாயத்தின் மூன்று குணாம்சங்களின் அடிப்படையில் அடையாளம் காண முடியும். அவையாவன:

* நலிவுற்றவர்கள், அப்பாவிகள் மற்றும் வயது முதிர்ந்தோர் ஆகிய சமூகப் பிரிவினருக்கு பாதுகாப்பு அளிக்கப்படுவதுடன், வாழ்வதற்கான அவர்களுடைய உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு நபரினதும் மனச் சாந்தி மற்றும் உடல் நலன் என்பவற்றுக்கு உசிதமான சமூக, பௌதீகச் சூழலொன்று நிலவி வருதல் வேண்டும்.
* எதிர்பாராத முறையில் இடம்பெறக் கூடிய அழிவுகள் மற்றும் நெருக்கடிகள் என்பவற்றை சமாளிக்கும் பொருட்டு ஒவ்வொரு நபரும் ஒவ்வொரு சமூகமும் வளங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
* எமது நாட்டில் தற்பொழுது காணப்படும் முறையான கல்வி மற்றும் பயிற்சி என்பன உற்பத்தித் திறன், தேசிய போட்டித்திறன் மற்றும் நல்லாட்சி என்பவற்றை மேம்படுத்தி வரவில்லை என்பதனை அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு எடுத்துக் காட்டியிருந்தது. மேலும், மிக உயர்ந்த கல்வித் தகைமைகளைப் பெற்றிருந்த நபர்கள் ஏனைய நாடுகளில் வாழ்ந்து வந்த தமது சகாக்களுடன் ஒப்பிடும் பொழுது தேசிய பொருளாதாரத்துக்கும் சமூக அபிவிருத்திக்கும் கணிசமான அளவிலான பங்களிப்பினை வழங்கி வந்திருக்கவில்லை என்பதும் எடுத்துக் காட்டப்பட்டிருந்தது.

தேசிய கல்வி ஆணைக்குழுவினால் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட கொள்கை யோசனைகளின் அடிப்படையிலேயே கல்வித் துறை தொடர்பான சீர்திருத்தங்கள் வகுக்கப்பட்டிருந்தன. இந்த யோசனைகளை தயாரிப்பதில் தேசிய கல்வி ஆணைக்குழு பொதுமக்களிடமிருந்து வாய்மொழி மூலமான மற்றும் எழுத்து மூலமான கருத்துக்களை பெற்றுக் கொண்டதுடன், நிபுணத்துவ ஆலோசனைகளையும் பெற்றது. மேலும் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரை உள்ளடக்கிய விசேஷ அக்கறைக் குழுக்களுடன் கல்வி மற்றும் பயிற்சி என்பன தொடர்பான குறித்துரைக்கப்பட்ட சில விடயங்களை அது கலந்துரையாடியது. இக்கொள்கைச் சீர்திருத்தங்கள் கல்வி, சிறுவர் அபிவிருத்தி மற்றும் பாடவிதான அபிவிருத்தி என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட நிபுணர்களை உள்ளடக்கியிருந்த குழுக்களின் உதவியுடன் தயாரிக்கப்பட்டன.

இந்தக் கொள்கைக்கு செயல்வடிவம் கொடுப்பதற்கென தேசிய கல்வி ஆணைக்குழு நடவடிக்கை வழிப்பட்ட உத்தியொன்றை இனங்கண்டிருந்தது. இந்தப் பணியில் பரந்த வீச்சிலான துறைகளை உள்ளடக்கிய விதத்தில் கல்வியாளர்கள், தொழில்சார் நிபுணர்கள், நிர்வாகிகள் மற்றும் பல்கலைக்கழக கல்விமான்கள் போன்ற தரப்பினரின் உதவி ஆணைக்குழுவுக்குக் கிடைத்தது. இந்தக் கொள்கை முன்மொழிவுகளும் நடவடிக்கை வழிப்பட்ட உத்தியும் 1996 இன் இறுதிப் பகுதியில் ஜனாதிபதி அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டன. அதனையடுத்து அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் இதன் தேசிய முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் விதத்தில் 1997 ஆம் வருடத்தை கல்விச் சீர்திருத்தம் மற்றும் மறுசீரமைப்பு என்பவற்றுக்கான வருடமாக பிரகடனம் செய்தார். அவ்வாண்டின் போது அரசாங்கத்தினால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இச்சீர்திருத்த நிகழ்வுப்போக்கு முறைசார்ந்த கல்வியின் மூன்று பிரதான துறைகளில் சீர்திருத்தங்களை எடுத்து வரும் நோக்கில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அவையாவன:

1. பொதுக் கல்வி;
2. பல்கலைக்கழகக் கல்வி;
3. தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சி.

இந்த ஒவ்வொரு துறை தொடர்பாகவும் ஜனாதிபதியினால் செயலணிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளன. துறைகள் 1 மற்றும் 2 என்பவற்றுக்கான செயலணிக்கு அமைச்சர் கௌரவ ரிச்சர்ட் பத்திரன தலைமை தாங்குகிறார். மூன்றாவது செயலணி அமைச்சர் கௌரவ அமரசிரி தொடங்கொடவின் தலைமையில் இயங்கி வருகின்றது. இச் செயலணிகள் தற்பொழுது முழு மூச்சில் செயற்பட்டு வருகின்றன. அவை விரிவான ஒரு தொகுதி நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டங்களை இனங்கண்டுள்ளன. இந் நிகழ்ச்சித் திட்டங்கள் மக்களின் தேவைகள் மற்றும் அபிலாஷைகள் என்பவற்றுக்கு ஏற்ற விதத்தில் முழுக் கல்வியமைப்பிலும் மாற்றங்களை எடுத்து வரும் நோக்கத்தைக் கொண்டுள்ளன. இந்தக் கொள்கைக்கு செயல் வடிவம் கொடுப்பதற்கு அவசியமான பல்வேறு உள்கட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைப்பு வசதிகளையும் நடைமுறைகளையும் இந்த நடவடிக்கை நிகழ்ச்சித் திட்டங்கள் வழங்குகின்றன. இந்தச் செயன்முறையின் போது, அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் வரும் யோசனைகளுக்கு செயலணிகளும் செயற்படுத்தும் முகவரகங்களும் செவிமடுக்கும்.

பெருந்தோட்டத் துறை கல்வி தொடர்பான கொள்கை பரிந்துரைகள் ஜனாதிபதி அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதுடன், ஒரு தொகுதி நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டங்களும் இனங்காணப்பட்டுள்ளன. இது தொடர்பான விவரமான அம்சங்கள் இப்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதன் விளைவாக பெருந்தோட்டத் துறையிலும் கல்வி தொடர்பாக முக்கியமான பல அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

## பொதுக்கல்வி தொடர்பான சீர்திருத்தங்கள்

இது தொடர்பான சீர்திருத்தங்கள் பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்கின்றன: I. கல்வி வாய்ப்புக்களை விரிவாக்குதல்; II. கல்வியின் தரத்தை விருத்தி செய்தல்; III. பிரயோக மற்றும் தொழில்நுட்ப திறன்களை அபிவிருத்தி செய்தல்; IV. ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி; V. முகாமையும் மூலவள ஒதுக்கும்.

இந்த ஒவ்வொரு துறை தொடர்பாகவும் நடவடிக்கை நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளன. அரசாங்கம் சீர்திருத்தத்தின் பல்வேறு அம்சங்கள் தொடர்பாகவும் அதன் மூலவளங்களை பயன்படுத்தி வரும் அதேவேளையில் கல்வியின் தர விருத்தி, ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி என்பவற்றின் அபிவிருத்தி என்பவற்றுக்கென நன்கொடை உதவியும் கடன்களும் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன.

ஆரம்ப சிறுவர் அபிவிருத்தி மற்றும் பாலர் பாடசாலைக் கல்வி தொடர்பான விருத்தி என்பன மகளிர் விவகார அமைச்சின் சிறுவர் செயலகத்தின் கண்காணிப்பின் கீழ் வருகின்றன. இது தொடர்பாக தாய்மார் ஆரம்ப சிறுவர் அபிவிருத்தித் துறையில் ஈடுபட்டிருக்கும் நபர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரை இலக்காகக் கொண்ட நடவடிக்கை நிகழ்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. விழிப்புணர்ச்சியைத் தூண்டுதல், தாய் வகிதது வரும் பங்கினை பலப்படுத்துதல், குறித்துரைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் தயாரிப்பு என்பன இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் பாலர் பாடசாலைகள் என்பன தொடர்பாக தர நிர்ணயங்களை விதித்தல், அவற்றில் பணி புரியும் ஆட்களுக்கென பயிற்சிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் என்பவற்றில் மாகாண சபைகள் ஈடு படும்.

5-14 வயதுத் தொகுதியில் இருந்து வரும் பிள்ளைகளுக்கு கட்டாயக் கல்வி வழங்குவது தொடர்பான ஒழுங்கு விதிகள் அமுல் செய்யப்படும். பிள்ளைகள் பாடசாலைக்கு சமூகமளிக்காதிருப்பதற்கான காரணங்களை கண்டறிவதற்கென ஒரு மதிப்பீட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. பிறப்புச் சான்றிதழுக்குப் பதிலாக ஆவணங்களை வழங்குதல், தொண்டு நிறுவனங்களுக்கூடாக பொருள் உதவியை வழங்குதல், கணிசமான ஒரு காலப்பிரிவின் போது பாடசாலைக்கு செல்லாதிருந்த பிள்ளைகளுக்கென மாற்று ஏற்பாடுகளை வகுத்தல், பொது மக்களின் விழிப்புணர்வைத் தூண்டும் இயக்கங்கள், பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பத் தவறும் பெற்றோர் / பாதுகாவலர் மற்றும் வேலை கொள்வோர் என்போர் மீது நெருக்குதலை எடுத்து வருவதற்கென உத்தியோகபூர்வ குழுக்களை நிறுவுதல் போன்ற வழிமுறைகளுக்கூடாக பிள்ளைகள் பாடசாலைக்கு சமூகமளிப்பதனை ஊக்குவிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

ஆரம்பக் கல்வி பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் மிகவும் முக்கியமான ஒரு கட்டமாக கருதப்பட்டு வருகின்றது. எமது பள்ளிக் கல்வியில் உயர் தரத்தினை எடுத்து வரும் நோக்கத்துடன் ஆரம்பக் கல்வி தொடர்பான சீர்திருத்தங்கள் வகுக்கப்பட்டுள்ளன. ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டு, நடவடிக்கை மற்றும் மேசை வேலை என்பவற்றைக் கொண்ட ஒரு கலவைக் கூடாக பிள்ளைகளுக்கு ஆரம்பக் கல்வி வழங்கப்படும். 5 அடிப்படை தேர்ச்சிகளின் ஒரு தொகுப்பு பாடத்திட்டத்துக்கான அத்திவாரத்தை வழங்கும். ஒவ்வொரு பிள்ளை தொடர்பாகவும் தேவைப்படும் உதவி வகையை இனங்கண்டு கொள்வதற்கென பாடசாலை மட்டத்திலான கணிப்பீடு மேற்கொள்ளப்படும். தரம் ஒன்றிலிருந்து ஆரம்பமாகும் செயலை அடிப்படையாகக் கொண்ட கல்வியின் போது உரையாடல்களில் ஆங்கிலம் பயன்படுத்தப்படும்.

இச் சீர்திருத்தங்கள் 1998 இல் கம்பகா மாவட்டப் பாடசாலைகளில் தரம் 1 இலிருந்து அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. ஆரம்பக் கல்வியிலான சீர்திருத்தங்களை 1999 தொடக்கம் நாடளாவிய ரீதியில் அறிமுகம் செய்து வைப்பதற்கு வகை செய்யும் விதத்தில் இது மேற்கொள்ளப்பட்டது. ஆரம்ப கல்விக் கட்டத்தில் நாடளாவிய ரீதியில் மாற்றங்களை எடுத்து வரும் நிகழ்வுப்போக்கு 2003 இல் பூர்த்தியடையும். இதில் ஆசிரியர் புத்தாக்கம் மற்றும் பயிற்சி, நல்ல தரமான காகிதத்தில் வர்ணத்தில் அச்சிடப்பட்ட பாடப் புத்தகங்களின் விநியோகம், பாடசாலை உள்கட்டமைப்பில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் என்பன முக்கிய அம்சங்களாக இருந்து வருகின்றன. இச்சீர்திருத்தங்களின் தாக்கங்களை கண்டறிந்து கொள்வதற்கென இவ்வாண்டின் போது கம்பகா மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டாய்வுகள் பிள்ளைகள் அதிகளவுக்கு செயலுக்கு தூண்டப்பட்டவர்களாக இருந்து வருகின்றார்கள் என்பதனை எடுத்துக் காட்டியுள்ளன. மேலும், அப்பிள்ளைகள் தம்மைப் பார்க்கிலும் மேல் வகுப்பில் படிக்கும் பிள்ளைகளுடன் ஒப்பிடும் பொழுது மிகவும் உயர் மட்டத்திலான எழுத்தறிவினையும் எண்ணறிவினையும் பெற்றுக் கொண்டிருப்பதனையும் காண முடிகிறது. ஆசிரியர் வருகை விகிதத்திலும் அதிகரிப்பு தென்படுகிறது. பெரும்பாலான ஆசிரியர்கள் தமது தொழில் திருப்தி நிலை அதிகரித்துள்ளது எனத் தெரிவித்துள்ளனர். பாடசாலை உள்கட்டமைப்பில் மாற்றங்களை எடுத்து வரும் பொருட்டு பல பாடசாலைகளில் செலவு குறைந்த புதுமைப்புனைவுடன் கூடிய உத்திகள் கையாளப்பட்டுள்ளன. அத்தகைய பாடசாலைகளில் மாணவர்களின் கல்விச் சாதனைகளும் உயர் மட்டத்தில் நிலவி வருகின்றன.

1999 இல் தரம் 6 தொடக்கம் கனிஷ்ட இரண்டாம் நிலை கல்வி மட்டத்தில் சீர்திருத்தங்கள் அறிமுகம் செய்து வைக்கப்படும். இந்தக் கட்டத்தில் பாடத்திட்ட உள்ளடக்கம் பாடங்களிலிருந்து வேறுபடுத்தப்படுகின்றது: தாய்மொழி, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், சமூகக் கல்வி, வாழ்க்கைத் தேர்ச்சிகள், சமயம், அழகியல்/சுகாதாரம் மற்றும் உடலியல் கல்வி, ஏனைய தேசிய மொழிகளாக தமிழ்/சிங்களம் அழகியல் கல்வி, சித்திரம், சங்கீதம், நடனம் மற்றும் நாடகம் என தரம் 7 தொடக்கம் வெவ்வேறு பாடங்களாக போதிக்கப்பட்டு வரும். சமூகக் கல்வி பாடத்துக்கூடாக சமாதானக் கல்வி, தேசிய ஐக்கியம், ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் பால் சமத்துவம் முதலிய விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனிஷ்ட இரண்டாம் நிலைக்கட்டத்தில் இருந்து வரும் பிள்ளைகளுக்கு பிரயோக மற்றும் தொழில்நுட்பத் திறன்களை அபிவிருத்தி செய்து கொள்வதற்கென வசதிகள் வழங்கப்படும். ஐந்து பரந்த துறைகளில் அவர்களுக்கு மிகவும் விரிவான ஒரு வீச்சிலான திறன்களின் தொகுதி பெற்றுக் கொடுக்கப்படும்: உணவு மற்றும் விவசாயம், உருவாக்குதல் மற்றும் செய்தல், தகவல் மற்றும் ஏற்பாடு, அரங்கக் கலைகள் மற்றும் நகர்வு, கட்புல கலைகள் மற்றும் வடிவமைப்பு.

தரம் 9 கனிஷ்ட இரண்டாம் நிலைக்கட்டம் மற்றும் கட்டாயக் கல்வி என்பவற்றின் முடிவாக இருந்து வரும். மாகாண அதிகாரிகள் மற்றும் பரீட்சைகள் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரின் கண்காணிப்பின் கீழ் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட வருட முடிவுப் பரீட்சையொன்று நடத்தப்படும். வேண்டுதலின் பேரில், தரம் 9 வரையில் பாடசாலைக் கல்வியை பெற்றிருப்பதனையும் பரீட்சைப் பெறு பேறுகளையும் எடுத்துக்காட்டும் ஒரு சான்றிதழ் வழங்கப்படும். அதே வேளையில் தரம் 10 க்கு செல்ல விரும்புபவர்கள் தடங்கலின்றி அத்தரத்துக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்படுவர். இதில் தரம் 9 வருட இறுதிப் பரீட்சையின் பெறு பேறுகள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.

க. பொ. த. (சா/த) மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் கல்வியை இரண்டாண்டுகளுக்கு வரையறை செய்கின்றன. அத்துடன் அப்பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்: முதல் மொழி, ஆங்கிலம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், கணிதம், சமூகக் கல்வி மற்றும் வரலாறு, அழகியல் பாடங்கள் மற்றும் ஒரு தொழில்நுட்ப பாடம். தரப்பட்ட பட்டியல் ஒன்றிலிருந்து பரீட்சார்த்திகள் மேலும் இரு பாடங்களை தெரிவு செய்து கொள்ளலாம். இப்பட்டியல் பின்வனவற்றை உள்ளடக்குகின்றது: இரண்டாவது மொழியாக தமிழ்/சிங்களம், வரலாறு புவியியல், இலக்கியம் முதலியன.

1999 க. பொ. த. (சா/த) பரீட்சை தொடக்கம் பரீட்சார்த்திகள் கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஒன்று அல்லது இரண்டு வினாப்பத்திரங்களை தெரிவு செய்து கொள்ளலாம். இந்த ஒவ்வொரு பாடம் தொடர்பாகவும் வழங்கப்படும் இரண்டு வினாப்பத்திரங்களும் ஒரே பாடத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும். மாணவர்கள் பரீட்சையில் தேர்ச்சியுறத் தவறும் விகிதங்கள் தற்பொழுது சற்று உயர்வாக காணப்படுகின்றன. இதனைக் குறைக்கும் நோக்குடனேயே இவ்விதம் வினாப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. இது பெரும்பாலான பரீட்சார்த்திகளைப் பொறுத்த வரையில் ஒரு பயனுள்ள வழியாக இருந்து வரும்.

க. பொ. த. (உ/த) கட்டத்தில் பரீட்சார்த்தி ஒருவர் 3 பாடங்களை மட்டுமே எடுக்க வேண்டியுள்ளது. பல்கலைக்கழக அனுமதியை பெற விரும்பும் பரீட்சார்த்திகள் பொது வினாப்பத்திரம் ஒன்றுக்கும் தோற்ற வேண்டியிருக்கும். பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமை பெறுவதற்கு இவ்வினாப்பத்திரத்தில் குறிப்பிட்ட குறைந்த மட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும். இந்த வினாப் பத்திரத்துக்கூடாக பரீட்சார்த்திகளின் பொது அறிவு, சிக்கல்களைத் தீர்க்கும் உளத் திறன்கள், தர்க்க ரீதியான சிந்தனை, கிரகித்தல் மற்றும் தொடர்பாடல் என்பன பரீட்சிக்கப்படும்.

பொதுக் கல்வியின் அனைத்துக் கூட்டங்களிலும் பாடசாலை மட்ட கணிப்பீடு ஒரு முக்கியமான அம்சமாக இருந்து வரும். மாணவர்கள் கல்வி பயிலும் நிகழ்வுப்போக்கை அதிக அளவுக்கு தாக்கத்திறன் கொண்டதாக ஆக்கிக் கொள்வதற்கும் புதிய திறன்களை அபிவிருத்தி செய்து கொள்வதற்கும் என செயற்றிட்டங்களை மேற்கொள்வர். கனிஷ்ட இரண்டாம் நிலை தரங்களிலும் க. பொ. த. (சா/த) மட்டத்திலும் மேற்கொள்ளப்பட்ட முன்னோடி நிகழ்ச்சித் திட்டங்கள் மாணவர்கள் இத்தகைய செய்திட்டங்களில் அதிக செயலூக்கத்துடன் பங்கேற்று வருகின்றார்கள் என்பதனையும், ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு வழங்கும் மனப்பாங்கினை வெளிப்படுத்தி வருகின்றார்கள் என்பதனையும் எடுத்துக் காட்டியுள்ளன. க.பொ.த. (உ/த) கட்டத்தின் போது மாணவர்கள் க. பொ. த. (உ/த) பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமை பெறும் பொருட்டு பிரயோக வேலைகள், ஒப்படைகள், ஒரு தனிப்பட்ட செய்திட்டம், கூட்டு செய்திட்டம் என்பவற்றை மேற்கொள்ள வேண்டியுள்ளது. பிரயோக வகுப்புகளுக்கென பாடசாலைகளுக்கு போதிய வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. நடைமுறைகள் குறித்து ஆசிரியர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. பாடசாலை நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கும் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுவதற்குமென வலயக் கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிள்ளையும் ஆசிரியரும் செயலாற்றுகை தொடர்பான பதிவுகளை பராமரித்து வருவார்கள். மாணவர்கள் பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் பொழுது அறிக்கைப் புத்தக வடிவில் தமது செயல்பாடுகள் தொடர்பான பயன்மிக்க ஒரு பதிவேட்டினை தம்முடன் எடுத்துச் செல்வார்கள்.

மூலவளங்களின் அதிகளவுக்கு தாக்கமான பயன்பாட்டினை எடுத்து வரும் பொருட்டு பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவ முறை படிப்படியாக அறிமுகம் செய்து வைக்கப்படும். அடுத்து வரும் வருடங்களின் போது தரவிருத்திக்கென வழங்கப்படும் நிதிகளின் அளவு அதிகரிக்கப்படும்.

ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போல தொழில்நுட்ப மற்றும் தொழில்கல்வி பயிற்சி, பல்கலைக்கழகக் கல்வி ஆகிய துறைகளில் சீர்திருத்தங்களை திட்டமிடுவதற்கும் அறிமுகம் செய்து வைப்பதற்குமென இரு செயலணிகள் செயற்பட்டு வருகின்றன. இந்த பிரதான துறைகள் இரண்டும் நாட்டின் தேவைகளை நிறைவு செய்து வைக்கக் கூடிய விதத்தில் பாரிய சீர்திருத்த செயன்முறையொன்றுக்கு உட்படுத்தப்படும். பல்கலைக்கழகத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் குறிப்பாக தனியார் துறையில் காணப்படும் தொழில் வாய்ப்புக்களுடன் ஒரு நெருக்கமான பிணைப்பினை உருவாக்கிக் கொள்ளல், நவீன கைத்தொழில்களுக்கு பொருத்தக் கூடிய விதத்தில் புத்தாக்கப் பயிற்சி மற்றும் பயிற்சி என்ப வற்றை பெற்றுக் கொள்வதற்கு ஊக்குவிப்புக்களையும் மூலவளங்களையும் வழங்குதல், ஊழியச் சந்தைத் தகவல் மற்றும் போக்குகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை என்பன இது தொடர்பாக உடனடிக் கவனத்தைப் பெற்று வரும் துறைகளில் சிலவாகும். அடுத்து வரும் வருடங்களின் போது நிறுவன ரீதியான ஏற்பாடுகள் மற்றும் ஆளணி அபிவிருத்தி என்பவற்றின் விரிவாக்கத்துக்கென அதிகளவிலான மூலவளங்கள் ஒதுக்கப்படும். இந்த மூலவளங்களிலிருந்து உச்சமட்ட பயனைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் ஏற்கனவே திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பன துவக்கி வைக்கப்பட்டுள்ளன. தனியார் துறை இந்த நடவடிக்கைகள் அனைத்திலும் முனைப்பான அக்கறை காட்டி வருவது மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயமாகும்.

பேராசிரிய லக்ஷ்மன் ஜயதிலக
தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சீர்திருத்தங்களும் புதிய ஆரம்பக் கல்வி முறையும்

விமல் சியம்பலாகொட
பணிப்பாளர் (ஆரம்பக் கல்வி), தேசிய கல்வி நிறுவகம்

புதிய ஆரம்பக் கல்வி செயன்முறை 3 கட்டங்களைக் கொண்ட ஒரு கட்டமைப்பைக் கொண்டுள்ளதுடன், அது ஆரம்ப பாடசாலையின் தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரையிலான வகுப்புக்களை உள்ளடக்குகின்றது. அந்த கட்டமைப்புக்கு ஏற்ற விதத்தில் பாடத்திட்டங்களும் நிகழ்ச்சித் திட்டங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன.

தரம் 1 மற்றும் 2 என்பன முதல் முக்கிய கட்டமாக இனங் காணப்பட்டுள்ளன. தரம் 3 மற்றும் என்பன இரண்டாவது கட்டமாக இருந்து வருவதுடன், தரம் 5 மூன்றாவது கட்டமாக உள்ளது. இதற்கமைய இந்த ஒவ்வொரு கட்டத்துக்கும் பொருத்தமான பாடத்திட்டமும் போதனா முறைகளும் விசேஷ நிகழ்ச்சித் திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. இந்த வகைப்படுத்தல் பாடவிதான அபிவிருத்தி, ஆசிரியர் பயிற்சி மற்றும் கல்வி, விசேஷ செய்திட்டங்களின் துவக்கம் என்பவற்றுக்கு வசதி செய்து கொள்வதுடன் முகாமைத்துவத் தேவைகளையும் நிறைவு செய்து வைக்கின்றது.

புதிய கல்விச் சீர்திருத்தங்களின் அறிமுகத்தை அடுத்து தற்போதைய பாடத்திட்டத்தில் கணிசமான அளவிலான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. புதிய பாடத்திட்டம் குறிப்பிட்ட ஒரு குறிக்கோளுடன் வகுக்கப்பட்டுள்ளது. இது பிள்ளையை மையமாகக் கொண்ட ஒரு பாடத்திட்டத்தை அறிமுகம் செய்து வைக்கும் குறிக்கோளைக் கொண்டிருப்பதுடன் அறிவு, திறன்கள், மனப்பாங்குகள் என்பவற்றை அது ஒரு சேர்க்கையாக கொண்டுள்ளது.

தேசிய கல்வி ஆணைக்குழு பிள்ளைகளிடையே அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய ஐந்து தொகுதி தேர்ச்சிகளை முன்மொழிந்துள்ளது. அவை தகவல் தொடர்பாடல், சுற்றாடல், அறநெறி மற்றும் சமயம், விளையாட்டு மற்றும் ஓய்வு கல்வி பயிலுதல் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட தேர்ச்சிகளாக உள்ளன. ஆரம்பக் கல்விப் பாடத்திட்டம் பிள்ளைகளிடையே இந்தத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்வதற்கான ஓர் அடிப்படையை வழங்குகின்றது.

தாய்மொழி (சிங்களம்/தமிழ்), இரண்டாவது தேசிய மொழி (ஆங்கிலம்/சிங்களம்) மற்றும் கணிதத்துடன் இணைந்த விதத்தில் தொடர்பாடலுடன் சம்பந்தப்பட்ட தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் விஷயத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிள்ளையும் தனது தாய் மொழியை சரியாகவும் விரைவாகவும் பயன்படுத்துவதற்குத் தேவையான தேர்ச்சிகளை வழங்கும் குறிக்கோளுடன் தாய்மொழி தொடர்பான பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் சிந்தித்தல், செவிமடுத்தல், தெளிவாக கிரகித்தல், தவறின்றி சரளமாக எழுதுதல் மற்றும் ஆளிடை தொடர்பாடல் தேர்ச்சிகள் என்பன அபிவிருத்தி செய்யப்படும். இக் குறிக்கோள்களை சாதித்துக் கொள்ளும் பொருட்டு பாடப்புத்தகங்கள் வேலைப் புத்தகங்கள், வழிகாட்டு நூல்கள் என்பன உருவாக்கப்பட்டுள்ளன.

இதுவரையில் ஆங்கிலக் கல்வி 2 ம் 3 ஆம் தரங்களில் ஆரம்பக்கப்பட்டு வந்துள்ளது. மீளமைக்கப்பட்ட புதிய முறையின் கீழ் தரம் ஒன்றில் செயல்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட வாய்மொழி மூல ஆங்கில போதனா முறையொன்று அறிமுகம் செய்து வைக்கப்படும். வகுப்புக்கு பொறுப்பான ஆசிரியர் இந் நிகழ்ச்சித்திட்டத்துக்கு பொறுப்பாக இருப்பதுடன், அது சுற்றாடல் தொடர்பான கருப்பொருள்களை அடிப்படையாக கொண்டிருக்கும். இந்த ஆங்கிலக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் என்பன பிள்ளையின் உடனடிச் சுற்றாடலுடன் சம்பந்தப்பட்ட விதத்தில் சொற்பிரயோகங்களை அறிமுகம் செய்து வைப்பதன் மூலம் பிள்ளைகளின் அறிவை வளர்ப்பதும் அவர்கள் முறையாக ஆங்கிலத்தைப் படிப்பதற்கான அத்திவாரத்தை இடுவதுமாகும். மேலும் எளிய ஆங்கில வார்த்தைகளை கிரகித்துக் கொள்வதற்கும் பேசுவதற்குமான பிள்ளையின் ஆற்றலை விருத்தி செய்வதும் அதன் நோக்கமாகும். இது ஆங்கில மொழி, வாசிப்பு மற்றும் எழுத்து என்பவற்றுடன் இணைக்கப்பட மாட்டாது. இது வாய்மொழி மூலமான ஒரு செயல்பாடாகும். மொழியை செவிமடுத்தல், பேசுதல் என்பவற்றுடன் அது சம்பந்தப்பட்டுள்ளது. பிள்ளைகளின் ஆங்கில வார்த்தைப் பிரயோகங்களின் அபிவிருத்தி குறித்து ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுவதுடன் "சுற்றாடலுடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள்" என்ற தலைப்பின் கீழ் மொழியை உபயோகிப்பதற்கு பிள்ளைகளுக்கு எவ்வாறு வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுக்க முடியும் என்பது குறித்தும் அவர்களுக்கு விளக்கமளிக்கப்படும். இந் நோக்கத்துக்கென ஆசிரியர்களுக்கு ஒரு விசேஷ கைநூல் வழங்கப்படும்.

தேசிய ஒருங்கிணைப்பு, தேசிய நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒருமைப் பாட்டை கட்டியெழுப்புதல் ஆகிய குறிக்கோள்களை சாதித்துக்கொள்ளும் பொருட்டு பெருந்தொகையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சிங்களத்தைத் தாய் மொழியாக கொண்டிருக்கும் பிள்ளைகளுக்கு தமிழ் மொழியைப் போதித்தல், தமிழை தாய் மொழியாக கொண்டிருக்கும் பிள்ளைகளுக்கு சிங்கள மொழியைப் போதித்தல் நடவடிக்கைக்கு இச் செயன்முறையின் போது உயர் முன்னுரிமை அளிக்கப்படும். இது பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு என்பவற்றுக்கு அவசியமான தொடர்பாடல் திறன்களை அபிவிருத்தி செய்வதற்கு பங்களிப்புச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித் திட்டம் தரம் 3 இல் ஆரம்பிக்கப்படும்.

புதிய நிகழ்ச்சித்திட்டம் கவனத்தில் எடுக்கும் மற்றொரு துறை கணிதமாகும். இந்நோக்கத்துக்கென பல்வேறு பாடத் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன. கணித பாடம் மாணவர்களுக்கு விருப் பூட்டுவதற்குப் பதிலாக மகிழ்ச்சியுடன் அதனை கற்றுக்கொள்ளும் ஒரு வாய்ப்பினை வழங்குவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். தேசிய கல்வி நிறுவகத்தினால் வழங்கப்பட்டுள்ள ஒரு சில வழிகாட்டு நெறிமுறைகள் ஏற்கனவே வகுப்பறையில் பின்பற்றப்பட்டு வருகின்றன. பிள்ளைகளுக்கு கணித கருதுகோள்களை சொல்லிக் கொடுப்பதிலும் அவர்களிடையே கணிதத் திறன்களை வளர்ப்பதிலும் திட்டமிட்ட விளையாட்டுக்கள் மற்றும் களிப்பூட்டக்கூடிய நடவடிக்கைகள் என்பவற்றை எவ்வாறு உபயோகித்துக் கொள்ள முடியும் என்பது குறித்து ஆசிரியர் வழிகாட்டு நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன. இது தவிர வர்ணத்தில் அச்சடிக்கப்பட்டுள்ள உயர் தரம் வாய்ந்த வேலைப் புத்தகம் ஒன்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 1 இல் அறிமுகம் செய்து வைக்கப் பட்டுள்ளது. தரம் 2 க்கும் இவ்வாறான ஒரு வேலைப் புத்தகம் ஒன்றை வழங்கு வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வேலைப் புத்தகங்கள் ஆசிரியர்களால் வழங்கப்படும் வீட்டு வேலைகளைக் குறைக்கும் அதே வேளையில் சிறுவர்களிடையே கணிதத் திறன்களை அபிவிருத்தி செய்வதற்கு ஊக்குவிப்பினை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது பாடசாலைப் பிள்ளைகள் அனைவருக்கும் இலவசமாக வழங்கப் படுகின்றது. அதன் காரணமாக "அனைவருக்கும் கல்வி" என்ற குறிக்கோளைச் சாதித்துக் கொள்வதற்கு அது உதவும். இது தவிர தரம் 3 மற்றும் அதற்கு மேற்பட்ட தரங்கள் என்பவற்றுக்கும் உயர் தரம் வாய்ந்த கணிதப் புத்தகங்களின் தொடரொன்று வெளியிடப்படும். மேலும் தரம் 1 மற்றும் 2 என்பவற்றிலுள்ள ஆசிரியர்களுக்கு மூலாதார புத்தகங்கள் வழங்கப்படுவதுடன் தரம் 3 ஆசிரியர்களுக்கு விசேட கை நூல்கள் வழங்கப்படும்.

"சுற்றாடலுடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள்" என்ற பெயரிலான ஒரு புதிய பாடம் ஆரம்பப் பாடசாலைப் பாடத்திட்டத்தில் அறிமுகம் செய்து வைக்கப்படும். இதன் அறிமுகத்துடன் தரம் 4 இல் அறிமுகம் செய்து வைக்கப் பட்டுள்ள தற்போதைய பாடங்களான உடல் கல்வி, ஆக்க பூர்வமான நடவடிக்கைகள், அழகியல், சுற்றாடலும் நாமும் மற்றும் ஆரம்ப விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் பாடத்திட்டத்திலிருந்து நீக்கப்படும். இந்தப் புதிய பாடம் பிள்ளையின் சுற்றாடலுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு விடயங்களையும் உள்ளடக்குகின்றது. முதல் கட்டம் 16 தலைப்புக்களையும், 2ஆம் கட்டம் 3ஆம் கட்டம் 15 தலைப்புக்களையும் கொண்டுள்ளன. பிள்ளைகளின் சமூகச் சூழல், வாழிடச் சூழல் மற்றும் பௌதீக சூழல் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட தேர்ச்சிகளை பிள்ளைகளிடையே அபிவிருத்தி செய்து வைக்க வேண்டுமென தேசிய கல்வி நிறுவனம் கருதியுள்ளது. உணர்வுகள், பௌதீக மற்றும் உளவியல் திறன்கள், நல்ல ஆரோக்கிய நிலை மற்றும் போசாக்கு என்பவற்றை பராமரிப்பதற்குத் தேவையான அறிவு, அழகியல் மற்றும் ஓய்வு நேர நடவடிக்கைகளின் அபிவிருத்தி, அறிவியல் ரீதியான சிந்தனையை ஊக்குவித்தல் என்பன இப்பாடத்தின் குறிக்கோள்களாகும். இந் நடவடிக்கைகள் விசாரணை மற்றும் ஆய்வுத் திறன்களை கூர்மைப்படுத்திக் கொள்வதற்கும் உபகரணங்களைப் பயன்படுத்தல், குறிப்புக்கள் மற்றும் ஆவணங்கள் என்பவற்றைப் பராமரித்தல் என்பவற்றுக்கும் உதவும். மேலும், இது உயிர் பகன்முகத்தன்மை, காலநிலை மாற்றங்களில் சூழல் எடுத்து வரும் தாக்கம் என்பன குறித்து பிள்ளைகளிடையே ஒரு விழிப்புணர்வைத் தூண்டுவதற்கும் உதவும். இதன் கீழ் பிள்ளைகளுக்கு பரந்த அளவிலான பயிலல் அனுபவங் கள் வழங்கப்படும்.

தேசிய கல்வி ஆணைக் குழுவினால் அறிமுகம் செய்துவைக்கப்பட்டுள்ள 5 அடிப்படை தேர்ச்சிகளை நிறைவு செய்து வைக்கும் நோக்கத்துடன் ஆரம்பக் கல்வியில் சமயங்கள் தொடர்பான பாடத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. பிள்ளைகள் சமயச் சடங்குகள், நடைமுறைகள், அன்றாட வழக்காறுகள் என்பவற்றை பொருத்தமான விதத்தில் பின்பற்று வதற்கு உதவக் கூடிய வகையில் அவர்களிடையே விழுமியங்களை உருவாக்கும் நோக்கத்துடன் இப்பாடத்திட்டம் தயாரிக் கப்பட்டுள்ளது. இந்த புதிய நிகழ்ச்சித் திட்டம் எமது பாடசாலை அமைப்பின் கற்பித்தல் - கற்றல் செயன் முறையில் தெளிவான ஒரு மாற்றத்தை எடுத்து வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அனைத்துச் சமயங்களையும் சேர்ந்த சிறுவர்களின் உபயோகத்துக்கென வண்ணத்தில் அச்சடிக்கப்பட்ட பல நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. சமயங்களைப் போதிப்பதற்கான ஒரே ஒரு வழிமுறை பாடப் புத்தகங்களை படிப்பதன்றி சமய சடங்குகளையும் விழுமியங்களையும் பின் பற்றுவதாகும் என்ற அடிப்படையிலேயே இந்த நூல்கள் தயாரிக்கப் பட்டுள்ளன. தர ரீதியான அம்சத்தைக் கொண்ட இந்தப் பாடத்திட்டத்தை நாடெங்கிலுமுள்ள பாடசாலைகளில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நோக்கத்துக்கென அனைவருக்கும் கல்வி என்ற கருதுகோளை பயனுள்ளதாக்கும் விதத்தில் ஏற்றத் தாழ்வற்ற ஆரம்பக் கல்வி முறையொன்று உருவாக்கப்படுவது அவசியமாகும். தரம் 1 இல் சேரும் அனைத்து மாணவர்களுக்கும் இடைநிலைக் கல்வி மட்டம் வரையில் கல்வியை வழங்குவதனை அது நோக்கமாகக் கொண்டுள்ளது. பிள்ளைகளிடையே கல்வி தொடர்பான ஆர்வத்தை உருவாக்கி நிலை நிறுத்துவதிலும் ஒவ்வொருவரும் ஆர்வம் கொண்டுள்ள துறைகளில் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்களை நெறிப்படுத்துவதிலும் அனைத்து ஆசிரியர்களும் ஒரு பொறுப்பினையும் கடப்பாட்டினையும் கொண்டுள்ளனர். இக்குறிக்கோள்களைச் சாதித்துக் கொள்வதற்கென பெருந் தொகையான நடவடிக்கைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

தரம் 1 இல் கல்வியில் சேரும் பிள்ளைகள் வேறுபட்ட அளவிலான ஆற்றல்களைக் கொண்டிருப்பதுடன், வேறுபட்ட பின்னணிகளிலிருந்தும் வீட்டுச் சூழல்களிலிருந்தும் வருகின்றார்கள். தரம் 1 இல் பாடசாலைக்குச் சேரும் பிள்ளைகளின் ஆற்றல்கள் குறித்து 1988 இல் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு அப்பிள்ளைகள் வேறுபட்ட அளவிலான தேர்ச்சிகளையும் ஆற்றல்களையும் கொண்டிருப்பதனை எடுத்துக் காட்டியிருந்தது. அவை பின்வருமாறு: தரம் ஒன்று பாடத்திட்டத்தை படிக்க முடியாதவர்கள் 8%; தரம் 1 பாடத்திட்டத்தை படிப்பதற்கு விசேஷ உதவி தேவைப்படுபவர்கள் 22%; தரம் 1 பாடத்திட்டத்தை படிக்கும் ஆற்றலை கொண்டிருப்பவர்கள் 62%; தரம் 2 பாடத்திட்டத்தை படிக்கக்கூடிய ஆற்றலைப் பெற்றிருப்பவர்கள் 7.5%. பிள்ளைகளின் செயற்பாடு மற்றும் ஆற்றல் என்பவற்றில் இத்தகைய வேறுபாடுகள் இருந்து வருகின்றன என்பதனை அங்கீகரிப்பது அவசியமாகும். மேலும், அனைத்துச் சிறுவர்களது கல்வியைத் தொடருவதற்கு வகை செய்யும் விதத்தில் இடையூறுகளை களைவதற்கு என மாற்று உபாயங்கள் வகுக்கப்படுதல் வேண்டும். எனவே, ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித் திட்டத்துக்குள் ஆசிரியர்களிடையே விழிப்புணர்வை உருவாக்குதல் இலங்கையின் கல்வி வரலாற்றில் ஒரு புத்தாக்கமாக இருந்து வருகின்றது எனக் கருத முடியும்.

"பிள்ளைகளை இனங்காணுதல்" என்ற தலைப்பிலான நிகழ்ச்சித் திட்டம் இந்த முயற்சி தொடர்பான முதல் நடவடிக்கையாகும். தரம் ஒன்றுக்கு புதிதாக சேர்த்துக் கொள்ளப்படும் பிள்ளைகள் தொடர்பான ஆரம்ப விளையாட்டு நடவடிக்கைகள் 14 விடயங்களைக் கொண்டுள்ளன. இதன் நோக்கம் பிள்ளை தனது சூழலில் சிரமமின்றி இருப்பதற்கு உதவுவதும், தனது ஆசிரியருடன் ஒரு நல்லுறவைக் கட்டியெழுப்பிக் கொள்வதற்கு உதவுவதுமாகும். ஆரம்பத்தில் தயக்கத்துடன் பாடசாலைக்கு வரும் பிள்ளையும் கூட படிப்படியாக தனது தயக்கத்தைப் போக்கி, பாடசாலைக்குச் சமூகமளிப்பதில் விருப்பம் காட்டும் ஒரு மனநிலையை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளையில், இந்த விளையாட்டு நடவடிக்கைகள் பிள்ளையின் பல்வேறு ஆற்றல்களையும் ஆசிரியர் அறிந்து கொள்வதற்கான ஒரு வாய்ப்பினை வழங்குகின்றன. இந்த நிலைமையில் பிள்ளைகள் கெட்டிக்கார பிள்ளைகள் அல்லது மந்தமான பிள்ளைகள் என்றோ ஆற்றல் மிக்க பிள்ளைகள் அல்லது ஆற்றல் இல்லாத பிள்ளைகள் என்றோ வகைப்படுத்தப் படுவதில்லை. பிள்ளைகளின் வேறுபட்ட திறன்களை அங்கீகரிப்பது மட்டுமே இங்கு இடம் பெறுகிறது. மேலும், பிள்ளையின் குடும்பப் பின்னணியை ஆசிரியர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கண்டறிந்து கொள்வதற்கும் இது வாய்ப்பினை அளிக்கின்றது. எனவே, பிள்ளைகளை அடையாளம் கண்டு கொள்ளும் நிகழ்ச்சித்திட்டங்கள், ஆசிரியர்கள் அவர்களை மதிப்பிட்டுக் கொள்வதற்கும் வருங்கால கல்வியில் அவர்களுக்கு உதவுவதற்கும் வாய்ப்பளிப்பதுடன், பிள்ளைகளை மனிதாபிமான முறையில் நோக்குவதற்கும் அவர்களுக்கு ஒரு வாய்ப்பினை அளிக்கின்றது.

தரம் ஒன்றில் பாடசாலையில் சேர்ந்து கொள்ளும் பிள்ளைகளின் வேறுபட்ட ஆற்றல்களைக் கண்டறிந்து அவற்றுக்கேற்ப அவர்களுக்கு கல்வியை வழங்குவதற்கென ஒரு புதிய போதனா முறை அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கருதுகோளின் கீழ் 3 அம்சங்களின் மீது கவனம் செலுத்தப்படுகின்றன:

1. திட்டமிட்ட விளையாட்டு நடவடிக்கைகளும் களிப்புடன் செய்யக்கூடிய வேலையும்.

2. நடவடிக்கைகள்.

3. மேசை வேலை.

தரம் 1 இல் புத்தகப் படிப்பிலும் பார்க்க திட்டமிடப்பட்ட விளையாட்டு நடவடிக்கைகள் மற்றும் களிப்புடன் செய்யக்கூடிய வேலைகள் என்பவற்றின் மீது அதிக அளவுக்கு கவனம் செலுத்தப்பட்டு வருவதனை அவதானிக்க முடிகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆசிரியர் குறிப்பிட்ட ஒரு பாடத்தில் பிள்ளையின் அறிவு, ஆற்றல்கள் மற்றும் மனப்பாங்குகள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கு முயற்சிக்கும் அதே வேளையில், அந்த பாடத்துடன் சம்பந்தப்பட்ட தேர்ச்சிகளையும் உள்ளடக்கும். திட்டமிட்ட விளையாட்டு நடவடிக்கைகளுக்கூடாக அது அறிமுகம் செய்து வைக்கப்படும். எனவே, பிள்ளைகள் விளையாட்டில் ஈடுபடுத்தப்படுவார்கள். அத்தகைய விளையாட்டு நடவடிக்கைகளில் அனைத்துப் பிள்ளைகளும் விருப்பத்துடன் பங்கேற்பார்கள். அத்தகைய நடவடிக்கைகளின் முடிவின் போது பிள்ளைகள் தேவைப்படும் சாதனை மட்டங்களை எட்டியிருப்பார்கள். குறிப்பிட்ட பாடத்தில் தமக்கு ஒரு பாடம் போதிக்கப்பட்டுள்ளது என்பதனை அப்பிள்ளைகள் அறிய மாட்டார்கள். அவர்கள் தமக்கு மகிழ்ச்சி தரக்கூடிய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார்கள். இதன் காரணமாகவே தரம் 1 இல் பிள்ளையை மையமாகக் கொண்ட விதத்தில் திட்டமிட்ட விளையாட்டு மற்றும் களிப்பூட்டக்கூடிய நடவடிக்கைகள் என்பவற்றுக்கூடாக கல்வி போதிக்கப்படுகின்றது. இந்த நிலையில், வகுப்பறையில் சுமுகமான விருப்பத்தக்க ஒரு சூழல் உருவாக்கப்படுவதுடன், அதன் விளைவாக பிள்ளைகள் பாடசாலைக்குச் சமூகமளிப்பதில் அதிகளவுக்கு ஆர்வம் காட்டுவார்கள். இந்த திட்டமிடப்பட்ட விளையாட்டு நடவடிக்கைகளுக்கூடாக பிள்ளைகள் பாடசாலையுடன் தம்மை இணைத்துக் கொள்வதுடன், சுய கட்டுப்பாடு மற்றும் ஆளிடைத் தொடர்புகள் என்பவற்றை அபிவிருத்தி செய்து சமூக நெறிமுறைகள், ஒழுங்கு விதிகள் என்பவற்றை மதிக்கின்றனர். மேலும், அவர்கள் தர்க்க ரீதியில் சிந்திப்பதுடன் பல்வேறு வழிகளிலும் தமது ஆளுமையை வளர்த்துக் கொள்கின்றார்கள். ஆரம்பக் கல்வியின் 3 முக்கிய கட்டங்களிலும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டிருக்கும் மற்றொரு முக்கிய அம்சம் தேர்ச்சிகளை கட்டாயமாக பயில்வதாகும். இதன் பிரகாரம் ஆசிரியர், வகுப்பிலுள்ள அனைத்துப் பிள்ளைகளுக்கும் இத்தேர்ச்சிகளை வழங்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அனைவருக்கும் கல்வி என்ற உலகளாவிய குறிக்கோளை சாதித்துக் கொள்வதற்கான அர்ப்பணிப்புணர்வினை இது எடுத்துக் காட்டுகின்றது.

கற்றலின் அடுத்த முக்கிய கட்டத்துக்கு செல்வதற்கென ஒரு மாணவன் வைத்திருக்க வேண்டிய திறன்கள் அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளாக கருதப்படுகின்றன. அத்தகைய தேர்ச்சிகளை மாணவர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு ஆசிரியருக்குள்ளது. இதனை சாதித்துக் கொள்ளும் பொருட்டு, முதல் முக்கிய கட்டத்திலிருக்கும் பிள்ளைகளின் அபிவிருத்தியை ஓர் ஆசிரியரின் பொறுப்பின் கீழ் விடும் அதிகாரம் அப்பாடசாலையின் அதிபருக்குள்ளது. இதன் பிரகாரம் தரம் ஒன்றில் இருக்கும் பிள்ளைகளுக்கு அத்தியாவசியமானவையென அத்தகைய 40 தேர்ச்சிகள் இனங்காணப்பட்டுள்ளன.

எனவே, ஆரம்பக்கல்விக் காலத்தின் போது பிள்ளைகள் குறித்துரைக்கப்பட்ட அடிப்படைத் தேர்ச்சிகளை பெற்றிருக்கிறார்கள் என்பதனை உறுதி செய்து கொள்ளக்கூடிய வாய்ப்பு இதன் மூலம் கிட்டுகின்றது. இக்கருதுகோள் இலங்கையின் கல்வி வரலாற்றில் ஒரு புது யுகத்துக்கு வழிகோலியுள்ளதுடன், அது ஆரம்பக் கல்வியில் ஒரு தரரீதியான விருத்தி நிலையையும் எடுத்து வரும். பாடத்திட்டத்தின் பிரகாரம் கற்க முடியாதிருக்கும் காரணத்தினால் பாடசாலையை விட்டுச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையிலும் இது ஒரு குறைவினை எடுத்து வரும். இக்கருதுகோள்களை எடுத்து விளக்கும் ஒரு கைநூல் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும். அவர்களுக்கு விசேஷ பயிற்சி நெறியொன்றும் வழங்கப்படும்.

புதிய ஆரம்பக் கல்வி முறையை நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் ஒரே விதத்தில் அமுல் செய்வதற்கென நாடளாவிய ரீதியில் ஒரு நிகழ்ச்சித்திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. தேசிய கல்வி நிறுவகம் சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலமான பிரதி / உதவி கல்விப் பணிப்பாளர்களுக்கும் ஆரம்பக் கல்வி சேவைக் கால ஆலோசகர்களுக்கும் இதுவரையில் தரம் 1 மற்றும் தரம் 2 நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக 15 ஒரு நாள் பயிற்சித் திட்டங்களை நடத்தியுள்ளது. எனவே, இந்நிகழ்ச்சித்திட்டத்தை அமுல் செய்வதற்கு தலைமைத்துவம் வழங்கும் மாகாண மற்றும் வலய ஏற்பாட்டாளர்களுக்கு மிகவும் விரிவான முறையில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. கல்விப் பிரிவுகளுக்குப் பொறுப்பாக இருந்து வரும் அனைத்துக் கல்வி அதிகாரிகளும் குறைந்தது ஒரு நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்றுள்ளனர். வலய மட்டத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றில் அனைத்து பிரதி / உதவிக் கல்விப் பணிப்பாளர்களும் ஏனைய பாடங்களுக்கான சேவைக்கால ஆலோசகர்களும் பங்கேற்றனர். தரம் 1 இல் கல்வி போதிக்கும் சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலமான ஆசிரியர்கள் அனைவருக்கும் 6 நாள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலத்தில் கிராமப் பிரதேசங்களைச் சேர்ந்த பிள்ளைகள் அதிகரித்த அளவில் நகர்ப்புறங்களைச் சேர்ந்த பிரபல்யமான பாடசாலைகளில் சேர்ந்து வருகின்றனர். இதற்கு ஒரு காரணம் கிராமப் பாடசாலைகளில் வழங்கப்பட்டு வரும் கல்வியின் தரம் தொடர்பாக ஒரு நம்பிக்கையீனம் நிலவி வருவதாகும். தமது பிள்ளைகளை நகர்ப்புறப் பாடசாலைகளில் சேர்த்துவிடும் அபிலாஷை இவ்விதம் தொடர்ந்து நிலவி வருமேயானால் அதன் விளைவாக கிராமப் புறப் பாடசாலைகளை மூடிவிடக்கூடிய ஒரு நிலையும், அப்பாடசாலைகளில் காணப்படும் வளங்கள் குறைந்த மட்டத்தில் பாவிக்கப்படும் ஒரு நிலையும் தோன்ற முடியும். மேலும், தமது பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அழைத்துச் செல்லும் தாய்மார் மீண்டும் அவர்களை வீட்டுக்கு அழைத்துச் செல்வதற்கென அங்கேயே தரித்து நிற்கின்றார்கள். இது நேரத்தை வீண் விரயம் செய்வதாகவே உள்ளது. அவர்கள் இந்த நேரத்தை வீட்டுப் பொருளா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு பயன் படுத்திக் கொள்ள முடியும்.

தரம் 1 க்கு பொறுப்பான அனைத்து ஆசிரியர்களும் தகவல்களையும் அனுப வங்களையும் பரிமாறிக் கொள்வதற்கு மாதத்துக்கு ஒரு முறை ஒன்று கூடுவதன் மூலம் அடுத்து வரும் மாதத்துக்கான திட்டங்களை வகுத்துக் கொள்ள முடியும். ஆரம்பக் கல்விக்கு பொறுப்பாக இருந்து வரும் பிரதி / உதவி கல்விப் பணிப் பாளர்களும் ஆரம்பக் கல்விக்கான சேவைக்கால ஆலோசகர்களும் இதற்கு தலைமைத்துவம் வழங்குவார்கள். இதன் பிரகாரம் ஒரு கல்விப் பிரிவைச் சேர்ந்த அனைத்துப் பாடசாலைகளும் குறிப்பிட்ட ஒரு திட்டத்துக்கும் தர நிர்ணயத்துக்கும் ஏற்ற விதத்தில் ஒரே சீராக செயற்பாடு களை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

பாடசாலைக் குடும்பங்கள் என்ற தலைப்பிலான ஒரு நிகழ்ச்சித் திட்டமும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் புவியியல் ரீதியில் ஒன்றுக்கொன்று அருகருகே அமர்ந்திருக் கும் 5–7 பாடசாலைகள் தம்மை அபி விருத்தி செய்து கொள்வதற்கென ஒன் றாக இணைந்து ஒரு குடும்பமாக செயற் படுகின்றன. அனைத்துப் பாடசாலை களிலும், தர நிர்ணயங்களை வகுத்துக் கொள்வதற்கும் இது உதவுகின்றது. ஆரம்பக் கல்வியின் முக்கிய கட்டம் ஒன் றில் கல்வி பயின்று வரும் பிள்ளை களாலும் தரம் 6 இல் கல்வி பயிலும் பிள்ளைகளாலும் ஒரு வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை இந்த இரு தொகுதி மாணவர்களுக்கும் இடையிலான ஓர் இடைத் தொடர்பாக கருத முடியும். தரம் 1 இல் கல்வி பயி லும் பிள்ளைகளின் திறன்களை அபி விருத்தி செய்வதும், தரம் 6 ல் கல்வி பயிலும் பிள்ளைகளின் தலைமைத்துவ ஆற்றல்களை அபிவிருத்தி செய்வதும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள் களாகும். ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மதிப்பீட்டுக் கூறு ஒன் றையும் உள்ளடக்குகின்றது.

ஆரம்பக் கல்வி மாணவர்களை ஸ்தானம் 1, ஸ்தானம் 2 என வரிசைப் படுத்துவதற்குப் பதிலாக அல்லது பெற் றிருக்கும் புள்ளிகளின் அடிப்படையில் சித்தி அல்லது சித்தியின்மை என்பவற்றை தீர்மானிப்பதற்குப் பதிலாக தேர்ச்சிகளின் அடிப்படையில் ஒரு மதிப்பீடு மேற் கொள்ளப்படுகிறது. இங்கு குறிப்பிட்ட பிள்ளையை சரிவர கண்டறிவதற்கென அதன் ஆற்றல்களும் பலவீனங்களும் இனங்காணப்படுகின்றன. இனங்காணப் பட்டுள்ள பலவீனங்களை நிவர்த்தி செய் வதற்கும் அத்தகைய பிள்ளைகளை எதிர் பார்க்கப்படும் தரத்துக்கு எடுத்து வரு வதற்குமென ஆசிரியர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென எதிர் பார்க்கப்படுகின்றது.

மாணவர்கள் குழு செயற்பாடு களில் ஈடுபட்டிருக்கும் பொழுதும் தமக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செயல்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் பொழுதும் ஒவ்வொரு வரும் தனித்தனியாக செயல்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் பொழுதும் ஒவ்வொரு மாணவர் தொடர்பாகவும் சிறப்புக் கவனம் செலுத்துவது சாத்தியமாகும். ஒப்படைகள் மற்றும் வீட்டு வேலைகள் என்பவற்றுக்கு புள்ளிகளை வழங்குதல், மாணவர்களுடன் சம்பாஷித்தல், வாய் மூலம் கேள்விகளைக் கேட்டல், மாணவர் களுக்கு செவிமடுத்தல். அவர்கள் சமர்ப் பிக்கும் விடயங்களை மதிப்பீடு செய்தல், அவர்களுடைய ஆக்கத்திறன் வேலை களை பரிசீலனை செய்தல் போன்ற முறைசாராத முறைகள் மூலமும் மதிப் பீடுகளை மேற்கொள்ள முடியும். எழுத்து மூலமான கேள்விகள் மற்றும் பதில்கள் என்பவற்றுக்கூடாக மாணவர்களை பரீட் சித்துப் பார்க்கும் பாரம்பரிய முறையைப் பின்பற்றாது முறைசாராத மதிப்பீட்டு முறையொன்று பின்பற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய முறையின் கீழ் நடு ஆண்டுப் பரீட்சைகள் மற்றும் தவணை முடிவுப் பரீட்சைகள் என்பன நடத்தப்படமாட்டா.

அறிமுகம் செய்து வைக்கப்பட் டுள்ள மதிப்பீட்டு முறை மாணவர்களின் ஆற்றல்கள் தொடர்பாகவும் பலவீனங் கள் தொடர்பாகவும் தொடர்ச்சியாக தக வல்களை திரட்டும். இம்முறையின் கீழ் மாணவர்களிடையே ஒப்பீடுகள் மேற் கொள்ளப்பட மாட்டாது. இந்த புதிய மதிப்பீட்டு முறை ஒரு பிள்ளையின் கல்வியின் தர ரீதியான அம்சங்களை அபிவிருத்தி செய்வதுடன், அனைவருக் கும் கல்வி என்ற கருதுகோளை சாத்திய மாக்கும்.

இந்த சீர்திருத்தத்தின் மற்றொரு முக்கிய அம்சம் நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் ஆரம்பக் கல்வி பயிலும் பிள்ளைகளுக்கென பொருத்த மான வகுப்பறையொன்றை அறிமுகம் செய்து வைப்பதாகும். அது சராசரியாக ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு வர்க்க மீற்றர் இடத்தை வழங்குகின்றது. அது சுற்றிலும் மூடப்பட்டிருப்பதுடன் பாது காப்பானதாகவும் இருந்து வரும். அதே போல கரும்பலகை ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் உபயோகிக்கப்படக் கூடிய விதத்தில் தாழ்ந்த மட்டத்தில் வைக்கப்பட்டிருக்கும். பிள்ளைகளினால் உருவாக்கப்படும் பொருட்களை காட் சிக்கு வைக்கக் கூடிய இடங்களையும் அந்த வகுப்பறை கொண்டிருக்கும். அது பிள்ளைகள் ஆக்கபூர்வமான செயற் பாடுகளில் ஈடுபடுவதற்கு தூண்டுதல் அளிக்கின்றது. வேலை மேசை புதிய வகுப்பறையின் மற்றொரு புதுமை அம்ச மாகும். அது நீர்குழாய் ஒன்றையும் கொண்டிருக்கும். இது பிள்ளைகள் ஆக்கபூர்வமான வேலைகளில் ஈடுபடு வதற்கும் சமூகத் தீர்ச்சிகளை அபிவிருத்தி செய்து கொள்வதற்கும் உதவும். முக்கிய கட்டங்கள் 2 மற்றும் 3 என்பவற்றின் போது வகுப்பறைகளில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். புதிய வகுப்பறையை உருவாக்குவதற்கென மத்திய அரசாங்கமும் மாகாண சபையும் பெருந்தொகையான நிதி வளங்களை வழங்கியுள்ளன. பெற்றோரும் நலன் விரும்பிகளும் இந்நடவடிக்கைகளில் பெருமளவுக்கு பங்கேற்றுள்ளனர். மேலும், முக்கிய கட்டம் 1 இல் கல்வி பயிலும் மாணவர்கள் பாய்தல், தொங்கு தல் முதலிய தாம் விரும்பும் நடவடிக்கை களில் ஈடுபடுவதற்கென ஒரு பிரதேச மும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றது. பொதுவாக ஒவ்வொரு பாடசாலையிலும் விளையாட்டு மைதானத்தை சிரேஷ்ட மாணவர்களே பயன்படுத்தி வருகின்றர் கள். இந்தப் புதிய ஏற்பாடு சிறு பிள் ளைகள் தமது விளையாட்டுத் திறன்களை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு பெரு மளவுக்கு உதவும்.

கல்விச் சீர்திருத்தங்களின் அடிப் படைக் குறிக்கோள் பிள்ளையை ஒரு சிறந்த பிரஜையாக உருவாக்குவதாகும். இதற்கென பின்வரும் நடவடிக்கைகளை அமுல் செய்வதற்கு எதிர்பார்க்கப்படு கின்றது:

* சிறந்த தகவல்கள் (தகவல்களை திரட்டல், பிரித்தெடுத்தல், களஞ் சியப்படுத்தல், பகுப்பாய்வு செய் தல் மற்றும் பயன்படுத்துதல்).
* சிறந்த பிரயோக திறன்கள்.
* ஒழுக்கம்.
* பரிவினையும் நற்புணர்வினையும் எடுத்துக் காட்டும் உவப்பான வார்த்தைகளை உபயோகித்தல்.

இந்தக் கல்விச் சீர்திருத்தங்கள் ஒத்துழைப்பு, பரஸ்பர புரிந்துணர்வு, பரஸ்பர கண்ணியம், அனைத்து வேலை களுக்கும் கண்ணியம், அனைத்து ஜீவி களுக்குமிடையிலான இடைத் தொடர் பினை மதித்தல், அடக்கம், கலாசார விழுமியங்களை அங்கீகரித்தல் என்ப வற்றைக் கொண்ட ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பும் குறிக்கோளுடன் முன் வைக்கப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சீர்திருத்தங்களும் இடை நிலைக் கல்வியும்

ரஞ்சித் பத்மசிறி

(நிகழ்ச்சித்திட்டங்கள் பணிப்பாளர், உயர்தரக் கல்வி சீர்திருத்தங்கள்)

நவீன உலகம் மிகத் துரித வேகத்தில் மாற்றங்களை எதிர்கொண்டுள்ளது. இந்த மாற்றங்கள் தனியொரு நாட்டுக்கு மட்டும் அல்லது தனியொரு துறைக்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. உலகமயமாக்கலின் தாக்கத்தை எமது நாடும் கூட உணரத் தொடங்கியுள்ளது. இலங்கை முன்னேற்றத்துக்கான அதன் பயணத்தில் இந்தப் போக்குகளை கவனத்தில் எடுத்து, அவற்றுக்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்த மாற்ற நிகழ்வுப்போக்கில் கல்வி மிகவும் முக்கியமான ஒரு ஸ்தானத்தை பெறுகிறது.

### இலங்கையின் தற்போதைய கல்வி முறை

கல்வித் துறையில் விரிவான ஒரு சீர்திருத்தச் செயன்முறை அமுல் செய்யப்பட்டுவரும் இந்த தருணத்தில் இது வரை காலமும் எமது நாட்டில் நிலவி வந்த கல்வி முறை குறித்து சற்று நோக்குவது பொருத்தமானதாகும். எமது நாட்டில் தேசிய கல்வி அமைப்பொன்றை கட்டியெழுப்பும் நோக்கத்துடன் மறைந்த திரு. சி. டப்ளியு. டப்ளியு. கன்னங்கரா அவர்கள் இலவசக் கல்வியை இங்கு அறிமுகம் செய்து வைத்தார். அந்த நடவடிக்கையின் மூலம் ஒரு புதிய இலங்கைச் சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான அத்திவாரம் இடப்பட்டது. நாட்டின் பல்வேறு பாகங்களில் மத்திய மகா வித்தியாலயங்கள் உருவாக்கப்பட்டதுடன், அவற்றுக் கூடாக நாட்டின் தேவைகளை நிறைவு செய்து வைக்கக் கூடிய கல்வியமைப்பொன்றை எடுத்து வருவதற்கு முயற்சிக்கப்பட்டது. கடந்த 50 வருட காலமாக பாலர் வகுப்பு தொடக்கம் பல்கலைக்கழகம் வரையில் அனைவருக்கும் இலவசக் கல்வி வழங்கப்பட்டு வந்திருப்பதன் விளைவாக பல்வேறு துறைகளிலும் பெருந்தொகையான கல்விமான்களும் விஞ்ஞானிகளும், நிர்வாகிகளும் உருவாக்கப்பட்டுள்ளனர். இலவசக் கல்வியின் மூலம் பயனடைந்த பெருந்தொகையான அறிஞர்கள் தமது ஆற்றல்கள் மூலம் நாட்டின் முன்னேற்றத்துக்கு அரும்பெரும் பங்களிப்புக்களை வழங்கி வந்துள்ளார்கள். எனினும், தற்போதைய கல்வி முறை இன்று மிக வேகமாக மாற்றங்கள் நிகழும் நிலைமைகளுக்கு ஒவ்வாததாக இருந்து வருவது கண்டறியப்பட்டுள்ள நிலையில் அதில் ஓரளவுக்கு வீழ்ச்சி நிலை ஏற்பட்டிருப்பதனை அவதானிக்க முடிகிறது. கல்வியில் தர ரீதியான ஒரு பின்னடைவும் காணப்படுகிறது.

### தேசிய கல்வி ஆணைக்குழு

உறுதியான நிலையான கல்விக் கொள்கையொன்றின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் விதத்தில் அரசாங்கம் 1991 இல் தேசிய கல்வி ஆணைக்குழுவை நிறுவியது. கல்வியின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய விதத்தில் ஒரு கொள்கையை உருவாக்கும் பொறுப்பும் அது தொடர்பாக அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கும் பொறுப்பும் இந்த ஆணைக்குழுவிடம் வழங்கப்பட்டது. இந்த ஆணைக்குழு கடந்த காலத்தில் கல்வியின் பல்வேறு அம்சங்கள் தொடர்பாகவும் பல மதிப்பீட்டாய்வுகளையும் ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டதுடன், பல கல்விமான்களிடமிருந்தும் அறிஞர்களிடமிருந்தும் அந்தந்த விடயங்கள் தொடர்பாக பாண்டித்தியம் பெற்றிருக்கும் நிபுணர்களிடமிருந்தும் ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் கேட்டுப் பெற்றுக் கொண்டது. அவ்விதம் எழுத்து மூலமான கருத்துக்களையும் வாய் மொழி மூலமான சாட்சியங்களையும் பெற்றுக் கொண்ட பின்னர் அது 1992 இல் தனது முதலாவது அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கையில் அது 9 பொதுவான தேசிய குறிக்கோள்களை முன்வைத்திருந்தது. அத்துடன் எதிர்கால முன்னேற்றத்துக்கு அத்திவாரமாக அமையக்கூடிய 5 அடிப்படை தேர்ச்சிகளையும் அது எடுத்து விளக்கியிருந்தது.

புதிய கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் மேலே குறிப்பிடப்பட்ட தேசிய குறிக்கோள்களையும் அடிப்படைத் தேர்ச்சிகளையும் நிறைவு செய்து வைக்கக்கூடிய விதத்தில் புதிய பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் நடுநிலைக் கல்வி மட்டம் 3 பிரதான கட்டங்களாக வகுக்கப்பட்டுள்ளது:

1) கனிஷ்ட இடை நிலைக் கட்டம் - தரம் 6 தொடக்கம் 9 வரையும்

2) சிரேஷ்ட இடை நிலைக் கட்டம் - சாதாரண தரம் (தரங்கள் 10 மற்றும் 11)

3) சிரேஷ்ட இடைநிலை உயர் தரம் - தரங்கள் 12 மற்றும் 13

கனிஷ்ட இடை நிலைக் கட்டம் ஒரு பிள்ளையின் வாழ்க்கையில் உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் மிகவும் முனைப்பான ஒரு காலப் பிரிவாக இருந்து வருகின்றது எனக் கருதப்படுகின்றது. இப் பருவத்தின் போது அவர்கள் தாம் விரும்பும் விதத்தில் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு விரும்புகிறார்கள். மேலும், தமது சகாக்களுடன் உறவுகளையும் நட்புணர்வுகளையும் கட்டியெழுப்புவதற்கான விருப்பும் அவர்களிடையே நிலவி வருகின்றது. மேலும், பிள்ளை சமூகத்தில் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுக் கொள்ளும் விருப்பினையும் காட்டுகின்றது. பிள்ளை தரம் 9 ஐப் பூர்த்தி செய்யும் சந்தர்ப்பத்தில் அது 14 வயதை நிறைவு செய்திருக்கும். எனவே, இக்காலப் பிரிவின் போது பிள்ளை பல்வேறு ஆற்றல்களையும் பெற்றுக் கொண்டிருக்கும் என கருதப்படுகின்றது. அவையாவன:

- உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் வயது வந்தவராக நடந்து கொள்ளல்.

- தனது குடும்பத்தின் ஓர் உறுப்பினராக நடந்து கொள்வதற்குத் தேவையான போதிய உடல் மற்றும் உள ஆற்றல்களை ஈட்டிக் கொள்ளல்.

- தேசிய சவால்களை இனங்கண்டு கொள்வதும் அவற்றுக்கு ஏற்ப எதிர் விளைவு காட்டுதலும்.

- சூழல் குறித்து அறிந்திருப்பதும் சூழல் பாதுகாப்புக்கு பங்களிப்புச் செய்வதும்.

- சமாதானம் மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு என்பவற்றை நோக்கிய நட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிக்கைகளை மேற்கொள்ளல்.

– உயிரியல் சூழலிலிருந்து உணவைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக அறிந்திருப்பதும் செயற்படுவதும்.

– உரிமைகளையும் அதே போல கடமைகளையும் அறிந்திருப்பதும் ஒரு நல்ல பிரஜையாக நடந்து கொள்வதும்.

– தேசிய உற்பத்தித் திறன் மற்றும் சமூக நீதி என்பவற்றுக்கான அர்ப்பணிப்பு.

– பௌதீக மற்றும் சமூகச் சூழல்களின் தொடர்ச்சியான முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு படைப்பாற்றலுடன் தொடர்புபட்ட ஆன்மீக முன்னேற்றத்தை எட்டுதல்.

– ஒரு சமநிலை மிக்க மனிதப் பிறவியாகவும் இலங்கை நாட்டில் சுறுசுறுப்பு மிக்க ஓர் உறுப்பினராகவும் இருந்து வருவதற்குத் தேவையான தகுதிகளைப் பெற்றுக் கொள்ளல்.

இந்த ஆற்றல்களைப் பெற்றுக் கொள்வதற்கென வளங்களையும் வசதிகளையும் பல்வேறு வாய்ப்புக்களையும் வழங்குவது அத்தியாவசியமாகும்.

கனிஷ்ட இடைநிலைக் கல்வி கட்டத்தை எட்டும் ஒரு பிள்ளை ஆரம்பக் கல்வியின் போது ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்ட பல பாடங்களை ஒருங்கிணைந்த ஒரு பாடத்திட்டத்தின் மூலம் கற்றிருக்கும். இக்கல்வி சுற்றாடலுடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுக்கூடாக வழங்கப்பட்டிருப்பதுடன், நேரடி அனுபவங்களை அடிப்படையாக கொண்டுள்ளது. இடைநிலைக் கட்டத்தின் போது பல்வேறு பாடங்களாகவும் வகுக்கப்பட்டிருக்கும் ஒரு பாடத்திட்டத்தை அப்பிள்ளை கற்க வேண்டியுள்ளது. சிந்திப்பதற்கு அதிக அவகாசமும் சுதந்திரமும் அளிக்கும் ஒரு செயன்முறை இப்பொழுது ஆரம்பமாகின்றது. மாணவரை மையமாகக் கொண்ட கல்வியை வழங்கும் விதத்தில் கற்றல் செயல்பாடுகள் இக் கட்டத்தில் ஏற்பாடு செய்யப்படுகின்றன. வகுப்பறையில் விரிவுரைகளுக்கூடாக பாடங்களைப் போதிப்பதற்குப் பதிலாக மாணவரை மையமாகக் கொண்ட அணுகுமுறை பின்பற்றப்படுகின்றது. இந்த புதிய பாடத்திட்டம் பின்வரும் முறையில் பாடசாலைகளில் அமுல் செய்யப்படும்:

- தரம் 6 1999
- தரம் 7 2000
- தரம் 8 2001
- தரம் 9 1999
- தரம் 10 2000
- தரம் 11 2001

இத் திட்டம் பெற்றோருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் உள்ளடக்குகின்றது. தமது பிள்ளைகளின் பாடசாலைக் கல்விச் செயல்பாடுகளில் பெற்றோரின் முழு ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்வதற்கென முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**பாடசாலை மட்டத்திலான கணிப்பீடு**

பாடசாலை மட்டத்திலான கணிப்பீட்டு முறை புதிய கல்விச் சீர்திருத்தங்களின் மற்றொரு முக்கிய அம்சமாகும். இந்த நிகழ்ச்சித்திட்டம் ஒவ்வொரு பாடத்திலும் மாணவர்களின் ஆற்றல்களையும் பலவீனங்களையும் இனங்கண்டு கொள்வதற்கு உதவும். இதற்கூடாக விசேஷ கற்றல் சிரமங்களை கொண்டிருக்கும் மாணவர்கள் இனங்கண்டு கொள்ளப்படுவதுடன், இச்சிரமங்களைப் போக்கும் பொருட்டு பாடசாலை தேவையான நிவாரண வழிமுறைகளை மேற்கொள்ளும். இது தொடர்பாக ஆசிரியர்கள் மீது ஒரு பாரிய பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளதுடன், தேசிய கல்வி நிறுவகம் அவர்களுக்கு தேவைப்படும் மாதிரி மதிப்பீட்டு உபகரணங்களை வழங்கியுள்ளது.

**சுற்றாடல் கல்வி (தரம் 6)**

தரம் 6 இல் கற்பிக்கப்பட்டு வந்த விஞ்ஞானம் மற்றும் சமூகக் கல்வி என்ற இரு பாடங்களுக்குப் பதிலாக சுற்றாடல் கல்வி என்ற புதிய பாடம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இந்த பாடத்தின் கீழ் சமூக சுற்றாடல், (பௌதீக மற்றும் உயிரியல்) இயற்கைச் சுற்றாடல், செயற்கை அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட சுற்றாடல் என 3 கூறுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்தப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள பாட அலகுகள் சமூக விஞ்ஞானம் அல்லது விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் என்பவற்றுக்கு அழுத்தம் கொடுக்கும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும், இந்த பாடத்தின் மூலம் மாணவர்களுக்கு வழங்கப்படும் அடிப்படை அறிவு அவர்களை சமூகக் கல்வி மற்றும் வரலாறு, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களை நோக்கி எளிதில் நெறிப்படுத்தும்.

**சுகாதாரம் மற்றும் உடல் கல்வி (தரம் 6-9)**

சுகாதாரமும் உடலியல் கல்வியும் பாடசாலைப் பாடத்திட்டத்தில் இரு வேறு பாடங்களாக போதிக்கப்பட்டு வந்துள்ளன. புதிய சீர்திருத்தங்களின் கீழ் அவை இரண்டும் ஒரு பாடத்தில் இணைக்கப்பட்டுள்ளன. எந்தவொரு நபரினதும் ஆரோக்கியத்தை சரிவர பேணிக் கொள்வதற்கு உடல் கல்வி அவசியமாகும். சுகாதாரமும் உடலியல் கல்வியும் ஒரே துறையைச் சேர்ந்தவையாக இருந்து வருவதுடன், ஒன்றுடன் ஒன்று இணைந்தவையாகவும் உள்ளன. ஒரு பிள்ளையின் உள ரீதியான உடல் ரீதியான அபிவிருத்தி மற்றும் உடல் பொருத்தப்பாடு என்பவற்றின் அபிவிருத்திக்கு வகை செய்யும் விதத்தில் கற்றல் கட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இந்தப் பாடம் தரம் 9 வரையில் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஒரு பிள்ளை இந்தப் பாடத்தை மேலும் கற்க விரும்பினால் க. பொ. த. (சா/த) பரீட்சைக்கான ஒரு மேலதிக பாடமாக அதனைக் கற்க முடியும்.

**மொழியும் இலக்கியமும் (தரம் 6-11) சிங்களம்/தமிழ்**

பாடசாலைகளில் மொழிப் போதனையின் போது வாசிப்பு மற்றும் எழுத்து என்பவற்றுக்கு அதிக அழுத்தம் கொடுக்கப்பட்டு வந்துள்ளது. செவிமடுத்தல், பேச்சு மற்றும் நயத்தல் என்பவற்றின் மீது போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. புதிய சீர்திருத்தங்கள் மூலம் இப்பலவீனங்கள் பெருமளவுக்கு குறைக்கப்பட்டுள்ளன.

**அழகியல் கல்வி (தரம் 6-11)**

தரம் 6 இல் கலை, நடனம் மற்றும் இசை என்பன தொடர்பாக மாணவர்களுக்கு ஓர் அடிப்படைப் புரிந்துணர்வை வழங்கும் விதத்தில் அழகியல் கல்வி தொடர்பான பாடம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டத்தில் இந்த 3 விடயங்கள் தொடர்பாகவும் அவர்களுக்கு ஓர் அடிப்படை அறிவை வழங்குவதற்கும், அவர்களுக்கு களிப்பினை ஊட்டுவதற்கும், இத்துறைகள் தொடர்பான படைப்புக்களை உருவாக்குவதற்கு உதவுவதற்கும் திட்டமிடப்பட்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

டுள்ளது. இந்தக் கல்வி முறைக்கூடாக தமது சுவைகள் மற்றும் திறன்கள் என் பவற்றுக்கேற்ப தாம் விரும்பும் பாடத்தை தெரிவு செய்து கொள்ளும் வாய்ப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும்.

**க. பொ. த. (உ/த)**

புதிய கல்விச் சீர்திருத்தங்களின் பிரகாரம் க. பொ. த (சா/த) பொதுக் கல்வியில் தரங்கள் 10, 11 என்பவற்றை உள்ளடக்குகின்றது. இந்தத் தரங்களை கல்வியின் ஒரு முக்கியமான கட்டமாக கருத முடியும். இந்த இரண்டு வரு டங்களின் போது ஒரு மாணவன் பொதுக் கல்வியைப் பெற்று வரும் அதே வேளையில் தனது கல்விக்கு குறுக்கீடற்ற விதத்தில் தான் விரும்பும் ஒரு தொழி லுக்கு தன்னை நெறிப்படுத்திக் கொள் வதற்கான வாய்ப்புக் கிட்டுகின்றது. தரங் கள் 6-11 ன் கீழ் முன்னர் குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக க. பொ. த. (சா/த) இல் ஒரு சில விசேஷ மாற்றங்களும் மேற்கொள்ளப் படும்.

க. பொ. த. (சா/த) பரீட்சையில் விஞ்ஞானம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் சித்தி விகிதங்களில் ஒரு இறங்கு முகமான போக்கு ஏற்பட்டிருப் பதனை புள்ளிவிவரங்கள் காட்டு கின்றன. பெற்றிருக்கும் குறைவான அறிவு தவிர வேறு சில காரணங்களும் இந்நிலையைக்கு பங்களிப்புச் செய்து வந்துள்ளன என்பதனை மதிப்பீட்டாய்வு கள் எடுத்துக்காட்டுகின்றன. மேலும், இப் பாடங்களில் சித்தியெய்தத் தவறு வதன் விளைவாக க. பொ. த. (சா/த) பரீட்சையில் தோல்வி விகிதங்கள் மிக உயர்மட்டத்தில் இருந்து வருவதனையும் அவதானிக்க முடிகிறது.

பல்வேறு தொழில்களுக்காகவும் வேறுபட்ட மட்டங்களில் விஞ்ஞான மற் றும் கணித அறிவு தேவைப்படுகின்றது. கணிதம் சாராத ஒரு துறையில் பிர வேசிக்கும் ஒருவர் பெற்றிருக்கும் கணித அறிவு, கணிதத்தை அடிப்படையாகக் கொண்ட உயர் கல்வித் துறையில் பிர வேசிக்கும் ஒருவர் பெற்றிருக்க வேண் டும் என எதிர்பார்க்கப்படும் கணித அறிவிலும் பார்க்க வேறுபட்டதாகும். இந்த உயர் மட்டக் கணித அறிவு வேறு துறைகளுக்கு அவசியமில்லை. விஞ்ஞா னம் தொடர்பான விடய அறிவும் இதே போல வேறுபடுகின்றது. எனினும், தற் பொழுது அனைத்து மட்டங்களுக்குமென ஒரு பொதுவான வினாப் பத்திரமே தயாரிக்கப்படுகின்றது. அனைவரையும் ஒரு பொதுவான வினாப் பத்திரத்தின் மூலம் பரீட்சிப்பதற்கு மேற்கொள்ளப் படும் முயற்சி பரீட்சையில் மாணவர்கள் தோல்வி அடையும் விகிதங்களை அதி கரிக்கச் செய்கின்றது. எனவே, இந்தக் காரணிகள் அனைத்தையும் கருத்தில் கொண்ட விதத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் இரு மட்டங்களில் இரு வினாப் பத்திரங்கள் வழங்கப்படும். கணிதம் மற்றும் விஞ் ஞானம் ஆகிய பாடங்களை அடிப்படை யாகக் கொண்டு உயர் கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கென ஒரு வினாப் பத்திரம் வழங்கப்படும். வேறு துறைகளில் செல்ல விரும்பும் மாணவர்களுக்கென மற்றொரு பொது வினாப் பாத்திரம் வழங்கப்படும். இதன் பிரகாரம் 1999 டிசம்பர் க. பொ. த. (சா/த) பரீட்சை தொடக்கம் விஞ்ஞான பாடத்துக்கு தலா இரண்டு வினாப் பத் திரங்களும் கணித பாடத்துக்கு தலா இரண்டு வினாப்பத்திரங்களும் வழங்கப் படும். இவை விஞ்ஞானம் 1 கணிதம் 1 என அழைக்கப்படுகின்றன. இவற்றில் சித்தியடைவது க. பொ. த. (சா/த) பரீட் சையில் சித்தி பெறுவதற்கு போதுமான தாகும்.

கல்வி சம்பந்தப்பட்ட குறிக்கோள் கள் ஒட்டுமொத்தமாக தேசிய குறிக்கோள் களுடன் பொருத்திச் செல்வனவாகவே உள்ளன. ஒரு சில சந்தர்ப்பங்களில் கல்வி தொடர்பான குறிக்கோள்கள் நேரடியாக தேசிய குறிக்கோள்களி லிருந்து பெறப்படுகின்றன. அடுத்து வரும் பகுதியில் இந்த தேசிய குறிக்கோள் கள் குறித்து விளக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட பாடங்களில் சித்தியடைய வேண்டிய தேவை தொடர்பாகவும் பல் கலைக்கழக அனுமதிக்கு அவசியமான தகைமைகள் தொடர்பாகவும் சம்பந்தப் பட்ட சுற்றறிக்கையில் க. பொ. த. (உ/ த) பரீட்சை தொடர்பாக குறிப்பிடப் பட்டிருக்கும் விடயங்கள் வருமாறு:

– கணிதம் 1 அல்லது கணிதம் 2 பாடத்தில் சித்தியடைந்திருப்பது பல் கலைக்கழகத்தில் எந்தவொரு பாட நெறிக்கும் அனுமதி பெறுவதற்கான அடிப்படைத் தேவையாக இருந்து வரும்.

– ஒரு மாணவன் க. பொ. த. (உ/ த) வகுப்பில் பௌதீக விஞ்ஞான பாட நெறியில் கல்வி பயில்வதற்கு கணிதம் II இல் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டியிருப்பதுடன், விஞ்ஞானம் I அல்லது விஞ்ஞானம் II ல் சாதாரண சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

– உயிரியல் பாடநெறியில் சேர்த்து கொள்ளும் பொருட்டு ஒரு மாணவன் விஞ்ஞானம் II இல் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டியிருப்பதுடன், கணி தம் I அல்லது II இல் சாதாரண சித்தி பெற்றிருக்க வேண்டும்.

புதிய கல்விச் சீர்திருத்தங்களுக் கமைய நடாத்தப்படும் முதலாவது க. பொ. த. (சா/த) பரீட்சை முதல் தடவை யாக 2001 இல் நடத்தப்படும். புதிய பாடத்திட்டத்தின் கீழ் தரங்கள் 10 மற்றும் 11 என்பவற்றில் பாடங்கள் அடிப்படைப் பாடங்கள் மற்றும் மேலதி கப் பாடங்கள் என இரு தொகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. எட்டு அடிப் படை (கட்டாய பாடங்கள்) உள்ளன. அனைத்து மாணவர்களும் இந்த எட்டு பாடங்களையும் எடுக்க வேண்டும். இந்த அடிப்படைப் பாடங்களுக்கூடாக பிள் ளைகளுக்கு உறுதியான விரிவான கல்வி அத்திவாரமொன்றை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் காரண மாக இப்பாடங்களை படிப்பது கட்டாய மாக்கப்பட்டுள்ளது. ஒரு பிள்ளை தரங் கள் 10 மற்றும் 11 என்பவற்றில் ஆகக் கூடியது இரண்டு மேலதிக பாடங்களை தெரிவு செய்து கொள்ள முடியும். அந்தப் பாடங்களில் மேலும் கல்வியைத் தொடர எண்ணம் கொண்டுள்ள மாண வர்கள் அவற்றை தெரிவு செய்து கொள் ளலாம். பாடசாலைகளில் இதற்கென புறம்பாக பாட நேரங்கள் ஒதுக்கப் பட்டுள்ளதுடன், மாணவர்கள் பாடசாலை யில் கிடைக்கும் வசதிகளுக்கேற்ப தாம் விரும்பும் பாடத்தை தெரிவு செய்து கொள்வதற்கான சுதந்திரத்தைக் கொண் டுள்வார்கள். இந்த மேலதிக பாடங் களை கற்பது கட்டாயமாக்கப்படவில்லை. ஒரு பிள்ளை விரும்பும் பட்சத்தில் மட் டுமே அவற்றைக் கற்கலாம்.

**அடிப்படை (கட்டாய) பாடங்கள்**

1. சமயம் - பௌத்தம், கிருஸ்தவம் (ரோமன் கத்தோலிக்க, ரோமன் கத்தோலிக்க அல்லாத) இஸ் லாம், சைவ சமயம்
2. முதல்மொழி
3. ஆங்கிலம்
4. கணிதம்
5. அழகியல் கல்வி – சித்திரம், நட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னம், (பரத நாட்டியம், சிங்கள நடனம்) சங்கீதம் (கீழைத்தேய/மேலைத்தேய/கர்நாடக), நாடகம் மற்றும் அரங்கக்கலை/இலக்கியம்
6. விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
7. சமூகக்கல்வி மற்றும் வரலாறு
8. தொழில்நுட்ப பாடம் - (விவசாயம், தோட்டக்கலை, விலங்கு வேளாண்மை, கடல் உயிரியல் வளத்தொழில்நுட்பம், நன்னீர் வளத்தொழில் நுட்பம்/உணவு/விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்/மனைப் பொருளியல்/வர்த்தகம்/கைவினைக் கலைகள் (நிர்மாணம்) தொழில்நுட்பம்/மின்சார மின்னணுவியல் தொழில்நுட்பம்/இயந்திரவியல் தொழில்நுட்பம்.

**மேலதிக பாடங்கள்**

மேலே எடுத்துக்காட்டப்பட்ட அடிப்படை பாடங்கள் தவிர ஒரு மாணவன் பின்வரும் பாடங்களில் ஒன்றினை அல்லது இரண்டினை தெரிவு செய்து கொள்ள முடியும்:

1. வரலாறு
2. புவியியல்
3. அபிவிருத்திக் கல்வி
4. இரண்டாவது மொழியாக சிங்களம் அல்லது தமிழ்
5. ஒரு நவீன அல்லது பேரிலக்கிய மொழி (இலத்தீன், பிரெஞ்சு, சமஸ்கிருதம், மலே, அரபு)
6. சுகாதாரம் மற்றும் உடலியல் கல்வி
7. இலக்கியம் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்/அரபு)

**க. பொ. த. (உயர்தர) மட்டத்தில் கல்விச் சீர்திருத்தங்கள்.**

க.பொ.த. (உயர்தர) வகுப்பு தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் 1998 செப்டம்பர் தொடக்கம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இது தொடர்பான சீர்திருத்தங்களை உருவாக்குவதில் பெருந்தொகையான காரணிகள் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளன. ஆண்டு தோறும் சுமார் 1,80,000 பேர் இப்பரீட்சைக்குத் தோற்றி வருகின்றார்கள். இவர்களில் சுமார் 50 சதவீதத்தினர் 4 பாடங்களிலும் சித்தியடைகின்றனர். ஆனால், இவ்விதம் தகைமை பெறுபவர்களில் சுமார் 12,000 பேரை மட்டுமே பல்கலைக்கழகங்களில் சேர்த்துக் கொள்ள முடிகிறது. க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக் கொள்ளத் தவறும் மாணவர்கள் தொடர்பாக தற்போதைய கல்வி முறை கவனம் செலுத்தி வருவதாக தெரியவில்லை. அதேபோல இந்தப் பரீட்சையில் சித்தியடையத் தவறுபவர்கள் தொடர்பாகவும் உரிய கவனம் செலுத்தப்படுவதில்லை.

க. பொ. த. (உயர்தர) பரீட்சையின் பின்னர் உயர் கல்வியை அல்லது மூன்றாம் நிலைக் கல்வியை தொடர விரும்பும் மாணவர்கள் தமது ஆற்றல்களுக்கும் விருப்புக்கும் ஏற்ற விதத்தில் கற்கை நெறிகளை தெரிவு செய்து கொள்ளும் சுதந்திரத்தை மிகவும் குறைந்த அளவிலேயே கொண்டுள்ளனர். க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்துள்ள போதிலும் பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமை பெற்றிராத மாணவர்களைப் பொறுத்தவரையில் தமக்குப் பொருத்தமான ஒரு துறையைத் தெரிவு செய்து கொள்வதென்பது மிகவும் சிக்கலான ஒரு விடயமாக இருந்து வருகின்றது. தற்போதைய சீர்திருத்தம் விரிவான ஒரு பாடத் தொகுதியிலிருந்து தமக்குப் பொருத்தமான பாடங்களை தெரிவு செய்து கொள்ளும் ஒரு வாய்ப்பினை வழங்குகின்றது. இச்சீர்திருத்தங்களின் கீழ் க. பொ. த. (உயர்தர) மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கியமான மாற்றங்கள் வருமாறு:

* பரீட்சார்த்திகள் தோற்ற வேண்டிய பாடங்களின் எண்ணிக்கை 4 இலிருந்து 3 ஆக குறைக்கப்பட்டுள்ளது. இது மாணவர்களின் பாடச் சுமைகளை குறைப்பதுடன் அதன் மூலம் அவர்களுக்கு ஓரளவு நிவாரணத்தையும் அளிக்கின்றது.

* பல்கலைக்கழகங்களில் பிரவேசிக்க விரும்பும் மாணவர்கள் பல்கலைக்கழகங்களின் அந்தந்த பீடங்களினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள பாட சேர்க்கைகளுக்கு ஏற்ற விதத்திலான பாடநெறிகளை பயில வேண்டும். அது தொடர்பான விவரங்களை உள்ளடக்கிய சுற்றறிக்கைகள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பாட சேர்க்கைகளுக்கு இசைவான விதத்திலேயே பாடசாலைகளில் க.பொ.த. (உயர்தர) வகுப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

* பல்கலைக்கழகங்களில் பிரவேசிக்க விரும்பும் மாணவர்கள் க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் தாம் தெரிவு செய்து கொண்டுள்ள பாடங்களுக்கு தோற்றிய பின்னர் பொது சாதாரண வினாத்தாள் ஒன்றுக்கும் விடையளித்தல் வேண்டும். இந்த வினாத்தாள் பரீட்சை நேரசூசியில் கடைசி தினத்தன்று வழங்கப்படும். இது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒரு விசேஷ அலகினால் தயாரிக்கப்படுவதுடன், பரீட்சைகள் திணைக்களத்தினால் இப்பரீட்சை நடாத்தப்படுகின்றது. மாணவனின் பின்வரும் ஆற்றல்களை பரீட்சிக்கும் விதத்தில் இப்பரீட்சை நடத்தப்படுகின்றது:

- பொது விழிப்பு
- பிரச்சினைகளை தீர்க்கும் ஆற்றல்.
- தர்க்க ஆற்றல் (பகுப்பாய்வு முறைமை சார்ந்து புள்ளிவிவர மற்றும் இடம் சார்ந்த)
- விரிவான மற்றும் தகவல் தொடர்பு திறன்கள்

இது தொடர்பாக ஏற்கனவே மாதிரி வினாப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒரு மாணவனை பல்கலைக்கழகத்தில் சேர்த்துக் கொள்வதனை கவனத்தில் எடுக்கும் பொருட்டு அம் மாணவன் பின்வரும் தகைமைகளை பெற்றிருக்க வேண்டும்.

1. மூன்று பாடங்களிலும் ஆகக் குறைந்தது 140 மொத்தப் புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
2. பொது சாதாரண வினாப் பத்திரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக மாணவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள மொத்தப் புள்ளிகள் முன்னுரிமை அடிப்படையில் கவனத்தில் எடுக்கப்படும். தற்பொழுது மாணவர்களை பல்கலைக்கழகத்தில் சேர்க்கும் பொருட்டு பயன்படுத்தப்பட்டு வரும் மாவட்ட அடிப்படையிலான முறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமின்று தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்டு வரும். பொது சாதாரண வினாப் பத்திரம் தொடர்பான சித்தி புள்ளிகள் ஒவ்வொரு மாவட்டத்தினதும் மொத்த புள்ளிகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும். பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்காக ஒரு மாணவன் தனது மாவட்டத்தில் பொது சாதாரண வினாப் பத்திரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

க.பொ.த. (உயர்தர) வகுப்புக்கென மாணவர் பதிவுப் புத்தகமும் ஆசிரியர் பதிவுப் புத்தகமும் அறிமுகம் செய்து வைக்கப்படும். ஒவ்வொரு மாணவன் தொடர்பாகவும் இப்பதிவேடு பராமரிக்கப்படும். தரங்கள் 12 மற்றும் 13 என்பவற்றில் மாணவர்கள் எட்டியுள்ள சாதனை மட்டங்கள் மற்றும் முன்னேற்றம் என்பன இப்பதிவேட்டில் பதிவு செய்யப்படும்.

### ஆசிரியர் பதிவேடு

தரங்கள் 12 மற்றும் 13 என்பவற்றில் கற்பிக்கப்படும் ஒவ்வொரு பாடம் தொடர்பாகவும் ஆசிரியர் பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு வரும். இரு வாரங்களுக்கொருமுறை ஒவ்வொரு பாடம் தொடர்பாகவும் வகுப்பு மட்டத்தில் கோட்பாடு தொடர்பான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்; புள்ளிகள் அந்த காலப் பகுதிக்குள் பதிவேட்டில் பதிவு செய்யப்படும். இந்த மதிப்பீடுகள் ஒவ்வொரு பாடத்திலும் மாணவன் பெற்றுள்ள அடைவு மட்டத்தை அறிந்து கொள்வதற்கு உதவும். அந்த வகையில், ஆசிரியர் பதிவேடு ஒவ்வொரு மாணவரதும் பாட மட்டத்திலான அடைவுகளைப் புரிந்து கொள்வதற்கு பெரிதும் உதவும். ஆகக் குறைந்தது 80% ஆன கோட்பாட்டு மதிப்பீடுகளில் பங்கேற்கத் தவறும் மாணவர்கள் க. பொ. த. (உயர்தர) பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். விவசாயம், உயிரியல், இரசாயனம், மனைப் பொருளியல், பௌதீகம் மற்றும் அழகியல் கல்வி போன்ற பாடங்களைப் பொறுத்தவரையில் செயன்முறை வேலைகள் கட்டாயமாக்கப்படும். ஏனைய பாடங்களில் ஒப்படைகள் கட்டாயமாக செய்யப்படுதல் வேண்டும். பரிந்துரை செய்யப்பட்டுள்ள ஒப்படைகளில் குறைந்தது 80% ஐ பூர்த்தி செய்யாத மாணவர்கள் க. பொ. த. (உயர்தர) பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

ஒப்படைகள் மற்றும் செயற்றிட்டங்கள் என்பவற்றின் மதிப்பீடு பாடசாலை மட்டத்தில் மேற்கொள்ளப்படும். செயன்முறை வேலைகள் தொடர்பான நூல்கள் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. செயன்முறை வேலைகள் இல்லாத பாடங்கள் தொடர்பாக மாதத்துக்கு இரு முறை ஒப்படைகள் வழங்கப்படும். குறிப்பிட்ட இரு வார காலத்தின் போது கற்ற பாட விடயங்கள் மாணவர்களுக்கு ஒரு செயன்முறை அனுபவமாக மாறும் விதத்தில் இந்த ஒப்படைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. செயன்முறை வேலை மற்றும் ஒப்படை என்பன இரு வாரங்களுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்படுவதுடன், சம்பந்தப்பட்ட புள்ளிகள் ஆசிரியரின் பதிவேட்டில் பதிவு செய்யப்படும். பாடங்களின் சிறு பிரிவுகளை மட்டுமே உள்ளடக்கக் கூடிய விதத்தில் இந்த ஒப்படைகள் வடிவமைக்கப்பட்டுள்ளதால் அவற்றுக்காக மாணவர்கள் நீண்ட நேரத்தை எடுத்துக் கொள்ளக் கூடாது.

### மாணவர் பதிவேடு

மாணவர் பதிவேடு மாணவனின் கல்வி மற்றும் ஆளுமை அபிவிருத்தியின் சரியான, சட்டபூர்வமான ஓர் அறிக்கையாக இருந்து வருகின்றது. இப்பதிவேடுகள் பாடசாலை அதிபரின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருக்கும். மாணவன்/மாணவி பாடசாலையிலிருந்து விலகிச் செல்லும் பொழுது பூர்த்தி செய்யப்பட்டுள்ள பதிவேடு கையொப்பமிடப்பட்டு, அத்தாட்சிப்படுத்தப்பட்ட பின்னர் குறிப்பிட்ட மாணவனிடம்/மாணவியிடம் கையளிக்கப்படும். இது கல்வி தொடர்பான விவரங்கள், கோட்பாட்டு, செயன்முறை வேலைகள், ஒப்படைகள் என்பவற்றின் அடைவு மட்டங்கள், விளையாட்டுக்கள், வெளி வேலைகள், பாடசாலை வேலைகள், போட்டிகளில் பங்கேற்பு, தலைமைத்துவம் மற்றும் ஓர் உறுப்பினர் என்ற முறையில் ஈடுபட்ட நடவடிக்கைகள் முதலியவை தொடர்பான அறிக்கைகளைக் கொண்டிருக்கும். மேலும், பாடசாலையால் நடத்தப்படும் தவணைப் பரீட்சைகளில் பெற்றிருக்கும் புள்ளிகளும் இப்பதிவேட்டில் பதிவு செய்யப்படும்.

### செயற்றிட்ட வேலை

க. பொ. த. (உயர்தர) வகுப்பு மாணவர்களுக்கு செயற்றிட்ட வேலை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அவர்கள் தமது இரு வருட கல்வியின் போது இரு செயற்றிட்ட வேலைகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்ய வேண்டும். க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு முன்னர் அவர்கள் இந்த செயற்றிட்டங்களை சமர்ப்பிக்க வேண்டும். இச் செயற்றிட்டத்துக்கு மாணவர்கள் எந்த ஒரு பாடத்தையும் தெரிவு செய்து கொள்ளலாம். ஆனால், தலைப்புக்களை ஆசிரியர்களுடன் கலந்துரையாடிய பின்னரேயே தெரிவு செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் ஒரு செயற்றிட்டத்தையும், குழுவாகச் சேர்ந்து ஒரு செயற்றிட்டத்தையும் பூர்த்தி செய்ய வேண்டும். பிராந்திய கல்வி அலுவலகங்களில் அமைக்கப்பட்டுள்ள தர நிர்ணயங்கள் தொடர்பான குழுக்கள் ஒரு தவணைக்கு க. பொ. த. (உயர்தர) வகுப்புக்கள் உள்ள பாட சாலைகளில் நிலவி வரும் தர நிர்ணயங்களைக் கண்காணிக்கும்.

### க. பொ. த. (உயர்தர) வகுப்பில் புதிய பாடங்கள்.

உயர்தர வகுப்பு பாடத்தொகுப்பில் புதிய பாடங்களும் தொழில்நுட்பப் பாடத் தொகுதியொன்றும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் பொது ஆங்கிலப் பாடம் அறிமுகம் செய்து வைக்கப்படும். இது தொடர்பாக ஒரு பாடநூலும் இரு ஒலி நாடக்களும் வெளியிடப்பட்டுள்ளன. இப்பாடத்துக்கு ஊடாக மாணவர்களின் ஆங்கில அறிவை உயர்த்துவதற்கென எளிமையான ஒரு நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பாடத்தை க. பொ. த. (உயர்தர) பரீட்சைக்கு எடுக்கலாம். ஆனால், பல்கலைக்கழக அனுமதிக்கு இப்பாடத்தில் சித்தி எய்த வேண்டும் என்ற அவசியம் இல்லை. பல்கலைக்கழக அனுமதித் தேவைக்கென இப்புள்ளிகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. இது தவிர க. பொ. த. (உயர்தர) வகுப்பில் 1999 இல் "முகாமைத்துவம்" மற்றும் "விஞ்ஞானமும் சமூகமும்" என்ற பெயரிலான இரு பாடங்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளன. இப்பாடங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. "முகாமைத்துவம்" கலைப் பாடப் பிரிவிதும், "விஞ்ஞானமும் சமூகமும்" வர்த்தகப் பாடப் பிரிவிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேலும், 2000 தொடக்கம் க. பொ. த. (உயர்தர) வகுப்பில் புதிய தொழில்நுட்ப பாடங்களும் அறிமுகம் செய்து வைக்கப்படும்.

### கல்விச் சீர்திருத்தங்களின் தேசிய குறிக்கோள்கள்

1. தேசிய நல்லிணக்கம், தேசிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமைப்பாடு மற்றும் தேசிய ஐக்கியம் என்பவற்றை சாதித்துக் கொள்ளல்.

2. எங்கும் சமூக நீதி நிலவும் ஒரு மாதிரியை ஸ்தாபித்தல்.

3. புதிய ஆயிரமாண்டின் தொடக்கத்தில் வரலாற்றில் முதல் தடவையாக மனித குலம் நீரையும் காற்றையும் கூட இலவசமாக பெற முடியாத ஒரு நிலை உருவாகியுள்ளது. இந்தச் சூழ்நிலைக்கு அத்தியாவசியமான நிலைத்து நிற்கக் கூடிய ஒரு வாழ்க்கை முறையை, உருவாக்கிக் கொள்ளல்.

4. கண்ணியமான, திருப்தி தரக் கூடிய, ஆத்ம திருப்தியளிக்கக் கூடிய வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல்.

5. மேலே குறிப்பிடப்பட்ட கட்டமைப்பில், அனைவரும் தேசத்தின் ஒட்டுமெத்த வளர்ச்சிக்கு வழிகோலக் கூடிய மனித வள அபிவிருத்தியில் பங்கேற்பதற்கு பல்வேறுபட்ட வாய்ப்புக்களையும் பெற்றுக் கொடுத்தல்.

6. தேச நிர்மாணப் பணியிலான முனைப்பான பங்கேற்பு, ஒவ்வொருவருக்கும் இடையிலான பரஸ்பர தொடர்பில் நெருக்கமான பிணைப்பும், அன்னியோன்னிய உணர்வும் அதிகரிப்பதனை உறுதி செய்ய வேண்டும்.

7. இன்று நாம் வாழும் உலகம் துரித மாற்றங்களை எதிர்கொண்டு வருகிறது. இந்த நிலையில், மாற்றங்களுக் கேற்ப அனுசரித்துச் செல்லக் கூடிய ஆற்றல்களையும், மாறிவரும் நிலைமைகளுக்கேற்ப அனுசரித்துச் செல்வதற்கு பழகிக் கொள்வதனையும் படிப்படியாக உருவாக்கிக் கொள்ள வேண்டும். தனது வாழ்க்கையையும் ஏனையவர்களது வாழ்க்கையையும் செழிப்புறச் செய்வதற்கென மாற்றங்களை நெறிப்படுத்தும் திறன்களும் இதனுடன் இணைந்த வகையில் இருத்தல் வேண்டும்.

8. சிக்கலான, எதிர்பாராத நிலைமைகளை சமாளிப்பதற்கான ஆற்றலை வளர்த்துக் கொள்வதும், பாதுகாப்புணர்வையும் உறுதிப்பாட்டையும் எடுத்து வருவதும்.

9. சர்வதேச சமூகத்தில் கௌரவமான ஓரிடத்தைப் பெற்றுக் கொள்வதற்கென ஆற்றல்களை விருத்தி செய்து கொள்ளல்.

**தேசிய குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதற்கான அத்திவாரம்:**

அபிவிருத்தியின் ஒட்டுமொத்த கட்டமைப்பினை மிகவும் தாக்கமான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கென அடிப்படை அத்திவாரமொன்று இடப்படுதல் வேண்டும். இந்த அத்திவாரம் கல்வித் துறை சம்பந்தப்பட்ட குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதற்கான ஒரு முன்நிபந்தனையான ஒரு தொகுதி அடிப்படைத் திறன்களைக் கொண்டுள்ளது.

**இவற்றை ஐந்து தொகுதிகளில் வகைப் படுத்திக் காட்டலாம்.**

அ. தொடர்பாடல் திறன்கள் இது மூன்று விடயங்களைக் கொண்டுள்ளது: எழுத்தறிவு, எண்ணறிவு, படங்கள்.

எழுத்தறிவு - உன்னிப்பாக செவிமடுத்தல், தெளிவாக பேசுதல், பொருளறிந்து வாசித்தல், சரியாக சரளமாக எழுதுதல் என்பவற்றை உள்ளடக்குகிறது.

எண்ணறிவு - பொருட்கள், இடம், நேரம் என்பவற்றுக்கு எண்களை உபயோகித்தல், முறையாக எண்ணிக்கையிடல், கூட்டுதல் மற்றும் அளவிடுதல் என்பவற்றை உள்ளடக்குகிறது.

படங்கள் - கோடு, வடிவம் என்பவற்றைப் புரிந்து கொள்ளல், விவரங்களை வெளிப்படுத்துதல், பதிவு செய்தல், நிறத்தை உபயோகித்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

ஆ. சூழல் தொடர்பான திறன்கள்: இது சமூகச் சூழல், உயிரியல் சூழல் மற்றும் பௌதீகச் சூழல் என்பவற்றைக் கொண்டுள்ளது.

**சமூகச் சூழல்:** சமூகத்தில் ஓர் உறுப்பினராக இணைந்துள்ளோம் என்பது குறித்த விழிப்புணர்வு, உணர்ச்சி மற்றும் திறன்கள், சமூக உறவு, தனிப்பட்ட நடத்தை, பொதுவான மற்றும் சட்ட ரீதியான மரபு, உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பன குறித்த விழிப்புணர்வு.

**உயிரியல் சூழல்:** உயிர்ப்புள்ள உலகம், மனிதன், உயிரினவியல் சூழல் தொகுதி, மரங்கள், காடுகள், கடல்கள், நீர், தாவர, விலங்கு மற்றும் மனித உயிர், காற்று என்பன குறித்த விழிப்புணர்வு, உணர்ச்சி மற்றும் திறன்கள்.

**பௌதீகச் சூழல்:** விண்வெளி, வலு, எரிபொருள்கள், பொருண்மை, பொருட்கள், மனித வாழ்க்கையுடன் அவை கொண்டுள்ள பிணைப்பு, உணவு, உடை, இருப்பிடம், சுகாதாரம், சொகுசு, சுவாசம், தூக்கம், ஓய்வு, கழிவுகள் என்பன குறித்த விழிப்புணர்வு, உணர்ச்சி மற்றும் திறன்கள்.

இ. தார்மீக மற்றும் சமய நெறி முறைகள் தொடர்பான திறன்கள்

இவை விழுமியங்கள் மற்றும் மனப்பாங்குகள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்டவையாகும். அன்றாட வாழ்க்கையில் நடத்தை, சடங்குகள் மற்றும் வழக்காறுகள் என்பவற்றுக்கு இசைவான விதத்தில் வாழ்வதற்காக இத்தகைய விழுமியங்களை ஒருவர் சுவீகரித்துக் கொள்வது அவசியமாகும்.

ஈ. விளையாட்டு மற்றும் ஓய்வு நேரப் பயன்பாடு என்பன தொடர்பான திறன்கள்

இந்த தொகுதி திறன்கள் களிப்பு, ஆனந்தம் போன்ற மனிதத் தூண்டல்களுடன் சம்பந்தப்பட்டவையாகும். இவை விளையாட்டு, உடல் பயிற்சி போன்ற ஓய்வு நேர நடவடிக்கைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இவை உடல் மற்றும் உள ஆரோக்கியத்துக்கு அத்தியாவசியமானவையாகும்.

உ. "கற்பதற்கு கற்றல்" தொடர்பான திறன்கள்:

ஒருவர் கற்கும் விஷயங்கள் தொடர்ச்சியாக மீளாய்வுக்கும் பிந்திய தகவல்களின் உள்ளடக்கத்துக்கும் உட்படுத்தப்பட்டு வருதல் அவசியமாகும். இதற்கென இடையறாத விழிப்புணர்வுடன், கவனத்துடனும் விடா முயற்சியுடனும் செயற்பட்டு வருதல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக கல்வி தொடர்பான சீர்திருத்தங்கள்

*கலாநிதி கே. டி. அருள்பிரகாசம்*
(உப தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு)

**பொருளியல் நோக்கு** சஞ்சிகை 1983 ஏப்ரல் மாத இதழில் இலங்கையில் பல்கலைக்கழக கல்வி தொடர்பான விரிவான ஒரு பகுப்பாய்வினை மேற்கொண்டிருந்தது. பல்கலைக்கழக கல்வியின் வரலாற்று ரீதியான அபிவிருத்தி, சமூகப் பின்புலம் மற்றும் அரசியல் ரீதியான தாக்கங்கள் என்பன அந்த இதழில் விரிவாக எடுத்து விளக்கப்பட்டிருந்தன. சுருக்கமாக சொல்வதானால், இலங்கையின் பல்கலைக்கழக கல்விமுறை அறிவுத் துறை அபிவிருத்தி, மனித வளத் தேவைகளின் உயர் மட்டங்களை நிறைவு செய்தல் மற்றும் தேசிய அபிவிருத்தி என்பவற்றுக்கு போதியளவிலான பங்களிப்பினை வழங்கியிருக்கவில்லை என்பதே அந்தப் பகுப்பாய்வின் சாராம்சமாக இருந்தது. இலங்கையில் பொதுவான தேசியப் பிரச்சினைகளை கவனத்தில் எடுத்து, யோசனைகளை முன்வைக்கும் இவ்வாறான அறிக்கைகளுக்கு நேரிடும் கதியே இந்த அறிக்கைக்கும் நேரிட்டது. பொருளியல் நோக்கு சஞ்சிகையின் உலக் கல்வி தொடர்பான சிறப்பிதழை இலக்குக் குழுவினர்களில் பெரும்பாலானவர்கள் அநேகமாக வாசித்திருப்பார்கள். ஒரு சிலர் அது தொடர்பாக விவாதத்திருக்கக் கூடும். ஆனால், அது வெகு விரைவில் அனைத்துக் தரப்பினராலும் மறக்கப்பட்டு விட்டது. நாட்டின் பல்கலைக்கழக அமைப்பும் தொடர்ந்தும் அதன் வீழ்ச்சிப் போக்கில் சென்று கொண்டிருந்தது.

கல்வியின் அனைத்து அம்சங்களும் ஒருங்கிணைக்கப்பட்ட உயர் கவனத்தை வேண்டி நிற்கின்றன என்ற உண்மையை உணர்ந்து கொண்ட அப்போதைய அரசாங்கம் 1991 இல் தேசிய கல்வி ஆணைக் குழுவை ஸ்தாபித்தது. கல்வியின் ஒட்டுமொத்த அமைப்பு தொடர்பாகவும் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கி, பிரதான துறைகள் தொடர்பாக தேசிய கொள்கைகளை உருவாக்கிக் கொள்வதற்கு உதவுவதே இந்த ஆணைக்குழுவுக்கு இடைப்பட்ட பணியாக இருந்தது. அதன் பிரகாரம் இந்த ஆணைக்குழு ஏனைய கொள்கை ஆவணங்களுடன் சேர்த்து பல்கலைக்கழக கல்வி தொடர்பான தேசியக் கொள்கை ஒன்றையும் உருவாக்கியது.

இந்தக் கொள்கை ஆவணத்தை உருவாக்குவதற்கு முன்னர் மிகவும் விரிவான முறையில் சிந்தனைகளும் விவாதங்களும் கலந்துரையாடல்களும் இடம் பெற்றன. கல்விமான்கள், அறிஞர்கள் மற்றும் தனியார் துறையையும் பொதுத் துறையும் சேர்ந்த தலைவர்கள் போன்ற பரந்த தரப்பினரிடமிருந்து கருத்துரைகள் இதற்கென பெற்றுக் கொள்ளப்பட்டன. உறுதியான கொள்கை நிலைப்பாடுகளின் உருவாக்கத்துக்கான உள்ளீடுகளையும் தரவுகளையும் திரட்டிக் கொள்ளும் பொருட்டு கருத்தரங்குகளும், பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறியும் அரங்குகளும் நடாத்தப்பட்டன. எழுத்து மூலமான மகஜர்களும் வாய்மொழி மூலமான கருத்துக்களும் கேட்டுப் பெறப்பட்டன. இச் செயன்முறைக்கு ஒரு நீண்ட காலப் பிரிவு தேவைப்பட்டது என்பது தெளிவாகும். பல்கலைக்கழக கல்வி தொடர்பான தேசியக் கொள்கை இறுதியில் 1996 இல் அதிமேதகு ஜனாதிபதி அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

ஜனாதிபதி அவர்கள் இக் கொள்கை ஆவணத்தை கொள்கை அடிப்படையில் ஏற்றுக் கொண்டதுடன், இதற்கென பல்கலைக்கழக கல்வி தொடர்பான செயலணி ஒன்றை நியமனஞ் செய்தார். இச் செயலணி திட்டவட்டமாக அடையாளம் காணப்பட்டுள்ள குறிக்கோள்கள், அமுலாக்கலுக்கான குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள் என்பவற்றுடன் அமுலாக்கல் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டியிருந்தது. மேலும், பல்வேறு சீர்திருத்தங்களையும் அமுல் செய்வதற்கு பொறுப்பான அதிகார அமைப்புக்கள் நிறுவனங்கள் என்பவற்றை அது இனங்கான வேண்டி இருந்ததுடன், அமுலாக்கல் தொடர்பான காலக்கெடுவையும் நிர்ணயம் செய்ய வேண்டியிருந்தது. இச் செயலணிக்கு கல்வி, உயர் கல்வி அமைச்சர் திரு. ரிச்சர்ட் பத்திரன தலைவராக இருந்தார். இதில் டாக்டர் தாரா டி மெல், கல்வி, மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர்கள், கலாசார அலுவல்கள் அமைச்சர், பல்கலைக்கழக உபவேந்தர்கள், கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளர், தேசிய கல்வி ஆணைக்குழுவின் அதிகாரிகள் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

பல்கலைக்கழக கல்வி தொடர்பான ஜனாதிபதி செயலணி 9 தொழில்நுட்பக் குழுக்களுக்கு ஊடாக அதன் பணிகளை மேற்கொண்டது. அக்குழுக்களின் அறிக்கைகள் தேசிய கல்வி ஆணைக்குழுவின் திட்டமிடலுக்கு பொறுப்பான உபதலைவரான கலாநிதி கே. டி. அருள்பிரகாசம் அவர்களால் ஒருங்கிணைக்கப்பட்டன.

இந்த விதத்தில் பல்கலைக்கழக கல்வி தொடர்பான சீர்திருத்தங்களின் அமுலாக்கல் திட்டமொன்று நிறைவேற்றுச் சுருக்க வடிவத்தில் தயாரிக்கப்பட்டதுடன் ஜனாதிபதியின் செயலணி அது குறித்துக் கலந்துரையாடியது. பல்கலைக்கழக அமைப்பில் சீர்திருத்தங்களை எடுத்து வர விழையும் அந்த ஆவணமும் பல்கலைக்கழகச் சமூகத்தின் பரந்த மட்டத்திலான கருத்தொற்றுமையை பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியம் என்ற கருத்தை ஆணைக்குழு கொண்டிருந்தது. எனவே, அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் உபவேந்தர்களுக்கு ஊடாகவும் பல்வேறு அதிகார தரப்புக்களுக்கு ஊடாகவும் அனைத்து மட்டங்களிலுமான கலந்துரையாடலொன்றுக்கு இந்த ஆவணம் உட்படுத்தப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. இத்தகைய ஒரு செயன்முறை அதிக அளவில் காலத்தை எடுப்பதாக இருந்து வந்த போதிலும் அது அவசியம் என உணரப்பட்டது. எதிர்பார்க்கப்பட்டது போலவே இது தொடர்பாக பல்வேறு யோசனைகளும், கருத்துரைகளும் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டிருந்தன. இவற்றை கவனத்தில் எடுத்து உரிய பகுப்பாய்வுக்கு உட்படுத்திய பின்னரேயே இறுதி ஆவணம் தயாரிக்கப்பட்டது.

இந்த ஆவணத்தின் நிறைவேற்றுச் சுருக்கம் ஜனாதிபதி செயலவணியினால் அதிமேதகு ஜனாதிபதி அவர்களிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பிக்கப்பட்டது. ஜனாதிபதி அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டதுடன், அதனை அமுல் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என பணிப்புரைகளை வழங்கினார். இந்த அமுலாக்கல் செயன்முறைக்கு பொறுப்பாக இருந்து வரும் பொருட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவரின் தலைமையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர், ஒரு சில உபவேந்தர்கள் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு குழு அமைக்கப்பட்டது. பல்கலைக்கழக கல்வியில் செயற்படுத்தப்பட்டு வரும் சீர்திருத்தங்கள் கீழே எடுத்து விளக்கப்படுகின்றன.

**பாடத் திட்டம், பாடநெறி கட்டமைப்பு மற்றும் பரீட்சைகள்**

பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டங்களும் பாடநெறிகளும் காலத்துக்கு ஒவ்வாதவையாக இருந்து வருவதுடன், முன்னேற்றங்கள் மற்றும் மாற்றங்கள் என்பவற்றுடன் பொருந்திச் செல்லக் கூடியவையாக இருந்து வரவில்லை என்ற விடயமும் கடந்த சில வருடங்களாக கண்டறியப்பட்டிருந்தது. இப்பாடநெறிகள் தேசியத் தேவைகளை நிறைவு செய்து வைக்கவுமில்லை; பல்கலைக்கழக அமைப்பில் சேர்ந்து கொள்வதற்கு விழையும் இடையறாது அதிகரித்து வரும் இளைஞர்களின் அபிலாசைகளை நிறைவு செய்து வைக்கக் கூடியவையாக இருந்து வரவுமில்லை. அண்மைய வருடங்களில் வேலையற்றவர்களின் பட்டியலில் வேலையில் அமர்த்தப்பட முடியாதவர்களின் பட்டியலில் சேர்ந்து கொள்ளும் பட்டதாரிகளின் எண்ணிக்கை இடையறாது அதிகரித்து வந்துள்ளது. முக்கியமாக இதற்கு இரண்டு காரணங்கள் பங்களிப்புச் செய்திருப்பதனை காண முடிகிறது:

1. பாடங்களும் பாடச் சேர்க்கைகளும் பெருமளவுக்கு நெகிழ்ச்சித் தன்மை அற்றவையாக இருந்து வந்துள்ளன.

இப் பாடங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கும் பெரும்பாலான விடயங்கள் நவீன உலகுக்கும் எதிர்காலத்துக்கும் பொருத்தமற்றவையாக காணப்பட்டன.

2. புதிய மாற்றங்களை எடுத்து வருவதிலும் கல்வித் தேவைகளை விரிவடைந்து வரும் பொருளாதாரத்தின் பல்வேறுபட்ட தேவைகளுடன் பொருத்தி, அதற்கேற்ப புதிய நெறிகளை துவக்கி வைப்பதிலும் பாடத்திட்டங்களை வகுப்பதிலும் பீடங்களைச் சேர்ந்தவர்களும் தயக்கம் தெரிவித்து வந்துள்ளனர்.

பல பாடங்களும் பாடங்கள் தொடர்பான சேர்க்கைகளும் 50 வருட காலமாக மாற்றமடையாது இருந்து வந்துள்ளன. நான் பல்கலைக்கழகத்தில் படித்த காலத்தில் உயிரியல் விஞ்ஞானத் துறை தாவரவியல், இரசாயனம் மற்றும் விலங்கியல் ஆகிய பாடங்களைக் கொண்டிருந்தது. இன்றும் அது அவ்வாறே உள்ளது. அந்தக் காலத்தில் ஒரேயொரு பல்கலைக்கழகம் மட்டுமே இருந்து வந்தது. அதிலிருந்து இத்தகைய பாடங்களைக் கற்று வெளியேறிய சிறு எண்ணிக்கையிலான பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு அப்பொழுது நிலவியது. ஆனால், தற்பொழுது 9 பல்கலைக்கழகங்களிலிருந்தும் சுமார் 900 பட்டதாரிகள் ஒரே விதமான பாடநெறிகளைக் கற்று வெளியேறுகிறார்கள். ஆனால், தொழில் சந்தையில் வரையறுக்கப்பட்ட தொழில் வாய்ப்புக்களே காணப்படுகின்றன.

கலைத்துறைப் பட்டதாரிகளைப் பொறுத்தவரையில் நிலைமை மேலும் மோசமானதாக உள்ளது. கலைத்துறையில் கல்வி பயிலும் மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் பிரவேசிக்கும் சந்தர்ப்பத்தில் பொதுவாக தமக்கு எளிதான பாடங்களை தெரிவு செய்து கொள்கிறார்கள். உதாரணமாக மொழிப் பாடம் (ஆங்கிலம் அல்ல) அரசறிவியல் மற்றும் தர்க்கவியல் போன்ற பாடச் சேர்க்கைகளை மாணவர்கள் தெரிவு செய்கிறார்கள். இந்த நிலையில் அரசாங்கம் பெரும் முதலீடுகளை செய்துள்ள பட்டதாரி ஒருவர் உருவாக்கப்படுகிறார். இறுதியில் இந்த நபரினால் தனக்கோ அல்லது அரசுக்கோ அத்தகைய பிரயோசனமும் ஏற்படுவதில்லை. இதை விடவும் மோசமான விஷயம் என்னவென்றால் பட்டதாரி ஒருவர் தனது தகுதிக்கும் அந்தஸ்துக்கும் ஏற்ற விதத்தில் தொழில் வாய்ப்பொன்றை வழங்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருந்து வருகின்றது என்று கருதுவதாகும். குறிப்பாக பெருமளவுக்கு தொழில்சார் அடிப்படையை கொண்டிருக்கும் பாடநெறிகளைப் பொறுத்த வரையில் இத்தகைய பிரச்சினைகள் தோன்றி வருகின்றன. வருடாந்தம் விவசாயத் துறையில் சுமார் 400 பேர் பட்டம் பெற்று பல்கலைக் கழகங்களிலிருந்து வெளியேறுகின்றார்கள். இவர்கள் அனைவரும் தமக்கு அரச துறையில் உத்தியோகம் கிடைக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றார்கள். ஆனால், இது நடைமுறையில் சாத்தியமில்லை. அரசுக்கு பெரும் செலவை ஏற்படுத்தும் 4 வருடகால கல்வியின் பின்னர் இப்பட்டதாரிகள் ஒன்றில் வேலையற்றவர்களாக இருந்து வருகின்றார்கள்; அல்லது தமக்கு பொருத்தமற்ற வேலைகளில் (கீழ் உழைப்பில்) அமர்த்தப்படுகின்றார்கள்.

வருடாந்தம் சுமார் 800 மருத்துவத் துறைப் பட்டதாரிகள் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறுகிறார்கள். இனியும் அரச துறையில் வேலை வாய்ப்புக்கள் கிடைப்பது சாத்தியமில்லை என்பதனை அவர்களும் உணர்ந்து கொண்டுள்ளார்கள். அரச சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் மருத்துவர்களின் எண்ணிக்கை அதிகரித்தாலும் கூட நீண்டகால அடிப்படையில் அதனைத் தொடர்ச்சியாக மேற்கொள்ள முடியாது. தொழில் துறை சாராத துறைகளில் பயின்று வெளியேறும் பட்டதாரிகள் தமது சொந்த தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க வேண்டும் என அடிக்கடி அவர்களுக்கு அறிவுரை கூறப்பட்டு வருகின்றது. அதே அறிவுரையை இப்போது மருத்துவத் துறைப் பட்டதாரிகளும் பின்பற்ற வேண்டிய தருணம் வந்துள்ளது.

இந்தப் பின்புலத்திலேயே பல்கலைக்கழகக் கல்வியின் பாடத்திட்டம் பாடநெறிக் கட்டமைப்பு, மதிப்பீட்டு முறைகள் மற்றும் வழங்கப்படும் பட்டங்களின் இயல்பு என்பவற்றில் தீவிரமான மாற்றங்களை எடுத்து வருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பாடங்களின் மட்டத்தில் காலத்துக்கு ஒவ்வாத பாடங்களை நீக்கி புதிய பாடங்களை உள்ளடக்கக் கூடிய விதத்தில் பாடத்திட்டம் திருத்தியமைக்கப்படுதல் வேண்டும். இன்றைய சமூக, தேசியத் தேவைகளுக்கு பொருந்தக்கூடிய பிரயோக விடயங்களை உள்ளடக்கும் விதத்தில் புதிய தகவல்களை சேர்த்து பாடத்திட்டம் பலப்படுத்தப்படுதல் வேண்டும். அனைத்து மாணவர்களும் குறிப்பிட்ட ஒரு பாடத்தை அதன் ஒட்டுமொத்த வடிவத்தில் படிக்க வேண்டும் எனக் கருதுவது காலத்துக்கு ஒவ்வாததாகும். அத்துடன் அது எதிர்பார்க்கப்படும் பயனையும் எடுத்து வர மாட்டாது.

பல்கலைக்கழக கல்வி சீர்திருத்தங்களின் கீழ் மொடியூல் முறை சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இது பீடங்களுக்கு இடையில் பாடங்களை தெரிவு செய்து கொள்வதற்கான வாய்ப்பினை வழங்குகின்றது. இதன் மூலம் பாரிய அனுகூலங்கள் கிட்ட முடியும். மாணவர்கள் தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டப்படிப்பில் விரிவான ஒரு தொகுதியிலிருந்து பாடங்களை தெரிவு செய்து கொள்ளும் வாய்ப்பைப் பெறுவார்கள். அதற்கு ஊடாக வேலையில் அமர்த்தப்பட முடியாத பட்டதாரிகளை படியாக்கம் செய்யும் முறை நீக்கப்பட்டுவிடும்.

விஞ்ஞானத் துறை மாணவர்கள் வேறு பீடங்களைச் சேர்ந்த தமக்கு விருப்பமான பயனுள்ள மொடியூல்களை தெரிவு செய்துகொள்ள முடியும். இதன் மற்றொரு அனுகூலம் மாணவர்கள் முதல் வருடத்திலேயே தாம் பயில விருக்கும் 03 அல்லது 04 பாடங்களை இறுதியாக தெரிவு செய்து கொள்ள வேண்டிய தேவை இல்லாதிருப்பதாகும். கல்வி நிறுவனங்களிலும் அதே போல கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி என்பவற்றிலும் பொதுத் துறையையும் தனியார் துறையையும் சேர்ந்த நிபுணர்கள் நேரடியாக சம்பந்தப்பட வேண்டும் என இச் சீர்திருத்தங்கள் எதிர்பார்க்கின்றன. பொருத்தமான சந்தர்ப்பங்களில் தொழிலில் அமர்த்தி பயிற்சியளித்தல், தொழிற்சாலை பயிற்சி மற்றும் விடுமுறைக் கால வேலை வாய்ப்புக்கள் என்பவற்றுக்கும் வாய்ப்புக்களை அளிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த வகையில் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் பட்டதாரிகள் வேலை உலகின் மனப்பாங்குகள் இயல்புகள் என்பவற்றை நன்கு அறிந்தவர்களாகவும் அவற்றுக்கு ஏற்ற விதத்தில் தம்மை உருவாக்கிக் கொண்டுள்ளவர்களாகவும் இருந்து வருவார்கள்.

வருட முடிவு மற்றும் பட்டப் பாட நெறி முடிவு என்பவற்றின் போது பரீட்சைகளை நடத்தும் விடயத்தில் தற்பொழுது அதிகளவுக்கு அழுத்தம் காட்டப்பட்டு வருகின்றது. இனிமேல் இம்முறை நீக்கப்படும். பாடநெறி மதிப்பீடுகள், செய்திட்ட வேலை மற்றும் தொழில்கூட பயிற்சி என்பவற்றுக்கான புள்ளிகள் என்பவற்றுக்கு அதிக அளவுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பொருத்தமான சந்தர்ப்பங்களில் ஒரு வருடம் அல்லது அதற்கு குறைவான காலப் பிரிவு தொடர்பாக ஒரு கைத்தொழில் துறையில் அல்லது ஒரு வேலைத் தலத்தில் அனைத்தும் அடங்கிய ஒரு பாடநெறி வழங்கப்படும். இது பொதுவான பட்டப்படிப்பு முறையின் ஒரு பாகமாக கருதப்படும். பரீட்சை முறையில் அறிமுகம் செய்து வைக்கப்படும் நெகிழ்ச்சித் தன்மை மாணவர்கள் தமது தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் பொருட்டு வேலைகளில் ஈடுபடுவதற்கு நேரத்தை ஒதுக்குவதற்கும் உதவ முடியும்.

### புதிய பாடங்களின் அறிமுகம்

கடந்த காலத்தில் எமது பல்கலைக்கழக அமைப்பு புத்தாக்கத் திசைகளில் மாற்றங்களை எடுத்து வரும் விஷயத்தில் அவ்வளவாக ஆர்வம் காட்டியிருக்கவில்லை. பாரம்பரிய மாதிரியிலிருந்து விலகிச் செல்லும் பாடநெறிகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்த அளவிலேயே இருந்து வந்தது. உள்ளடக்கத்தில் புலமைத் துறை சார்ந்ததாகவும், கல்வித்துறை சார்ந்ததாகவும் இருந்து வராத பாடங்கள் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்துக்கு சொந்தமான பாடங்களாக இருந்து வரவில்லை என்ற ஒரு மனப்போக்கே இது வரை காலமும் நிலவி வந்துள்ளது. எவ்வாறிருப்பினும், எமது சிந்தனை ஒரே இடத்தில் தேங்கிக் கிடந்த அதே வேளையில் உலகின் பெரும்பாலான பாகங்களில் கிழக்கிலும் மேற்கிலும் மனப்பாங்குகளும் அணுகுமுறைகளும் மிகவும் தீவிர மாற்றங்களை எதிர்கொண்டு வந்துள்ளன. எமது புதிய பல்கலைக்கழகங்களில் சில பொருளாதார அபிவிருத்தியுடன் நேரடியாக தொடர்பு கொண்டிருக்கும் புதிய பாடநெறிகளையும் எழுச்சி கண்டு வரும் புதிய வேலை வாய்ப்புக்களுக்கு பொருந்தக் கூடிய பாட நெறிகளையும் ஆரம்பித்து வருகின்றன. அடுத்து வரும் வருடங்களில் பெருமளவுக்கு செழிப்பு நிலையை எட்டக் கூடிய ஒரு முக்கிய பொருளாதார நடவடிக்கைத் துறை சுற்றுலாக் கைத்தொழிலாகும். அத்தகைய புதிய துறைகளின் தேவைகளை கவனத்தில் எடுத்து பல்கலைக்கழகங்கள் பாடநெறிகளை ஆரம்பிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். உயிரினவியல் சூழல் சுற்றுலாத் துறை பெருமளவுக்கு பொருளாதார திறனைக் கொண்ட துறையாக இருந்து வருவதுடன், இதற்கென பல்லுயிர் பெருக்கம் உயிரினவியல் சூழல் மாசடைதல் மற்றும் தொல்லியல் முதலிய சிறப்புப் பிரிவுகளில் பயிற்சி பெற்றிருக்கும் ஆளணியினர் அதிக அளவில் தேவைப்படுகின்றனர். அதே போல தகவல் தொழில் நுட்பம் தொடர்பாகவும் இப்பொழுது அதிகளவுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றது. இந்த அடிப்படையில் தொலைத்தொடர்புத் தொழில்நுட்பம் செய்மதி தொழில்நுட்பம் போன்ற துறைகளில் புதிய பாடநெறிகளை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்பும் பெருமளவுக்கு நிலவி வருகின்றது.

இதுவரை காலமும் நாங்கள் க. பொ. த. உயர்தர வகுப்பில் போதிக்கப்பட்ட பாடங்களை அடிப்படையாகக் கொண்டே பல்கலைக்கழகத்தில் பாட நெறிகளை உருவாக்கும் நடைமுறையை பின்பற்றி வந்துள்ளோம். உதாரணமாக, ஒரு மாணவன் பல்கலைக்கழகத்தில் ஒரு பாடத்தை படிப்பதற்கு தகைமை பெறுவதற்கு க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் அதனை ஒரு பாடமாக எடுத்திருக்க வேண்டும். ஒரு சில துறைகளில் மட்டுமே இந்த அணுகுமுறை மாற்றமடைந்துள்ளது. தொல்லியல் மற்றும் சட்டங்கள் போன்ற பாடங்கள் இதற்கு விதிவிலக்குகளாக இருந்து வருகின்றன.

க. பொ. த. உயர்தரப் பரீட்சை பொதுக் கல்வி முறைக்கும் பல்கலைக்கழக கல்வி முறைக்கும் இடையிலான பிணைப்புச் சங்கிலியாக இருந்து வருகின்றது. பொதுக் கல்வி தொடர்பான சீர்திருத்த நிகழ்வுப்போக்கு இப்பொழுது செயற்படுத்தப்பட்டு வருவதுடன், அது க. பொ. த. உயர்தர மட்டத்தில் பாடசாலையைத் தெரிவு செய்து கொள்ளும் விடயத்தில் மாணவர்களுக்கு அதிகளவிலான தெரிவுகளையும் நெகிழ்ச்சித் தன்மையையும் வழங்கும் குறிக்கோளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் க. பொ. த. உயர்தர வகுப்பைப் பூர்த்தி செய்துள்ள மாணவர்களின் பன்முக ஆற்றல்கள் விருத்தி செய்யப்படுவதுடன் வேலை வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கொள்வதற்கு வாய்ப்பினைப் பெறாதிருக்கும் சுமார் 90% ஆன க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களின் தேவைகளை நிறைவு செய்து வைக்கும் இந்த தொலை நோக்குடன் கூடிய கொள்கைகள் ஒரு சில பல்கலைக்கழக பீடங்களின் தவறான அணுகுமுறை காரணமாக பயனற்றுப் போகக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. இப்பல்கலைக்கழக பீடங்கள் பட்டப் பாட நெறிக்கு 03 பாடங்களை முன் நிபந்தனையாக விதிக்கின்றன. இந்த தவறான அணுகுமுறை பெருந்தொகையான மாணவர்களின் எதிர்காலத்தின் மீது பாரிய தாக்கங்களை எடுத்து வருகின்றது. பெரும்பாலான மாணவர்களும் அதே போல அவர்களுடைய பெற்றோரும் வைத்தியம் மற்றும் பொறியியல் போன்ற பீடங்களின் பல்கலைக்கழக பிரவேசத்தையே விரும்புகின்றார்கள் என்பது யாவரும் அறிந்த விடயமாகும். அதே போல க. பொ. த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் 3-4 சதவீதத்தினரை மட்டுமே எமது பல்கலைக்கழக அமைப்பினால் உறிஞ்சிக் கொள்ள முடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதும் யாவரும் அறிந்த ஒரு விடய மாகும். பல்கலைக்கழக அனுமதியை பெற்றுக் கொள்ள முடியாதவர்கள் தமது வருங்காலத்துக்கான வாய்ப்புக் களை வேறு இடங்களில் தேட வேண்டியுள்ளது. இந்த நிலையில் குறித்துரைக் கப்பட்ட பாடங்களை கற்பது தவிர க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர் களுக்கு வேறு மாற்று வழிகள் இருந்து வருவதாக தெரியவில்லை. பல்கலைக் கழக அனுமதி கிடைக்காத சந்தர்ப் பத்தில் இந்தப் பாடங்களின் சேர்க்கை அவ்வளவு பயனுள்ளதாக இருந்து வர முடியாது. ஏனைய பீடங்களைப் பொறுத்த வரையிலும் கூட சற்றுக் குறைந்த அள விலேனும் இதே நிலைமையே நிலவி வருகின்றது. கட்டாயப் பாடங்களின் எண்ணிக்கையை ஒரு பாடமாக குறைக் கும் யோசனையை எமது பல்கலைக்கழக அமைப்பு கவனத்தில் எடுக்க வேண்டும். ஏனைய இரு க. பொ. த. உயர்தர பாடங்களை தெரிவு செய்வதில் மாண வர்களுக்கு சுதந்திரம் வழங்கப்படுதல் வேண்டும். இது பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற முடியாத மாணவர்களுக் கும்கூட ஒரு நல்ல எதிர்காலத்துக்கு உத்தரவாதம் அளிக்க முடியும்.

### மாணவர் நலன்புரிச் சேவைகள்

பாடநெறிகள், தொழில் வாய்ப்புக் கள் போன்ற விடயங்கள் தவிர பல் கலைக்கழக அமைப்பில் மாணவர்களின் வாழ்க்கையில் நமது கவனத்தை வேண்டி நிற்கும் வேறு சில முக்கிய அம்சங்களும் இருந்து வருகின்றன. ஒரு மாணவன் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிச் செல்லும் வரையிலான காலப் பிரிவு முழுவதிலும் அம் மாணவனின் நலன்கள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டி உள்ளன. அக்கட்டங்களை பின்வருமாறு குறிப்பிடலாம்:

1. பல்கலைக்கழக அனுமதிக்கு முன்னரான கட்டம்.
2. பல்கலைக்கழக அனுமதி மற்றும் அறிமுகக் கட்டம்.
3. பல்கலைக்கழகச் சூழலில் மாண வன்.
4. சமூக வாழ்க்கைக்குப் தொழிலுக் கும் தயாராகும் மாணவன்.

பல்கலைக்கழகங்கள் இந்தக் கட் டங்கள் அனைத்தையும் உள்ளடக்கும் விடயத்தில் தமது நலன்புரிச் சேவை களை அபிவிருத்தி செய்து வழங்கி வரு தல் வேண்டும். ஒரு மாணவன் பல் கலைக்கழகச் சூழ்நிலையில் தன் மீது உரிய கவனமும் பராமரிப்பும் வழங்கப் பட்டு வருகின்றது என்பதனையும் பல் கலைக்கழக அமைப்பு தனக்கு உரியதாக இருந்து வருகின்றது என்பதனையும் உணர்வது அவசியமாகும். மாணவர்களின் குறைபாடுகளும், பிரச்சினைகளும் ஆரம் பத்திலேயே அடையாளம் காணப்பட்டு தீர்த்து வைக்கப்படுதல் வேண்டும். இதற் கென பல்கலைக்கழக ஆளணியினர் - மாணவர் உரையாடல் இடையறாது இடம் பெற்று வருதல் அவசியமாகும்.

### தொழில் வழிகாட்டுதல் அலகுகளின் ஸ்தாபிதம்

பாடத் திட்டங்களிலும் பாடநெறி களிலும் எடுத்து வரப்படவிருக்கும் மாற் றங்கள் வெற்றிகரமாக செயற்படுத் தப்பட வேண்டுமானால் தொழில் வழி காட்டுதல் அலகுகளின் ஸ்தாபிதம் அத் தியாவசியமாகும். பல்கலைக்கழக ஆசிரி யர்களும் பல்கலைக்கழக அமைப்பும் உண்மையிலேயே தமது நலன்களை கவனத்தில் எடுத்து வரவில்லை என்ற குறைப்பாட்டை மாணவர் சமூகம் அடிக் கடி முன் வைக்கின்றது. இந்தக் கருத்துக் களில் கணிசமான அளவில் உண்மை உள்ளது.

தொழில் வழிகாட்டுதல் அலகுகள் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் ஸ்தாபிக்கப்படவுள்ளன. அவை தனிப் பட்ட முறையில் ஒவ்வொரு மாணவனு டனும் மிகவும் நெருக்கமான விதத்தில் செயற்பட்டு, அவர்களுடைய அபிலாசை களையும் தேவைகளையும் மதிப்பிட்டு மிகவும் பொருத்தமான பாட நெறிகளுக் குள் அவர்களை இட்டுச் செல்லும் பணியை மேற்கொள்ளும். மேலும், இந்த அலகுகள் மாணவர்களுக்கு விடுமுறைக் காலத்தின் போது வேலை வாய்ப்புக் களை பெற்றுக் கொடுப்பதுடன், தொழி லில் அமர்ந்து பயிற்சி பெறும் வாய்ப்புக் களையும் பெற்றுக் கொடுக்கும். அது மட்டுமன்றி மாணவர்களுக்கும் பொருத்த மான வேலை கொள்வோருக்கும் இடையே தொடர்புகளையும் அவை ஏற் படுத்திக் கொடுக்கும். சுருக்கமாகச் சொல் வதானால் ஒரு மாணவன் பல்கலைக் கழகத்தில் அனுமதிக்கப்படுவது தொடக் கம் அவன் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிச் செல்லும் வரையில் இந்த அலகுகள் அவர்களுடன் இடையறாது தொடர்புகளை பராமரித்து வரும்.

இந்த தொழில் வழிகாட்டுதல் அலகுகள் தகவல் தளமொன்றைக் கொண்டிருப்பதுடன், அது பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவில் அமைந்துள்ள மத்திய தரவுகள் தளத் துடன் பிணைக்கப்பட்டிருக்கும். இத் தரவுகள் தளம் தொழில் சந்தை குறித்த தரவுகளை உள்ளடக்கியிருப்பதுடன், புதிய நிலைமைகளுக்கு ஏற்ப தகவல்களை திருத்தியமைத்துக் கொள்ளும். மாணவர் கள் தொடர்பான விபரத் தொகுப்புக் களையும் அவை கொண்டிருக்கும். தொழில் சந்தையில் புதிய வாய்ப்புக்கள் ஏற்படும் பொழுது பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழு அது குறித்து பல் கலைக்கழக பீடங்களுக்கு தெரிவிக்கும். இந்தப் பணிகளை நிறைவு செய்து வைக் கும் பொருட்டு ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் அமைந்திருக்கும் தொழில் வழிகாட்டுதல் அலகு பயிற்றப்பட்ட ஆளணி மற்றும் உள்கட்டமைப்பு வசதி கள் என்பவற்றை கொண்டிருக்க வேண் டும். இந்த அலகுக்கு (பொருத்தமான விதத்தில் பயிற்றப்பட்ட பல்கலைக்கழக) கல்விமான் ஒருவர் பணிப்பாளராக இருந்து வருவதுடன் அவரின் தலைமை யின் கீழ் இது இயங்கும். பயிற்றப்பட்ட தொழில் வழிகாட்டுதல் அதிகாரிகள் ஒரு வர் அல்லது இருவர் இதில் சேர்த்துக் கொள்ளப்படுவதுடன் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பகுதி நேர அடிப் படையில் இதில் பணியாற்றுவார்கள். கணிப்பொறி பிரயோக உதவியாளர் களும் நிர்வாக உதவியாளர்களும் பொருத்தமான விதத்தில் சேவையில் அமர்த்தப்படுவார்கள். தொழில் வழி காட்டுதல் அலகு சீர்திருத்தி அமைக்கப் பட்ட பல்கலைக்கழக அமைப்பின் மையப் புள்ளியாக செயற்பட்டு வரும்.

### ஆளணியினருக்கான பயிற்சி

பல்கலைக்கழக சீர்திருத்தங்களின் குறிக்கோள்களில் ஒன்று பட்டதாரி மாண வர்களுக்கு வழங்கப்படும் கல்வியின் தரத்தை விருத்தி செய்வதாகும். இது பாடத்திட்டத்தின் தரத்தை விருத்தி செய் வதன் மூலமும், பல்கலைக்கழக ஆசிரியர் களின் தரத்தினை விருத்தி செய்வதன் மூலமும். சாதித்துக் கொள்ளப்படும். பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு போதனா முறையில் பயிற்சி வழங்கப் படும் ஒரு மரபு இது வரையில் இருந்து வரவில்லை. இறுதித் தேர்வில் முதலாம் வகுப்பில் அல்லது இரண்டாம் வகுப்பில் சித்தியடையும் எந்த ஒரு பட்டதாரியும் இயல்பிலேயே ஒரு நல்ல ஆசிரியராக இருந்து வருவார் என அனுமானிக்கப்பட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளது. இது யதார்த்தத்துக்கு முறணானதாகும். பெரும்பாலான சந் தர்ப்பங்களில் உண்மை நிலவரம் இந்த அனுமானத் துக்கு நேர்மாறானதாகவே இருந்து வந்துள்ளது. எனவே, ஒவ் வொரு பல்கலைக்கழகமும் ஆசிரியர் பயிற்சி அலகொன்றை ஸ்தாபித்துக் கொள்ள வேண்டும் என முடிவு செய் யப்பட்டுள்ளது. ஒரு சில பல்கலைக் கழகங்கள் ஏற்கனவே இந்த அலகினை ஸ்தாபித்திருப்பதுடன், ஏனையவை அதற் கான நடவடிக்கைகளை இப்பொழுது எடுத்து வருகின்றன.

எதிர்காலத்தில் பல்கலைக்கழக விரி வுரையாளர்களாக புதிதாக சேர்த்துக் கொள்ளப்படும் அனைவர்களும் தமது தொழில் தகைமை காலப் பிரிவின் போது குறித்துரைக்கப்பட்ட ஒரு பாடநெறியை யும் பயிற்சிக் காலம் ஒன்றையும் பூர்த்தி செய்வது அவசியமாகும். நியமனத்தை ஊர்ஜிதம் செய்வதற்கு இது அவசியமாக இருக்கும். மேலும், பல்கலைக்கழகங் களின் தொழில்நுட்ப மற்றும் நிர்வாக ஆளணியில் புதிதாக சேர்ந்து கொள்ப வர்களுக்கும் இந்த நிபந்தனை பொருந் தும். பல்கலைக்கழகத்தில் உயர் மட்டங் களில் தொழில் புரிபவர்களின் செயல் பாடுகளை காலத்துக்காலம் மதிப்பீடு செய்யக்கூடிய முறைகளையும் பல்கலைக் கழகங்கள் உருவாக்கிக் கொள்ளும்.

### பொது மற்றும் தனியார் துறை நிறு வனங்களுடனான கூட்டுச் செயற்பாடு

பல்கலைக்கழகங்கள் பொதுவாக கல்வி சார் நடவடிக்கைகளைக் கொண்ட தனித் தீவுகளாக இயங்கி வந்துள்ளன. பல்கலைக்கழகங்களின் அறிவுத்துறை வளங்களையும் உள்கட்டமைப்பு வளங் களையும் நாடு உச்ச மட்டத்தில் பயன் படுத்திக் கொள்ள வேண்டிய ஒரு சூழ் நிலை நிலவி வரும் இந்தத் தருணத்தில் அத்தகைய தனித்துவிடப்பட்ட நிலைமை விரும்பத்தக்கதல்ல. பல்கலைக்கழகத்தின் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக் கைகளிலும் கொள்கை மற்றும் முடிவு களை மேற்கொள்ளும் செயன்முறை யிலும் பல்கலைக்கழகத்துக்கும் கைத் தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங் களுக்கும் இடையில் முடியுமான அள வுக்கு உச்சமட்டத்தில் இடைத்தொடர்பு களை ஏற்படுத்திக் கொள்வதற்கு எதிர் பார்க்கப்படுகின்றது. இத்தகைய நிறு வனங்களிலிருந்து சிறப்புத் தேர்ச்சி பெற்றிருக்கும் விரிவுரையாளர்களைப் பெற்று, மாணவர்கள் அத்தகைய ஆராய்ச் சியாளர்களுடன் பணி புரிவதன் மூலம் தமது பாடநெறிகளில் ஒரு பகுதியை பூர்த்தி செய்துகொள்ள முடியும். மேலும், பல்கலைக்கழக பீடங்களின் சபைகளிலும் ஆட்சி மன்றக் குழுக்களிலும் ஏனைய பேரவைகளிலும் அத்தகைய நிறுவனங் களின் பிரதி நிதிகளை அமர்த்த முடியும். உண்மையிலே இது இப்பொழுது ஓரள வுக்கு இடம்பெற்று வருகின்றது. எனி னும், வருங்காலத்தில் இந்த நடைமுறை விரிவாக்கப்பட்டு ஓய்வு பெற்ற ஆளணி யினரை பிரதிநிதித்துவம் செய்வதற்காக சேவையில் இருப்பவர்களை பிரதிநிதி களாக சேர்த்துக் கொள்வதற்கு நட வடிக்கை எடுக்கப்படல் வேண்டும். பாடத்திட்டத்தை அபிவிருத்தி செய்யும் செயன்முறையிலும் கூட இத்தகைய வெளி நபர்களின் பங்கேற்பு பயனுள்ள தாக அமையும். பல்கலைக்கழகங்கள் தனியார் துறைக்கும் பொதுத்துறைக்கும் ஆராய்ச்சிகள் மூலம் உதவும் முறையான ஏற்பாடுகளும் இருதரப்பினருக்கும் பரஸ் பரம் பயனுள்ளதாக அமைய முடியும். மேலும், பல்கலைக்கழக கல்விமான்கள் நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளில் உள்ளடக்கப்பட வேண்டியிருப்பதுடன் ஆலோசகர்களாகவும் அவர்களுடைய சேவைகளைப் பெற்றுக்கொள்ள வேண் டும்.

பொதுவாக அண்மைக் காலத்தில் பல்கலைக்கழகங்களிலிருந்து பட்டம் பெற்று வெளியேறுபவர்களின் ஒட்டு மொத்தத் தரம் மோசமானதாகவே இருந்து வந்துள்ளது. இதன் காரணமாக வேலையற்ற பட்டதாரிகளின் எண் ணிக்கை இடையறாது அதிகரித்து வந் துள்ளது. வேலை கொள்வோரின் தேவை களுக்கும் பட்டதாரிகள் பயின்றுள்ள விட யங்களுக்கும் இடையில் ஒரு பொறுத்தப் பாடு நிலவி வராமையே இதற்கான காரணமாகும். அது மட்டுமன்றி பல் கலைக்கழக பட்டதாரிகளைப் பொருத்த வரையில் ஆளுமை அபிவிருத்தி, தொடர் பாடல் திறன்கள் குறிப்பாக ஆங்கில மொழித் திறன்கள் என்பன குறைந்த மட்டத்தில் இருந்து வருவதும், சுதந்திர மான சிந்தனை, செயல்பாடு என்பவற் றுக்கான ஆற்றல் மட்டுப்படுத்தப்பட்ட தாக இருந்து வருவதும் இந் நிலைமையை தீவிரப்படுத்தியுள்ளது. இதற்கு மாணவர் களைக் குறை கூற முடியாது. அவர் களை உருவாக்கிய கல்வியமைப்பின் குறைபாடு காரணமாக இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. ஒரு சில பல்கலைக்கழ கங்கள் இதற்கான ஓர் இடைக்கால நிவர்த்தி வழிமுறையாக மாணவர்களுக் கான தேர்ச்சிகளை உயர்த்தும் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தி வருகின்றன. எவ்வாறிருப்பினும், புதிய நிகழ்ச்சித் திட்டங்களில் ஆங்கிலம், கணிப்பொறி அறிவு, தொடர்பாடல் திறன்கள் என்பன உள்ளார்ந்த பாகங்களாக உள்ளடக்கப் படுதல் அவசியமாகும்.

### சட்டத் திருத்தம்

இலங்கையின் பல்கலைக்கழக அமைப்பு தற்பொழுது 1978 ஆம் ஆண் டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் என் பவற்றின் கீழ் செயற்பட்டு வருகின்றது. இந்த 20 வருட காலத்தில் பல்கலைக்கழ கங்களிலும் அதே போல நாட்டிலும் கல்வி உலகிலும் பாரிய மாற்றங்கள் இடம்பெற்று வந்துள்ளன. இச் சட்ட வாக்கத்தை ஒட்டுமொத்தமாக மீளாய்வு செய்வதற்கென இப்பொழுது நடவடிக் கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பல் கலைக்கழகங்கள் தொடர்பான சீர்திருத் தங்களை செயற்படுத்துவதற்கு இத்த கைய மாற்றங்கள் அவசியமாகும்.

இச்சீர்திருத்தங்களின் அமுலாக்கல் பெருமளவுக்கு பல்கலைக்கழகங்களைச் சார்ந்த ஒரு பணியாக இருந்து வரு கின்றது. இச்சீர்திருத்தங்களை கண் காணிப்பதற்கென நியமிக்கப்பட்டுள்ள குழு இதற்கான வசதிகளை செய்து கொடுக்கும். ஒரு சில சீர்திருத்தங்களை செயற்படுத்துவதற்கு பல்கலைக்கழக ஆளணியினரின் ஒட்டுமொத்த அர்ப் பணிப்பும் அதிகளவில் புதிய சிந்தனை யும் செயலும் அவசியமாகும்.

பல்கலைக்கழகங்கள் தம்மை பல்வேறு திறன்களையும் கொண்ட தலை சிறந்த மையங்களாக உருவாக்கிக் கொள்ளும் பொருட்டு அவை சரியான திசையில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டி யுள்ளது. இது ஓரளவுக்கு ஏற்கனவே இடம்பெற்று வருகின்றது. பல்கலைக்கழ கங்களுக்கிடையிலான ஓரளவிலான போட்டி மனப்பான்மையும் வரவேற்கக் கூடியதே. பாடநெறிகள் கவர்ச்சிகர மானவையாக இருந்து வருவதனையும் தரச் சிறப்பு மிக்க ஆசிரியர்கள் பணி யாற்றி வருவதனையும் கருத்தில் கொண்டு மாணவர்கள் குறிப்பிட்ட நிறு வனங்களை தெரிவு செய்து கொள்வதற் கான ஆற்றலையும் கொண்டிருக்க வேண்டும். மாணவர்களின் கண்ணோட் டத்திலிருந்தும் அதே போல பல்கலைக் கழக அமைப்பின் கண்ணோட்டத்தி லிருந்து நோக்கும் பொழுதும் தற் போதைய மத்திய மயப்படுத்தப்பட்ட பல் கலைக்கழக அனுமதி முறையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய அவசி யம் தோன்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சி என்பவற்றில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்கள்

ஏ. ஈ. இஸட் பொர்னான்டோ

*ஆலோசகர் தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சி, தொழில் நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சி சீர்திருத்தங்கள் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் ஒருங்கிணைப்பாளர்*

**பின்னணி**

தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சி (தொ. க. தொ. ப.) துறை அரசாங்கத்தினதும் தனியார் துறையினதும் கணிசமான அளவிலான கவனத்தையும் கரிசனத்தையும் இப்பொழுது தன்பால் ஈர்த்து வருகின்றது. அரசாங்கம் தொழில் பயிற்சியை ஓர் அமைச்சு மட்டப் பணியாக தரமுயர்த்தியன் மூலம் இத் துறையை சீர்திருத்தி அமைத்து, முறையாக ஒழுங்குபடுத்துவதற்கென முக்கியமான சில முன்முயற்சிகளை எடுத்துள்ளது. 1994 தொடக்கம் தொழில் நுட்பக் கல்விக்கும் தொழில் பயிற்சிக்கும் பொறுப்பாக இருந்து வரும் முக்கிய நிறுவனங்கள் ஓர் அமைச்சின் கீழ் எடுத்து வரப்பட்டுள்ளன. (இவை 1997 ஜுன் தொடக்கம் தொழில் பயிற்சி, கிராமிய கைத்தொழில்கள் அமைச்சின் கீழும் அதற்கு முன்னர் தொழில் மற்றும் தொழில்பயிற்சி அமைச்சின் கீழும் செயற்பட்டு வந்துள்ளன).

1. மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு.
2. தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்.
3. இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை.
4. தொழில்நுட்பக் கல்விக்கான தேசிய நிறுவனம்.

இலங்கையில் தொழில்நுட்பக் கல்விக்கும் தொழில் பயிற்சிக்கும் பொறுப்பாக இருந்து வரும் இந்த நிறுவனங்களின் கடமைப் பொறுப்புக்களையும் பணிகளையும் நாம் அறிந்து கொள்வது முதலில் அவசியமாகும்.

*மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு:* இது தொழில் நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சி என்பவற்றுக்கான கொள்கை உருவாக்கம், ஒருங்கிணைப்பு, திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி என்பவற்றுக்கு பொறுப்பாக இருந்து வரும் நியதி முறையான முகவரகமாகும். அதன் பொறுப்புக்களில் தேர்ச்சிகள் தொடர்பான தர நிர்ணயங்களை வகுத்தல், பரீட்சித்தல் மற்றும் சான்றிதழ்களை வழங்கும் நடைமுறைகளை உருவாக்குதல் மற்றும் பயிற்சி நிறுவனங்களை பதிவு செய்தல் என்பனவும் அடங்குகின்றன. தர நிர்ணயங்களை வகுத்தல் பாட நெறிகளுக்கு தரச் சான்றினை வழங்குதல் என்பவற்றுக்கு ஊடாக இதன் பயிற்சியின் தரம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

*தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்:* சுமார் 100 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்டுள்ள இந்தத் திணைக்களம் நாட்டின் பிரதான நகரங்களிலும் மாவட்டத் தலைநகரங்களிலும் அமைந்திருக்கும் 34 தொழில்நுட்பக் கல்லூரிகள் மூலமும், அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் மூலமும் முறையான நிறுவன ரீதியான பயிற்சியை வழங்கி வருகின்றது. இத் திணைக்களம் பாரம்பரியமாக கல்வி, உயர்கல்வி அமைச்சின் கீழேயே இயங்கி வந்துள்ளது. இப்பொழுது அது தொழில் நுட்பக் கல்விக்கும் தொழில் பயிற்சிக்கும் பொறுப்பான புதிய அமைச்சின் கீழ் எடுத்து வரப்பட்டுள்ளது. இந்நடவடிக்கை உலகின் ஏனைய நாடுகளில் நிலவி வரும் நவீன போக்குகளுக்கு இணையானதாகவே உள்ளது.

சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் தொழில் திணைக்களம் பாடசாலையை விட்டு வெளியேறச் செல்பவர்களுக்கும் வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கும் என தொழில் பயிற்சியை வழங்கும் முன்னோடித் திட்டத்தை துவக்கி வைத்தது. இத் தொகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் உணர்ச்சிவசப்படக் கூடியவர்களாகவும், எளிதில் தூண்டப்படக் கூடியவர்களாகவும் இருந்து வருகின்றார்கள். கடந்த காலத்தின் போது தொழில் பயிற்சி நடவடிக்கைகள் விரிவடைந்து வந்திருப்பதுடன், கணிசமான அளவிலான முக்கியத்துவத்தையும் பெற்றுக் கொண்டுள்ளன. ஏனெனில், குறிப்பாக முறை சாராத துறைக்கு அவசரமாகத் தேவைப்படும் ஊழியர்களை வழங்குவதில் அது பயனுள்ள ஒரு பங்குப் பணியை வகித்து வந்துள்ளது. எவ்வாறிருப்பினும், தொழில் பயிற்சி அரசாங்கத் தொழில் திணைக்களம் ஒன்றுக்குள் வைக்கப்பட்டிருக்கும் வரையில் அதனை அபிவிருத்தி செய்வது சாத்தியமில்லாதிருந்தது. ஏனெனில், தொழில் திணைக்களம் தொழில் சட்டங்களை வகுப்பதிலும் செயற்படுத்துவதிலும் தனது கவனத்தை முக்கியமாக செலுத்தி வந்துள்ளது. இதன் காரணமாக அரசாங்கம் 1995 இல் இலங்கைத் தொழில் பயிற்சி அதிகார சபையை நியதி பூர்வமான ஒரு முகவராமாக ஸ்தாபித்தது. தொழில் திணைக்களத்தின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த அதிகார சபையின் கீழ் கொண்டு வரப்பட்டன. இந்த அதிகார சபை 176 கிராம தொழில் பயிற்சி மையங்களைக் கொண்ட ஒரு வலைப்பின்னல் அமைப்பின் மூலம் வழங்கப்பட்டு வரும் தொழில் வாய்ப்புக்களை அடிப்படையாகக் கொண்ட குறுகிய கால பாடநெறிகளை வழங்குவதன் மூலம் வேலையற்ற கிராமப்புற இளைஞர்களுக்கு அருந்தொண்டாற்றி வருகின்றது. இந்த வலைப்பின்னல் அமைப்புக்கு 11 மாவட்ட மையங்கள் தொழில் நுட்ப ஒத்துழைப்பையும் ஏனைய உதவிகளையும் வழங்கி வருகின்றன. இது தவிர மூன்று தேசிய நிறுவனங்கள் நீண்ட கால பாடநெறிகளை அடிப்படையாகக் கொண்டு சான்றிதழ்களை வழங்கி வருகின்றன.

**தொழில்நுட்பக் கல்விக்கான தேசிய நிறுவனம் (NITE)**

இந்த நிறுவனம் பயிற்றுவிப்பவர்களுக்கு பயிற்சியளித்தல் (அதாவது முகாமையாளர்கள், தொழில்நுட்ப ஆசிரியர்கள், தொழில் பயிற்சி போதனாசிரியர்கள் ஆகியோரை பயிற்றுவித்தல்), பாடத்திட்ட அபிவிருத்தி, பயிற்சி முறைமைகள் மற்றும் போதனா உபகரணங்கள் என்பவற்றுக்கு பொறுப்பாக இருந்து வருகின்றது. இது 1999 ஜனவரியில் சுதந்திரமான சட்டபூர்வ நிறுவனம் ஒன்றாக மாற்றியமைக்கப்பட்டது. ஒட்டுமொத்த தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சித் துறையில் பன்முகப்பட்ட விரிவடைந்து வரும் தேவைகளுக்கு ஏற்ற விதத்தில் சேவைகளை வழங்குவதற்கான தன்னாதிக்கத்தையும் நெகிழ்ச்சித் தன்மையையும் அந் நிறுவனம் இப்பொழுது கொண்டுள்ளது. தொழில்நுட்பக் கல்வி தொழில் பயிற்சித் துறையில் தற்பொழுது தொழில்நுட்பக் கல்லூரிகளும் அரசாங்கத்தின் ஏனைய பயிற்சி நிறுவனங்களும் மட்டும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. தனியார் துறை, அரசு சாரா அமைப்புக்கள், தொண்டு நிறுவனங்கள், சமய அமைப்புக்கள் என்பனவும் இத்துறைக் குள் இப்பொழுது அடங்கியுள்ளன. மேலும் தனியாரினால் நிதிப்படுத்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் பெருந்தொகையான பயிற்சி நிறுவனங்களும் இத்துறையில் இருந்து வருகின்றன.

முறையான தொழில் பயிற்சிக்கு தேசிய தொழில் பயிற்சி, கைத்தொழில் பயிற்சி அதிகார சபை பொறுப்பாக உள்ளது. அரசாங்கத் துறையைச் சேர்ந்த மேலே குறிப்பிடப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் தவிர பல்வேறு அமைச்சுக்களினாலும் முகவரகங்களினாலும் செயற்படுத்தப்பட்டு வரும் பல சிறப்புப் பயிற்சி நிறுவனங்களும் உள்ளன. இந்த நிறுவனங்களின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (தொலைத் தொடர்புகள், போக்குவரத்து, நிர்மாணம், புடவை மற்றும் ஆடைகள் போன்ற) அந்தந்தத் துறை சார்ந்த தேர்ச்சித் தேவைகளை நிறைவு செய்து வைப்பதனை நோக்கமாக கொண்டுள்ளன.

அரச துறையினால் வழங்கப்பட்டு வரும் தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் தொழில் பயிற்சி என்பவற்றின் 85 சத வீதமானவற்றுக்கு தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம், இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை மற்றும் தொழில்நுட்பக் கல்விக்கான தேசிய நிறுவனம் என்பன பொறுப்பாக இருந்து வருகின்றன. இவற்றில் தொழில்நுட்பக் கல்வி தேசிய நிறுவனம் தவிர ஏனைய முகவரகங்கள் அனைத்தும் தொழில் பயிற்சி அமைச்சின் கீழ் எடுத்து வரப்பட்டுள்ளன.

இத்துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பாக அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு 1999 வரவு செலவுத்திட்டம் குறித்த பத்திரிகைக் கட்டுரை ஒன்றில் பின்வருமாறு எடுத்து விளக்கப்பட்டிருந்தது:

"பொசன முன்னணி அரசாங்கத்தின் ஐந்தாவது வரவு செலவுத் திட்டத்தை நாங்கள் இங்கு சமர்ப்பிக்கும் வேளையில், அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் நிதி திட்டமிடல் அமைச்சர் என்ற முறையில் குறிப்பாக நாட்டின் இளம் தலைமுறையினரின் ஆற்றல்களை மேம்படுத்தும் நோக்குடன் திறன்கள் அபிவிருத்தி மற்றும் பயிற்சி என்பவற்றின் மீது அதிக அளவில் அழுத்தம் கொடுத்துள்ளார்" என பேராசிரியர் பீரிஸ் குறிப்பிட்டார். மனித வளம் இலங்கையின் மிகப் பெரும் சொத்தாக இருந்து வருகின்றது என சுட்டிக் காட்டிய அவர் மேலும் சொன்னார்: "இந்த திறன்களின் தரத்தை உயர்த்துவதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வது அரசாங்கத்தின் முதன்மைக் கடப்பாடாக இருந்து வருகின்றது. 1999 ஆம் வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தில் அடிச்சரராக ஓடும் அடிப்படை தொனிப் பொருள் இதுவாகும்."

### தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சி (தொ. க. தொ. ப.) துறையில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்கள்

தற்பொழுது நாட்டின் கல்வியமைப்பில் மேற்கொள்ளல் பட்டு வரும் சீர்திருத்தங்கள் பின்வரும் மூன்று உப துறைகளை உள்ளடக்குகின்றன:

* பொதுக் கல்வி
* பல்கலைக்கழகக் கல்வி
* தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சி

பொதுக் கல்வி மற்றும் பல்கலைக் கழக கல்வி என்பவற்றைப் பொறுத்த வரையில் அதனுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களான பாடசாலைகள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய அமைப்புக்கள் என்பன கல்வி உயர் கல்வி அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றன. தொழில்நுட்பக் கல்வி தொழில் பயிற்சித் துறை வேறுபட்டதாகும். பல்வேறு அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் தாபனங்கள் என்பனவும் அதே போல தனியார் துறையும் பல்வேறு வகைப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் வேலையற்ற இளைஞர்கள், கிராமிய மகளிர், பாடசாலையிலிருந்து விலகிச் செல்லும் இள வயதுப் பிரிவினர், தேர்ச்சியற்ற மற்றும் ஓரளவுக்கு தேர்ச்சி பெற்றிருக்கும் தொழிலாளர்கள் போன்ற பல்வேறு தரப்பினரையும் இலக்காகக் கொண்டுள்ளன. இலக்குக் குழுவினரின் வேறுபட்ட அளவுகளிலான கல்வி அடைவுகள் மற்றும் பயிற்சி ஆற்றல்கள் என்பவற்றுக்கு ஏற்ற விதத்தில் முறையான பயிற்சி, நிறுவன ரீதியான பயிற்சி, தொழிலை பயில்வதன் மூலம் பயிற்சி, தொழிலிருந்து கொண்டே பயிற்சி போன்ற பல்வேறு விதமான பயிற்சி முறைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சி தொடர்பான சீர்திருத்தங்கள் பின்வரும் துறைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன:

* அரசாங்கத்தின் பங்கு
* தொ. க. தொ. ப. வில் தனியார் துறையின் ஈடுபாடு.
* பொதுக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி மற்றும் தொ. க. தொ. ப. என்பவற்றுக்கிடையிலான பிணைப்பு.
* சுய தொழில் மற்றும் ஒழுங்கமைக்கப்படாத துறை என்பவற்றுக்கான பயிற்சி.

### அரசாங்கத்தின் பங்கு

பொருளாதாரத்தின் பிரதான துறைகள் அனைத்தும் அரச துறையின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்த கால கட்டத்தின் போது அரசினால் நடத்தப்பட்டு வந்த தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்களிலிருந்து வெளியேறுபவர்களுக்கென ஒரு தொழில் சந்தை இருந்து வந்தது. பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்ட பொழுது இந் நிலைமை மாற்றமடைந்ததுடன், தனியார் துறை பிரதான வேலை வாய்ப்பு மூலமாக உருவாகியது. அதன் விளைவாக அரச பயிற்சி நிறுவனங்களிலிருந்து படித்து வெளியேறுபவர்களுக்கு அரச துறையில் வேலைகள் கிடைக்கும் என்ற உத்தரவாதம் இல்லாமல் போய் விட்டது. இந்தச் சூழ்நிலையில் அவர்கள் தனியார் துறையில் தொழில்களை பெறுவதற்கென போட்டியிட வேண்டி நேரிட்டது.

தாராளமயமாக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தின் கீழ் பயிற்சி பெற்ற ஆளணியினரை பயன்படுத்திக் கொள்ளும் பிரதான முகவரகமாக அரசாங்கம் இருந்து வரவில்லை.

ஆனால், இத்தகைய பயிற்சிகளுக்கான செலவில் கணிசமான ஒரு விகிதத்தை அரசாங்கமே பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. ஆசிரியர்கள் மற்றும் போதனாசிரியர்கள் ஆகியோருக்கான சம்பளங்கள், மூலப் பொருட்கள் மற்றும் இயக்கச் செலவுகள் போன்ற உள்ளீட்டுச் செலவுகள் தவிர பயிலுனர்களுக்கு நாளாந்த அடிப்படையில் ஒரு கொடுப்பனவும் வழங்கப்பட்டு வருகின்றது. எனவே, பயிற்சி பெற்ற ஆளணியினரைப் பிரதானமாக தனியார் துறையே பெருமளவுக்கு பயன்படுத்தி வரும் இன்றைய பொருளாதார சூழ்நிலையில் அத்துறை இச் செலவுகளை பங்கேற்றுக் கொள்ள வேண்டியிருப்பதுடன், முக்கியமாக பயிற்சியில் முனைப்பான ஒரு பங்கினையும் வகித்து வர வேண்டியுள்ளது. மேலும், தனியார் துறை தமக்குத் தேவைப்படும் திறன் தேவைகளுக்கென பயிற்சியை வழங்கும் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளுமிடத்து, அரசாங்கம் சமூக அபிவிருத்திக் குறிக்கோள்களை கொண்ட விதத்திலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் தனது கவனத்தைச் செலுத்துவதற்கு வாய்ப்புக் கிட்டும். இத்துறை தொடர்பான சீர்திருத்தங்களின் பிரகாரம் அரசாங்கம் பிரதான பயிற்சி வழங்கும் அமைப்பு என்ற தனது பங்கிலிருந்து விலகி, பயிற்சி தொடர்பான ஒருங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணைப்பு அமைப்பாகவும் தர நிர்ணயங்களை வகுக்கும் அமைப்பாகவும் செயற்பட்டு வருவதாகும்.

### தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சி என்பவற்றில் தனியார் துறையின் ஈடுபாடு.

தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரம் ஒன்றில் ஊழியச் சந்தை துரிதமாக மாற்றமடைந்து வருகின்றது. குறிப்பாக உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் புதிய தொழில்நுட்பத்தின் பிரயோகம் காரணமாகவும் நவீன செயன்முறைகள் காரணமாகவும் இத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. தற்போதைய தொழில்கள் இழக்கப்பட்டு வரும் அதே வேளையில், புதிய புதிய தொழில்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. தகவல் தொழில்நுட்பம் மாற்றங்களின் வேகத்தை அதிகரிக்கச் செய்கின்றது. உலகமயமாக்கப்பட்டுள்ள சந்தையொன்றில் போட்டித் திறனுடன் தொடர்ந்து நிலைத்து நிற்கும் பொருட்டு வணிக சமூகம் புதிய தொழில்நுட்பத்தை ஏற்றுக் கொள்வதற்கும், தமது வணிக செயற்பாடுகளை நவீனமயப்படுத்துவதற்கும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தப் பின்னணியில் தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயற்சித் துறையை சீர்திருத்தி அமைப்பதில் தனியார் துறையும் வணிக சமூகமும் முனைப்பான ஒரு பங்கினை வகித்து வருவது தவிர்க்க முடியாததாகும். மேலும், இத் துறையிலான சீர்திருத்தங்களை திட்டமிட்டு செயற்படுத்துவதில் அவர்கள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டியும் உள்ளது.

எனவே, தனியார் துறை தனது தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் விதத்தில் பயிற்சியை வழங்குவதில் ஒரு முன்னணி பங்கினை வகித்து வரும் பொருட்டு அதற்குத் தேவையான ஒரு சூழலையும் ஊக்குவிப்புக்களையும் வழங்குவது இந்த சீர்திருத்த செயன்முறையின் மிக முக்கியமான ஒரு உத்தியாக உள்ளது. அத்தகைய பயிற்சி தொழிலில் சேரும் போது பயிற்சி மற்றும் தொழிலில் அமர்த்தி பயிற்றுவித்தல் என்பவற்றையும் அதேபோல தொழிலாளர்களுக்கு மீள் பயிற்சி வழங்கி அவர்களுடைய தரத்தினை மேம்படுத்துவதனையும் உள்ளடக்குகின்றது. இதற்கென தனியார் துறைக்கு வரிச் சலுகைகள், தீர்வையற்ற இறக்குமதிகள், மூலதனச் செலவை நிறைவு செய்து கொள்வதற்கான கொடைகள் என்பவற்றைக் கொண்ட விரிவான ஊக்குவிப்புக்களைக் கொண்ட ஒரு தொகுதி வழங்கப்பட்டு வருகின்றது.

### பொதுக் கல்வி, பல்கலைக்கழக கல்வி என்பவற்றுக்கும் தொ. க. மற்றும் தொ. ப. என்பவற்றுக்குமிடையிலான பிணைப்பு

தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சி என்பன பொதுவாக பாடசாலையை விட்டு வெளியேறி வேலை தேடிக் கொண்டிருப்பவர்களுக்கென நடத்தப்பட்டு வரும் பயிற்சித் திட்டங்கள் என பொதுவாக கருதப்பட்டு வருகின்றது. பொதுக் கல்வியில் மேலே முன்னேறச் செல்ல முடியாத பெரும்பாலான மாணவர்களுக்கு உள்ள ஒரேயொரு வழி இதுவெனவும் கருதப்படுகிறது. இந்த சீர்திருத்தங்களுக்கு ஊடாக இந்த எண்ணம் மாற்றியமைக்கப்படுகின்றது. இடை நிலைக் கல்வி மட்டத்தில் இருந்து வரும் மாணவர்கள் தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சி என்பவற்றில் ஈடுபடுவதற்கான தெளிந்த முடிவொன்றை எடுக்க வேண்டும். ஏனெனில், வேலை வாய்ப்புக்கான அறிவையும் திறன்களையும் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரு மாற்று வழி இருந்து வருகின்றது என்பதனையும், அது தமக்கு படிப்படியாக சான்றிதழ், டிப்ளோமா மற்றும் பட்டத் தகுதிகள் என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை வழங்குகின்றது என்பதனையும் மாணவர்கள் இக்கட்டத்தில் அறிந்து கொள்கிறார்கள். இக்குறிக்கோளுடன் இணைந்த விதத்தில் தொழிற்பயிற்சி நிலையங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள், தொழில் பயிற்சித் திட்டங்கள் என்பவற்றுக்கான நுழைவுத் தகைமைகள் இப்பொழுது மீளாய்வு செய்யப்பட்டு, மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன. அதே வேளையில் பொதுக்கல்வி மற்றும் பல்கலைக்கழக கல்வி என்பவற்றுக்கும் தொழில்நுட்பக் கல்வி தொழில் பயிற்சிக்கும் இடையில் இரு வழிப் பிணைப்புக்களை விருத்தி செய்வதற்கெனவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### சுய தொழிலுக்கான பயிற்சி

பயிற்சியினால் வேலை வாய்ப்பினை உருவாக்க முடியாது என்பதனை நாங்கள் மிக முக்கியமாக கவனத்தில் எடுக்க வேண்டும். எனினும், பயிற்சி என்பது தொழில் வாய்ப்புக்கென ஆட்களை தயார் செய்யும் சக்தி வாய்ந்த ஒரு வழிமுறையாக இருந்து வருகின்றது. ஆனால், சுய தொழிலுக்கென பயிற்சி மட்டும் போதாது. சுய தொழிலை மேம்படுத்துவதற்கென ஆரம்ப மூலதனம், வணிக அறிவு, மூலப் பொருட்கள் மற்றும் சந்தைகள் போன்ற பயிற்சிக்கும் பின்னரான ஆதரவு வழிமுறைகளும் வழங்கப்படுதல் வேண்டும். இச் சீர்திருத்தங்கள் பயிற்சி முறைமைக்கும் பயிற்சிக்கும் பின்னரான ஆதரவு வழிமுறைகளை வழங்குவதற்கு கிடைக்கக் கூடியதாக இருந்து வரும் பொறி முறைகளுக்கும் இடையிலான பிணைப்புக்களை பலப்படுத்திக் கொள்வதற்கான வழிமுறைகளை இனங்கண்டுள்ளன.

தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சி என்பவற்றில் சீர்திருத்தங்களை செயற்படுத்துவதற்கென அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் செயலணி ஒன்றை நியமனம் செய்துள்ளார். இந்த செயலணியின் மூலம் அறிமும் செய்து வைக்கப்பட்டுள்ள முக்கியமான சில மாற்றங்கள் இங்கு எடுத்து விளக்கப்படுகின்றன. அரசாங்கம் தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சி என்பவற்றில் அது வகித்து வந்துள்ள பாரம் பரிய பங்குப் பணிக்குப் பதிலாக இப்பொழுது ஒரு புதிய பங்குப் பணியை வகிக்க வேண்டியுள்ளது என்ற விடயம் முன்னர் கட்டிக் காட்டப்பட்டிருந்தது. இக் குறிக்கோளை சாதித்துக் கொள்வதற்கென மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவின் ஆற்றலை பலப்படுத்துவது மிக முக்கியமான ஒரு தேவையாகும். எனவே, 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி சட்டத்துக்கென சில திருத்தங்கள் உத்தேசிக்கப்பட்டுள்ளன. தேவையான அதிகாரங்களைக் கொண்ட தாக்கமான ஒரு நிறுவனமாக செயற்படும் விஷயத்தில் இந்த ஆணைக்குழு மீளமைக்கப்பட்டு பலப்படுத்தப்படும். மேலே குறிப்பிடப்பட்ட மாற்றங்களை எடுத்து வருவதற்கென உத்திகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்துக் கொள்வதற்குத் தேவைப்படும் தொழில்நுட்ப ஆற்றல்கள் இப்பொழுது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

### சான்றிதழ்களை வழங்குதல்

தற்பொழுது பல்வேறு பயிற்சி நிறுவனங்கள் தமது சொந்த சான்றிதழ்களை வழங்கி வருகின்றன. இந்தச் சான்றிதழ்களை வைத்திருப்பவர்களின் தேர்ச்சி மட்டங்களை நிர்ணயித்துக் கொள்வது சிரமமாக இருந்து வருவதனால் இச் சான்றிதழ்கள் வேலை கொள்வோரிடையே ஒரு வித மனக் குழப்ப நிலையை ஏற்படுத்துகின்றன. இப் பிரச்சினையை தீர்த்து வைக்கும் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட தர நிர்ணயங்களின் பிரகாரம் தேசிய சான்றிதழ்களை வழங்குவதற்கான திட்டங்களை மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு இப்பொழுது வகுத்துக் கொண்டுள்ளது. இதன் ஆரம்பமாக அரசாங்கத்தின் பிரதான பயிற்சி நிறுவனங்களான தொழில் பயிற்சி அதிகார சபை, தேசிய தொழிற் பயிற்சி மற்றும் கைத்தொழில் பயிற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகார சபை மற்றும் தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் என்பன மூன்றாம் நிலைக் கல்வி தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பொதுவான தேசிய சான்றிதழ் ஒன்றினை பயன்படுத்தவுள்ளன. இந்தத் திட்டம் அரச துறையையும் தனியார் துறையையும் சேர்ந்த ஏனைய பயிற்சி நிறுவனங்களுக்கும் விரிவாக்கப்படும். குறித்துரைக்கப்பட்டுள்ள தேசிய தர நிர்ணயங்களுக்கு ஏற்ற விதத்தில் நிறுவனங்கள் தமது பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை விருத்தி செய்து கொள்வதற்கு வகை செய்வதன் மூலம் இந் நிறுவனங்களுக் கிடையில் போட்டியை ஊக்குவிப்பதே இந்த உத்தியின் நோக்கமாகும். இது பயிற்சியை முடிப்பவர்களின் பயிற்சியின் தரத்தையும் அதே போல தொழில் வாய்ப்புக்களையும் விருத்தி செய்யும்.

### தனியார் துறைக்கான ஊக்குவிப்புக்கள்

ஜனாதிபதி செயலணியின் முயற்சி களின் விளைவாக 1999 வரவு செலவுத் திட்டம் தனியார் துறை பயிற்சியில் முத லீடுகளைச் செய்வதற்கும், தமது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை செறிவாகவும் விரி வாகவும் மேற்கொள்வதற்கெனவும் முக்கிய மான பல ஊக்குவிப்புக்களை வழங் கியது. தனியார் துறையை ஊக்குவிப்ப தற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப் பினை வரவு செலவுத் திட்ட உரையின் பின்வரும் பகுதி தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது:

"தொழில் நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சி என்பவற்றில் தற் பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் சீர்திருத்தங்களின் பின்னணியில் பயிற்சித் திட்டங்களில் தனியார் துறையும் முத லீடுகளை மேற்கொள்வதற்கு ஊக்குவிப் பது அவசியமாகும். இலங்கை முத லீட்டுச் சபை ஏற்கனவே பயிற்சி வசதி களை ஸ்தாபிப்பதற்கென 15 சதவீத முன்னுரிமை வரி வீதத்தினையும், 'தீர்வை யற்ற வசதிகளையும் வழங்கி வருகின் றது. ஆடைகள், இரத்தினக்கற்கள் மற் றும் ஆபரணங்கள், இலத்திரனியல் உப கரணங்கள், கணிப்பொறி மென் பொருள்கள் போன்ற முன்னுரிமை துறைகளில் பயிற்சி வசதிகளை வழங்கு வதில் தனியார் துறை முதலீட்டுக்கு மேலும் தூண்டுதல் வழங்கும் வகையில் இலங்கை முதலீட்டுச் சபை ஊக்குவிப்பு முறையை திருத்தியமைப்பதற்கு நான் உத்தேசிக்கின்றேன். ஒவ்வொரு பயிற்சி நிறுவனமும் ஆகக் குறைந்தது 300 பேருக்கு பயிற்சியை வழங்கும் சந்தர்ப்பத் தில் அந் நிறுவனங்களுக்கு 5 வருட வரி விடுமுறை ஒன்று வழங்கப்படும். மேலும், தற்போதைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங் களை விஸ்தரித்து விருத்தி செய்வதற் கென அல்லது புதிய பயிற்சி வசதிகளை ஸ்தாபிப்பதற்கென நிதி உதவியை வழங் குவதற்கும் நான் உத்தேசித்துள்ளேன். எனவே, இதற்கென மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்விக்கென 5 கோடி ரூபாவை ஒதுக்குவதற்கு நான் உத்தேசிக்கின்றேன்.

வேலை கொள்வோர் தொழிலில் சேர்த்துக் கொள்ளும் போது பயிற்சியை வழங்குவதற்கும் தமது ஊழியர்களின் தரத்தை மேம்படுத்தி மீள் பயிற்சி வழங்கு வதற்கும் அதே போல இலங்கையின் கைத்தொழில்களை உற்பத்தித் திறனுடன் விருத்தி செய்யும் குறிக்கோளுடன் தொழில் முயற்சி அடிப்படையிலான பயிற்சியை விருத்தி செய்வதற்கும் என திறன்கள் அபிவிருத்தி நிதியம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கும் நான் உத்தேசிக்கின் றேன். இந்நோக்கத்துக்கென ஆரம்பக் கொடையாக ரூபா. 10 கோடியை ஒதுக்க வேண்டும் என நான் பிரேரிக்கிறேன்."

1999 நிதியாண்டில் ரூபா. 10 கோடி நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டி யிருந்த நிலையில் ஒரு பரீட்சார்த்தி அடிப்படையில் திறன்கள் அபிவிருத்தி நிதியம் ஒன்றை ஆரம்பிப்பதற்கென ஐ. நா. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்/ சர்வதேச தொழில் தாபனம் என்ப வற்றின் தொழில் பயிற்சி செயற்திட்டத்தி லிருந்து ஒரு உதவி பெற்றுக் கொள்ளப் பட்டது. இந்த பரீட்சார்த்த கட்டத்தின் போது திறன்கள் அபிவிருத்தி நிதியத்தின் நோக்கத்தை விளக்கியும், தமது தொழி லாளர்களுக்கான பயிற்சி தொடர்பான வேண்டுகோள்களை அனுப்பி வைக்கு மாறும் வேலை கொள்வோர், தாபனங்கள் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேள னம் என்பவற்றுக்கு ஊடாக பத்திரிகை களில் விளம்பரங்கள் வெளியிடப்பட்ட துடன் கடிதங்களும் அனுப்பி வைக்கப் பட்டன. இதற்கு நல்ல சாதகமான எதிர் விளைவு கிடைத்தது. சுமார் 50 க்கும் மேற்பட்ட தனியார் துறை நிறுவனங்கள் தமது ஊழியர்களுக்கான பயிற்சி, மீள் பயிற்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கை கள் என்பவற்றுக்கென உதவியை கோரி யிருந்தன. தெரிவு செய்யப்பட்ட ஒரு சில அரசாங்க பயிற்சி நிறுவனங்களில் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட பல நிகழ்ச் சித்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப் பட்டன. இச்சேவைகளுக்கென சம்பந் தப்பட்ட நிறுவனங்கள் கொடுப்பனவு களை வழங்கியுள்ளன என்பதனை இங்கு முக்கியமாக குறிப்பிடுதல் வேண்டும்.

திறன்கள் அபிவிருத்தி நிதியத்தின் ஸ்தாபிதத்துக்கு பொருத்தமான பொறி முறைகளும் இந்த பரீட்சார்த்த கட்டத்தின் போது அபிவிருத்தி செய்யப்பட்டன. இதனை தனியார் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனி ஒன்றாக ஸ்தாபிப்பதற்கென அரசாங்க நிதி ஒதுக்கீடான ரூ. 10 கோடி பயன்படுத்தப்படவுள்ளது. ஏற் கனவே இலங்கை முதலாளிமார் சம் மேளனம் இந்நிதியத்துக்கான ஒரு அடையாளப் பங்களிப்பாக 10 இலட்சம் ரூபாவை வழங்குவதற்கு இணங்கியுள் ளது.

டிப்ளோமா சான்றிதழ்களை வழங் கும் மூன்று நிறுவனங்களில் இரண்டு நிறுவனங்களான தேசிய தொழில் பயிற்சி மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் தொழில்நுட்பவியலாளர் பயிற்சி நிறுவனமும் உயர் தொழில் நுட்பக் கல்விக்கான இலங்கை நிறுவன மும் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற் சித் திணைக்களம், தொழில்கல்வி ஆணைக் குழு என்பவற்றின் கீழ் வரும் தொழில் நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழில் பயிற்சி மையங்கள் என்பவற்றினால் வழங்கப்படும் சான்றிதழ்களை தமது டிப்ளோமா பாடநெறிகளுக்கான மற்றும் நுழைவுத் தகைமைகளாக கவனத்தில் எடுப்பதற்கு இணக்கம் தெரிவித்துள் ளன. இதன் அடுத்தபடி 03ம் நிலை கல்வி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்களி னால் வழங்கப்படும் டிப்ளோமா பாட நெறிகளை ஒரு மாற்று நுழைவுத் தகை மையாக பட்டம் வழங்கும் நிறுவனங்கள் அங்கீகரிப்பதாகும்.

### சுய தொழிலுக்கான பயிற்சி

செயலணியின் சிபாரிசுகளுக்கு ஏற்ற விதத்தில் மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு பொதுவான ஒரு நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்கிக் கொள்ளும் பொருட்டு சம் பந்தப்பட்ட அமைச்சுக்களுடனும் முகவர கங்களின் தலைவர்களுடனும் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்துள்ளது. தொழில் பயிற்சி ஆணைக்குழு கிராமிய பயிற்சி மையங்கள், மாவட்ட மற்றும் தேசிய பயிற்சி மையங்கள் என்பவற்றைக் கொண்ட ஒரு வலைப் பின்னலை தன்ன கத்தே கொண்டுள்ளது. இந்த மையங்கள் கிராமியத் துறையின் தேவைகளை நிறைவு செய்து வைக்கும் வகையில் குறுகிய வேலைவாய்ப்பு நோக்குடைய பாடநெறி களை நடத்தி வருகின்றன. தேசிய இளை ஞர் சேவைகள் மன்றத்தின் முக்கிய குறிக் கோள் இளைஞர் யுவதிகளின் ஒட்டு மொத்த அபிவிருத்தியாகும். இந்த முக வரகங்கள் வெவ்வேறு அமைச்சுக்களின் கீழ் செயற்பட்டு வந்த போதிலும் தமக்கு பரஸ்பரம் அனுகூலம் அளிக்கக் கூடிய உத்திகளையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் இனங் கண்டு அபிவிருத்தி செய்து கொள் வதற்கென இப்பொழுது மிக நெருக்க மாக இணைந்து செயற்பட்டு வரு கின்றன. தமது மூலவளங்கள் மற்றும் நிறுவன ரீதியான பலம் என்பவற்றைப் பயன்படுத்தி சுய வேலை வாய்ப்பை மேம்படுத்துவதற்கு அவை அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின் றன. வேலை வாய்ப்பினை அடிப்படை யாகக் கொண்ட கிராமிய பயிற்சி தொழில் வழிகாட்டுதல், ஆலோசனை வழங்குதல் மற்றும் தொழிற்சாலைப் பயிற்சி என்பன இவற்றில் அடங்குகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியமைப்புக்கு ஊடாக தொழில் ஆலோசனை வழங்குவதன் முக்கியத்துவம்

*அனுர குமாரசிங்க*

*(தலைவர், இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபை)*

க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் 1.8 சதவீதத்தினர் மட்டுமே பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக் கொள்கிறார்கள். மிகுதி 98.2 சதவீதமான மாணவர்களாலும் பல்கலைக்கழங்களுக்குள் பிரவேசிக்க முடிவதில்லை. எமது பல்கலைக்கழக அமைப்புக்குள் பிரவேசிக்க முடியாமல் இருக்கும் இத்தகைய பாரிய அளவினரான மாணவர்கள் எதிர்கொண்டு வரும் தீவிரமான பிரச்சினைகள் குறித்து எமது கல்வித் துறையோ அல்லது ஊடகங்களோ உரிய கவனத்தைச் செலுத்தியிருப்பதாக தெரியவில்லை. பத்திரிகைகளும் இலத்திரனியல் ஊடகங்களும் க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் பெறுபேறுகளின் சாதனைகளையும், மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருக்கும் பாடசாலை தொடர்பான விபரங்களையும், ஆகக் கூடுதலாக மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி வைக்கும் பாடசாலை தொடர்பான விபரங்களையும் தெரிவிக்கும் விஷயத்திலேயே கவனம் செலுத்தி வருகின்றன.

பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற முடியாதிருக்கும் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு என்ன நேரிடுகின்றது? இம் மாணவர்கள் நாடெங்கும் சிதறி வாழ்ந்து வருவதனால் அவர்களுடைய நிலைமைகளை கண்டறிந்து கொள்வது சிரமமான ஒரு காரியமாக உள்ளது.

குறிப்பிட்ட ஒரு தொழிலில் பயிற்சியை பெற்றுக் கொள்வதற்கென வழங்கப்படும் வழிகாட்டுதலே தொழில் ஆலோசனை ஆகும். தொழில் ஆலோசனைப் பணி தொழில் பயிற்சிப் பள்ளிகளின் பணியாக இருந்து வருதல் வேண்டும். இதற்கான பொறுப்பு கல்வியமைச்சிடம் வழங்கப்பட வேண்டும் என ஒரு சிலர் வாதிட்டு வந்த போதிலும், தொழில் பயிற்சி நிறுவனங்கள் இதனைப் பொறுப்பேற்க வேண்டும் என்பதே பெரும்பாலானவர்களின் கருத்தாகும். இந்நிறுவனங்கள் அனைத்துக்கும் ஒரு கூட்டுப் பொறுப்பு இருந்து வருகின்றது என்பதே இது தொடர்பான பொதுவான புரிந்துணர்வாகும். இலங்கையில் சுமார் 11,000 பாடசாலைகள் இயங்கி வருவதுடன், அவற்றில் 40 இலட்சம் மாணவ மாணவியர் கல்வி கற்று வருகின்றார்கள். தரங்கள் 8 மற்றும் 9 என்பவற்றிலும் அதற்கு மேல் வகுப்புக்களிலும் கற்பவர்களுக்கு தொழில் வழிகாட்டுதலும் ஆலோசனையும் வழங்கப்படுதல் வேண்டும்.

கல்வி அமைச்சுடன் இணைந்த விதத்தில், 12 தொழில்நுட்ப மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்கள் 1999 செப்டம்பர் 13-19 காலப் பிரிவின் போது நாடெங்கிலும் உள்ள 400 மையங்களில் தொழில் ஆலோசனை வாரம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தன. அப்பொழுது க. பொ. த. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றியிருந்த மாணவர்களை இந்த நிகழ்ச்சித்திட்டம் இலக்காக கொண்டிருந்தது. "பாடசாலையிலிருந்து வேலை உலகத்துக்கு" எனப் பெயரிடப்பட்டிருந்த இத் திட்டம் சுமார் 110,000 மாணவர்களை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்டது. க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்த போதிலும் பல்கலைக்கழக அனுமதியை பெற முடியாதிருக்கும் மாணவர்களுக்கு என மாற்றுத் தொழில் வழிகள் வழங்கப்படுவது அவசியமாகும். ஆனால், பெரும்பாலான மாணவர்களைப் பொறுத்தவரையில் தம்மால் பல்கலைக்கழக பாடநெறியொன்றை பயில முடியாது போனால் தமக்கு வேறு மாற்று வழிகள் இல்லை என்ற எண்ணத்தையே கொண்டுள்ளார்கள். எனவே, அத்தகைய மாணவர்களுக்கு கிடைக்கக் கூடிய பயிற்சி நெறிகள், அத்தகைய பயிற்சி நெறிகளை நடத்தி வரும் நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் அமைவிடம் என்பன தொடர்பான தகவல்களை வழங்குவதன் மூலம் தமக்குக் கிடைக்கக் கூடியதாக இருந்துவரும் மாற்றுத் தெரிவுகள் குறித்த விளக்கத்தை அவர்களுக்கு அளிப்பது அவசியமாகும். மாணவர்களிடையே விழிப்புணர்வை தூண்டுவதற்கு இத்தகைய தகவல்கள் பரவலாக வழங்கப்பட வேண்டும்.

மாணவர்களின் விழிப்புணர்வை தூண்டுவதன் மூலம் மட்டும் தொழில் ஆலோசனை வழங்கும் முயற்சி வெற்றியீட்ட முடியாது. மாணவர்களின் சிந்தனை மற்றும் முடிவெடுக்கும் செயன்முறை என்பவற்றின் மீது அதிக அளவுக்கு செல்வாக்கினை கொண்டிருக்கும் வேறு இரு தரப்பினரான பெற்றோர் மற்றும் ஆசிரியர் ஆகியோரிடையேயும் இத்தகைய விழிப்புணர்வை தூண்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் எடுத்துச் செல்லப்படுதல் வேண்டும். இன்று பெரும்பாலான பெற்றோர் தமது பிள்ளைகள் அரசாங்க இலிகிதர் வேலையைப் பெற

**அட்டவணை 1**

**வேலையின்மை**

| வருடம் | வேலையற்றிருந்தவர்கள் எண்ணிக்கை | மொத்த ஊழியர் படையில் வேலையற்றிருந்தவர்களின் % |
|---|---|---|
| 1990 | 953794 | 15.9 |
| 1991 | 861860 | 14.7 |
| 1992 | 845957 | 14.6 |
| 1993 | 830910 | 13.8 |
| 1994 | 797591 | 13.1 |
| 1995 | 739341 | 12.3 |
| 1996 | 705156 | 11.3 |
| 1997 | 649000 | 10.4 |
| 1998 | | |
| முதல் காலாண்டு | 701067 | 10.6 |
| இரண்டாவது காலாண்டு | 623197 | |
| மூன்றாவது காலாண்டு | 607403 | |

*மூலம்: ஊழியச் சந்தைத் தகவல்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் அல்லது ஆசிரிய நியமனத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற அபிலாசையையே கொண்டுள்ளனர். ஆனால், அரசாங்கத்தை பொறுத்தவரையில் அத்தகைய பதவிகளுக்கு விண்ணப்பம் செய்யும் அனைவருக்கும் அவற்றை வழங்க முடியாது. இந்நிலைமை பெற்றோருக்கு எடுத்து விளக்கப்படுதல் வேண்டும். மாணவர்கள் தற்போதைய யதார்த்த நிலையை புரிந்து கொண்ட போதிலும் பெற்றோர்கள் அவர்களுடைய முடிவுகளை மாற்றியமைக்க முயற்சிக்கக் கூடும். எனவே, பெற்றோரிடையே மனப்பாங்கு ரீதியிலான ஒரு மாற்றத்தை எடுத்து வருவதற்கென ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். ஆசிரியர்களிடையேயும் இதே விதத்திலான ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுவது அவசியமாகும்.

இங்கு தரப்பட்டுள்ள அட்டவணை 1 இலங்கையில் நிலவி வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தின் பரிமாணத்தை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. 1998 இன் இரண்டாது காலாண்டின் போது எமது நாட்டில் வேலையற்றிருந்தவர்களின் எண்ணிக்கை 607,403 ஆகும். இது நாட்டின் மொத்த ஊழியர்படையில் 9.2% ஆக இருந்து வந்தது. அதற்கு முன்னைய வருடத்துடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது வேலையற்றவர்களின் எண்ணிக்கையில் ஓரளவுக்கு வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதனை அவதானிக்க முடிகிறது.

வேலையற்றிருப்பவர்களில் 51% ஆனவர்கள் க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருக்கவில்லை என்பதனையும், 28.3% இனர் க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக இருந்தார்கள் என்றும் 18% இனர் க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருந்தனர் என்றும், அட்டவணை 2 எடுத்துக் காட்டுகின்றது.

மாணவர்கள் க. பொ. த. (சாதாரண தர) வகுப்புக்களிலும் உயர்தர வகுப்புக்களிலும் படித்து வந்த பொழுது அவர்களுக்கு தொழில் வழிகாட்டுதல் வழங்கப்பட்டிருந்தால் இம் மாணவர்களை வேறு தொழில் துறைகளுக்கு நெறிப்படுத்துவது சாத்தியமானதாக இருந்திருக்கும். இங்கு அட்டவணை 3 இல் தரப்பட்டுள்ள புள்ளிவிபரங்களின் பிரகாரம் 1997–98 காலப் பிரிவில் தொழில் பயிற்சி பெற்றிருந்தவர்களில் 25% இனர் மட்டுமே வேலையற்றவர்களாக இருந்து வந்துள்ளனர். எனவே, தொழில் பயிற்சி பெற்றிருந்தவர்களில் 75% ஆனவர்கள் வேலை வாய்ப்புக்களை பெற்றிருந்தனர்.

**அட்டவணை 3**

**தொழில் பயிற்சியும் வேலையின்மையும் 1997–98**

| | |
|---|---|
| வேலையற்றோரின் மொத்த எண்ணிக்கை | 655466 |
| தொழில் பயிற்சி பெற்று வேலையற்றிருந்தவர்கள் | 165429 |
| தொழில் பயிற்சியின்றி வேலையற்றிருந்தவர்கள் | 491037 |

மாணவர்களை ஒரு குறிப்பிட்ட தொழில்துறையை நோக்கி நெறிப்படுத்தும் பொழுது சந்தைக் கேள்வி நிலவி வரும் ஒரு தொழில் துறையை தெரிவு செய்து கொள்வது மிக முக்கியமாகும். குறித்துரைக்கப்பட்ட திறன்களைப் பெற்றிருக்கும் நபர்களின் வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளும் சாத்தியம் தொழிலுக்கு தொழில் மாறுபடுகின்றது என்பதனை அட்டவணை 4 எடுத்துக் காட்டுகின்றது. உயர் அளவில் கேள்வி நிலவி வரும் ஒரு தொழிலை தெரிவு செய்து கொள்ளும் சந்தர்ப்பத்தில் வேலை வாய்ப்புக் கிடைக்கும் சாத்தியப்பாடு உயர்வாக இருந்து வருகின்றது. தச்சுத் தொழில் மற்றும் மர வேலை தொடர்பான தொழில்நுட்பப் பாடநெறிகளை படிப்பதற்கு பலர் தயக்கம் காட்டி வருகின்றார்கள். ஆனால், இவை உயர் அளவில் கிராக்கி நிலவி வரும் இரு துறைகளாக இருந்து வருகின்றன. உதாரணமாக, மர வேலை பாடநெறியை படித்திருந்தவர்கள் 2.7% இனர் மட்டுமே 1997/98 இல் வேலையற்றிருந்தனர். மேசன் தொழில் தொடர்பான பாடநெறியை படித்திருந்தவர்களின் 5.8% இனர் மட்டுமே வேலையற்றிருந்தனர். ஆனால், பெருமளவுக்கு பிரபல்யம் பெற்றிருக்கும் பாடநெறியான கணிப்பொறித் துறையில் பாடநெறிகளை பயின்றிருந்தவர்களில் 51.6% இனர் வேலையற்றவர்களாக இருந்து வந்தனர். இது கணிப்பொறி தொடர்பான பாடநெறிகள் தற்போதைய சந்தை தேவைகளை நிறைவு செய்து வைக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கவில்லை என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. கணிப்பொறி தொடர்பான ஏதேனும் ஒரு பாடநெறியை படித்தால் ஒரு தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொள்ள முடியும் என்ற கருத்தை பெற்றோரும் மாணவரும் கொண்டுள்ளனர். ஆனால், இந்தக் கருத்து சரியானது எல்ல என்பதனை புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. கணிப்பொறி தொடர்பான அனைத்துப் பாடநெறிகளும் பொருத்தமற்றவை என்பது இதன் பொருளல்ல; ஆனால் இன்று வழங்கப்பட்டு வரும் பாடநெறிகளில் பெரும் பாலானவை பொருத்தமற்றவை என்ற வகைக்குள்ளேயே அடங்குகின்றன.

மூன்றாம் நிலை மற்றும் தொழில் பயிற்சி ஆணைக்குழு பெருமளவுக்கு கிராக்கி நிலவி வரும் தொழில்களை அடையாளம் கண்டு கொள்வதற்கென ஒரு முயற்சியை மேற்கொண்டது. அது இவ்வாறு 5 துறைகளை இனங் கண்டிருப்பதுடன், அடுத்து வரும் ஐந்தாண்டுகளில் இத்துறைகளில் ஏற்படக்கூடிய தொழில் வாய்ப்புக்கள் மற்றும் தொழில் வெற்றிடங்கள் என்பவற்றின் தகவல்களை உள்ளடக்கிய அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளது. இத்துறைகள் வருமாறு:

1. இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழில்
2. கட்டட நிர்மாணம்
3. அச்சிடல்

**அட்டவணை 2**

| வேலையற்றிருந்தவர்களின் கல்வி மட்டம் | மொத்தம் | வயதுப் பிரிவினர் 15–29 | 30–44 | 45க்கு மேல் | அனைத்து வயதுப் பிரிவினரும் |
|---|---|---|---|---|---|
| பாடசாலை செல்லாதவர்கள் | 100 | 87.7 | 12.3 | 0.0 | 0.4 |
| 1–10 | 100 | 81.4 | 15.0 | 3.6 | 51.0 |
| க. பொ. த. (சா. த.) | 100 | 80.8 | 16.5 | 2.7 | 28.3 |
| க. பொ. த. (உ. த.) | 100 | 82.1 | 16.7 | 0.7 | 18.5 |
| பட்டப்படிப்பு | 100 | 88.4 | 10.8 | 0.8 | 1.8 |
| அனைத்து மட்டங்களும் | 100 | 81.6 | 15.6 | 2.8 | 100.0 |

மூலம்: ஊழியச் சந்தை தகவல் செய்தி விவரணம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அட்டவணை 4

| தெரிவு செய்யப்பட்ட தொழில்கள் | பயிற்றப்பட்ட எண்ணிக்கை | வேலை கிடைத் தவர்கள் % | வேலை கிடைத் தவர்கள் % |
|---|---|---|---|
| 1. வெல்டிங் வேலை செய்பவர்கள் | 30545 | 83.9 | 16.1 |
| 2. குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் குளிரூட்டிகள் | 7897 | 83.4 | 16.6 |
| 3. தொலைத் தொடர்பு | 35501 | 86.1 | 13.9 |
| 4. மோட்டார் வாகனங்கள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்டவை | 55066 | 80.8 | 19.2 |
| 5. டி வி மற்றும் வானொலிப் பெட்டி திருத்தல் வேலை | 8504 | 84.1 | 15.9 |
| 6. தச்சர்கள் | 77803 | 97.3 | 2.7 |
| 8. நீர்க் குழாய் வேலை | 2465 | 33.1 | 66.9 |
| 9. வர்ணம் தீட்டுதல் | 12219 | 98.4 | 1.6 |
| 10 கணிப்பொறிகள் மற்றும் தரவு பதிவு | 44166 | 48.4 | 41.6 |
| 11. இரத்தினக்கல் வெட்டுதல் மற்றும் ஆபரண வேலை | 8764 | 99.0 | 11.0 |
| 12. பார வாகனங்களைச் செலுத்துதல் | 114482 | 92.0 | 8.0 |
| 13. இயந்திரங்களை இயக்குபவர்கள் | 1081 | 74.1 | 25.9 |
| 14. அச்சிடல் | 9416 | 94.1 | 5.9 |
| 15. பாதணி மற்றும் தோல் பொருட்கள் | 4786 | 90.3 | 9.7 |
| 16. ஹோட்டல் மற்றும் உணவு விடுதிகள் | 12825 | 59.5 | 40.5 |
| 17. புடவை மற்றும் ஆடை | 105578 | 79.9 | 20.1 |
| 18. விவசாயம் | 8957 | 99.4 | 0.6 |
| 19. இலிகிதர் | 57530 | 62.4 | 37.6 |
| **மொத்தம்** | 367885 | 77.8 | 22.2 |

மூலம்: ஊழியச் சந்தை தகவல் செய்தி விவரணம் 1/1999

4. ஹோட்டல் மற்றும் சுற்றுலாத் தொழில்

5. புடவை மற்றும் ஆடைக் கைத் தொழில்

இத் துறைகளில் தற்பொழுது புடவை மற்றும் ஆடைக் கைத்தொழில் துறையிலேயே ஆகக் கூடுதலான எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் இருந்து வருகின்றன. இந்த அறிக்கைகளின் பிரகாரம் இத்தொழில் துறையில் 1999 இல் 83560 வெற்றிடங்களும், 2000 இல் 84448 வெற்றிடங்களும் ஏற்படவுள்ளன.

தையல் இயந்திரங்களை இயக்குபவர்களுக்கு ஆகக் கூடிய அளவில் தொழில் வாய்ப்புக்கள் இருந்து வருகின்றன என்பதனை அட்டவணை 5 எடுத்துக் காட்டுகின்றது. இத் தொழில் துறை தொடர்பாக பெருமளவுக்கு கிராக்கி நிலவி வந்த போதிலும் அதற்குள் பெண் தொழிலாளர்களை ஈர்த்துக் கொள்வது மிகவும் சிரமமான ஒரு காரியமாகவே இருந்து வருகின்றது. இத்தகைய கைத்தொழில்களில் வேலை செய்து வரும் தொழிலாளர்கள் தொடர்பாக பொது மக்கள் மத்தியில் நிலவி வரும் அபிப்பிராயங்களும், ஊடகங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் தேவையற்ற பிரசாரங்களும் ஆட்கள் இத்தொழிற் துறைக்குள் வருவதற்கு தயக்கம் காட்டும் நிலை தோன்றுவதற்கு பங்களிப்புச் செய்துள்ளன. தொழில் பயிற்சி அதிகார சபை இத்துறையில் 10,000 தொழிலாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு முயற்சிகளை எடுத்தது. எனினும், இந்த இலக்கினை சாதித்துக் கொள்ளும் விஷயத்தில் அதிகார சபை கணிசமான அளவிலான செல்வாக்கினை பிரயோகிக்க வேண்டி நேரிட்டது என்பதனை எனது தனிப்பட்ட அனுபவத்தின் மூலம் அறிவேன். தொழில் பயிற்சி அதிகார சபை தனியார் துறை கைத்தொழில்களின் தேவைகளை கருத்திக் கொண்டு தொழில் பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்திருந்தது. தொழில் பயிற்சிக்கான திட்டங்களை வகுக்கும் பொழுது ஊழியத்துக்கான அதிக தேவையை கொண்டிருக்கும் துறைகளை இனங்கண்டு அவற்றுக்கு பொருந்தக் கூடிய விதத்தில் பயிற்சித் திட்டங்களை உருவாக்குவது அவசியமாகும்.

அட்டவணை 5

**தொழில் பயிற்சிக்கான வாய்ப்புக்கள்**

| | 1999 | 2000 |
|---|---|---|
| தொழில் நுட்பம் | 311 | 282 |
| தையல் இயந்திர இயக்குனர்கள் | 69201 | 69988 |
| மேற்பார்வை யாளர்கள் | 11984 | 12129 |
| பிரிவு முகாமை யாளர்கள் | 1794 | 1807 |
| ஆடை வெட்டு பவர்கள் | 1794 | 1807 |
| **மொத்தம்** | 83560 | 84448 |
| உதவியாளர்கள் | 38525 | 39954 |
| இஸ்திரி போடு பவர்கள் | 3863 | 3896 |
| ஏனையோர் | 4400 | 4448 |
| மொத்தம் | 46788 | 47298 |
| **கூட்டு மொத்தம்** | 130348 | 131746 |

மூலம்: புடவை மற்றும் ஆடைக் கைத் தொழிலுக்கான தொழில் கல்வி மற்றும் பயிற்சித் திட்டம், ஏப்ரல் 1999

இலங்கையின் தற்போதைய மற்றும் எதிர்கால கட்டமைப்பை நோக்கும் பொழுது தனியார் துறையே நாட்டில் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் பிரதான மூலமாக இருந்து வரும் என்பதனை அவதானிக்க முடிகிறது. பாடசாலையை விட்டு விலகிச் செல்பவர்கள் இந்த விடயத்தை கவனத்தில் எடுக்க வேண்டியிருப்பதுடன், அதிகளவில் கிராக்கியை கொண்டிருக்கும் துறைகளில் மேலதிக பயிற்சியையும் அனுபவத்தையும் பெற்றுக் கொள்வதற்கு முயல வேண்டும். இந்த விவரங்கள் அவர்களுக்கு தெரியப் படுத்தப்படா விட்டால் வருங்காலத்தில் வேலையற்றவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பதற்கு வாய்ப்புள்ளது. வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதில் மிக முக்கியமாக கவனத்தில் எடுக்க வேண்டிய மற்றொரு விடயத்தையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். மனப்பாங்கு தொடர்பான மாற்றமே அந்த விடயமாகும். தனியார் துறையில் நிலவி வரும் விழுமியங்கள் மற்றும் நடத்தை மாதிரிகள் என்பவற்றை புரிந்து கொள்வது அவசியமாகும். எனவே, இளைஞர்கள் தனியார் துறையில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்று அவற்றை தக்க வைத்துக் கொள்ள வேண்டுமானால் அத்துறையின் எதிர் பார்ப்புக்கள் குறித்து சரிவர புரிந்து கொள்வது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் அறிமுகம்

ஏ. ஏ. நவரத்ன
(உதவி பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்)

**அறிமுகம்**

பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் அறிமுகம் ஒரு நீண்ட காலத் தேவையை நிறைவு செய்து வைத்துள்ளது. அனைவருக்கும் கட்டாய பொதுக் கல்வியை இலவசமாகவும், ஏற்றத்தாழ்வின்றியும் வழங்குவது அரசாங்கத்தின் குறிக்கோளாகும். இக்குறிக்கோளைச் சாதித்துக் கொள்வதில் கணிப்பீட்டு செயன்முறையை விருத்தி செய்து கொள்வதற்கும், இன்றைய தேவைகளுக்கு ஏற்ற விதத்தில் அவற்றை வடிவமைத்துக் கொள்வதற்கும் உயர் முன்னுரிமை அளிக்கப்படுதல் வேண்டும்.

இக்கட்டுரை இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் வடிவமைப்பின் பின்னணியில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளையும், அதன் முக்கிய அம்சங்களையும், அமுலாக்கல் முயற்சிகளையும், அதன் எதிர்கால எதிர்பார்ப்புக்களையும் முன்வைக்கிறது.

**பின்னணிக் காரணிகள்**

அனைவருக்கும் இலவசமாகவும், சமத்துவமான முறையிலும் கட்டாய பொதுக் கல்வியை வழங்க வேண்டிய தேவை இனங்காணப்பட்டமை மற்றும் இந்த அடிப்படைத் தேவையை நிறைவு செய்து வைக்கும் பொருட்டு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்கள் துவக்கி வைக்கப்பட்டமை என்பன உலகெங்கிலும் தெளிவாக அவதானிக்கப்பட்டு வந்த போக்குகளாகும். கல்வி என்பது ஒரு மனித உரிமையாகும். மனித உரிமைகள் குறித்த அகில உலக பிரகடனத்தின் (1948) உறுப்புரை 27 இதனைப் பின்வருமாறு குறிப்பிடுகிறது: "கல்வி ஒவ்வொரு பிரஜையினதும் உரிமையாகும். அரசினால் ஆகக் குறைந்தது ஆரம்பக் கல்வி அல்லது பூர்வாங்கக் கல்வி இலவசமாக வழங்கப்படுதல் வேண்டும். ஆரம்பக் கல்வி அல்லது பூர்வாங்கக் கல்வி கட்டாயமாக்கப்படுதல் வேண்டும்." சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சமவாயம் (1989) அதன் 28 மற்றும் 29 ஆகிய உறுப்புரைகளில் பின்வருமாறு குறிப்பிடுகிறது: "சம சந்தர்ப்பங்களின் அடிப்படையில் ஒரு பிள்ளையின் கல்விக்கான உரிமையை அரசு அங்கீகரித்தல் வேண்டும். அது அனைவருக்கும் ஆரம்பக் கல்வியை கட்டாயமாகவும் இலவசமாகவும் வழங்கி வர வேண்டும். மேலும், பல்வேறு வடிவங்களிலான நடுநிலைக் கல்வி வாய்ப்புக்களையும் கல்வி சார்ந்த தொழில் சார்ந்த தகவல்களையும் வழிகாட்டுதலையும் ஒவ்வொருவரினதும் ஆற்றலுக்கு ஏற்ப உயர்கல்வியையும் வழங்க முன்வர வேண்டும். அத்துடன் பிள்ளைகள் ஒழுங்காக பாடசாலைக்கு சமூகமளிப்பதனை மேம்படுத்துவதற்கும், இடையில் கல்வியை விட்டு விலகிச் செல்பவர்களின் விகிதங்களை குறைப்பதற்கும் மனித கண்ணியத்துக்கு பொருத்தக்கூடிய விதத்திலான பாடசாலை ஒழுக்காற்றினை உறுதிப்படுத்துவதற்கும் அரசு வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும். வழங்கப்படும் கல்வி ஆளுமை அபிவிருத்தி, மனித உரிமைகளுக்கான மதிப்பு, அடிப்படைச் சுதந்திரம், கலாசார அடையாளம் மற்றும் தேசிய விழுமியங்கள் என்பவற்றை மேம்படுத்துவதாகவும், சுதந்திரமான சமூகமொன்றில் பொறுப்புணர்ச்சியுடன் கூடிய முறையில் வாழ்க்கை நடத்துவதற்கு பிள்ளையை தயார் செய்யக்கூடியதாகவும் இருந்து வருதல் அவசியமாகும்."

அனைவருக்கும் கல்வி தொடர்பான அகில உலக பிரகடனம் (1990) பின்வருமாறு குறிப்பிடுகிறது: "ஒவ்வொரு நபரும் அவர்களுடைய அடிப்படைக் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வைக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள கல்வி வாய்ப்புக்களிலிருந்து பயனடையக் கூடியவராக இருந்து வருதல் வேண்டும். அடிப்படைக் கல்வி அனைவருக்கும் வழங்கப்படுதல் அவசியமாகும். அடிப்படைக் கல்விச் சேவைகள் விரிவாக்கப்படுவதுடன், ஏற்றத் தாழ்வுகளை குறைத்துக் கொள்வதற்கு ஒரே சீரான முறையில் வழிமுறைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அடிப்படைக் கல்வியை அனைவருக்கும் சமமாக வழங்கும் பொருட்டு, ஏற்கத்தக்க கல்வி மட்டமொன்றை அடைந்து அதனை பேணிக் கொள்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுதல் வேண்டும். கல்வியைப் பெற்றுக் கொள்வதனை உறுதி செய்வதற்கும், கல்வி பயில்பவர்கள் தமது முழுமையான திறன்களை சாதித்துக் கொள்வதற்கும் முனைப்பான, பங்கேற்புடன் கூடிய அணுகுமுறைகள் பயனுள்ளவையாக இருக்கும். எனவே, கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக ஏற்கத்தக்க கல்வி மட்டங்களை நிர்ணயித்துக் கொள்வதும், கல்வி அடைவு மட்டங்களை மதிப்பீடு செய்யும் முறைமைகளை விருத்தி செய்து, பிரயோகிப்பதும் அவசியமாகும்."

ஜோம்டன் மாநாடு (1990) பின் வரும் எதிர்பார்ப்புக்களை கொண்டிருந்தது.

(I) கல்வி பயிலலை விருத்தி செய்யும் பொருட்டு மதிப்பீட்டு ஆற்றல்கள் பயன்படுத்திக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(II) கல்வி அடைவு மட்டங்கள் தொடர்பான மதிப்பீடு உருவாக்க மற்றும் தொகுப்பு செயற்பாடுகளை உள்ளடக்குகிறது. ஆசிரியர்களாலும் கல்வித்துறை நிர்வாகிகளாலும் மதிப்பீட்டு பெறுபேறுகளை பொருத்தமான முறையில் பயன்படுத்துவதை மேம்படுத்தும் பொருட்டு அது எதிர்விளைவு பொறிமுறையொன்றை உள்ளடக்கியதாக இருந்து வருதல் வேண்டும்.

(III) வகுப்பு மட்ட, பாடசாலை மட்ட மற்றும் வெளி மாதிரிகள் என்பவற்றை உள்ளடக்கும் ஒரு மதிப்பீட்டு முறை உருவாக்கப்படுதல் வேண்டும்.

(IV) மதிப்பீடு, சாத்தியமான விடத்து உளவியல் தூண்டுதல்களையும், அனுபவ வெளிப்பாடுகளையும் உள்ளடக்குதல் வேண்டும்.

மேலே எடுத்துக்காட்டப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் கவனத்தில் எடுக்கும் பொழுது, வகுப்பறை, பாடசாலை, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் நன்கு திட்டமிடப்பட்டு பொருத்தமான முறையில் வடிவமைக்கப்பட்ட புதிய மதிப்பீட்டுச் செயன்முறையொன்று செயற்படுத்தப்பட வேண்டும் என்பது தெளிவாகத் தெரிகிறது.

(மிகுதி அடுத்த இதழில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்து வரும் பத்தாண்டுகளில் கல்வி: ஒரு கண்ணோட்டம்

ஆர். எஸ். மெதகம
(பணிப்பாளர் நாயகம், கல்விச் சீர்திருத்தங்கள் அமுலாக்கல் பிரிவு)

**வருங்கால சமூகம்**

புதிய நூற்றாண்டின் முக்கியமான சிறப்பம்சங்களில் ஒன்று அறிவு மற்றும் தகவல் என்பவற்றின் மேலாதிக்கமாகும். தகவல் சக்தி ஏனைய அனைத்து உற்பத்திக் காரணிகளையும் மேவிக் காணப்படும். அறிவுத் துறை தொழிலாளர்கள் மூலதன உரிமையாளர்களிலும் பார்க்க உயர் வருமானங்களை பெற்றுக் கொள்வார்கள். பாரிய நிறுவனங்களில் முடிவுகளை எடுக்கும் அதிகாரத்தை முதலாளிமார் அதாவது கம்பனியின் பங்குதாரர்கள் கொண்டிருக்க மாட்டார்கள். மாறாக, உயர் மட்டத்திக் கல்வி பெற்றிருக்கும் மேல் மட்ட அதிகாரிகளே இத்தகைய முடிவுகளை எடுப்பார்கள். போதிய அளவில் அறிவைப் பெற்றிருக்கும் ஒருவர் பல்வேறு நிதிக் கருவிகளுக்கு ஊடாகவும் மூலதனத்தை திரட்டிக் கொள்ளக் கூடிய ஆற்றலை பெற முடியும். பல்தேசிய கம்பனிகளின் முகாமைத்துவ சபைகளில் வீற்றிருக்கும் முடிவெடுக்கும் அதிகாரிகள் பொருளாதாரம் சம்பந்தப்பட்ட முடிவுகளில் வளர்முக நாடொன்றின் அரசியல் தலைவர்களிலும் பார்க்க அதிகளவிலான செல்வாக்கினை தம்வசம் வைத்திருப்பார்கள்.

இரண்டாவதாக, தொழில்நுட்ப முன்னேற்றம் மக்களின் வாழ்க்கை மாதிரிகளில் பாரிய அளவிலான ஒரு செல்வாக்கை கொண்டிருக்கும். தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் என்பவற்றில் ஏற்பட்டு வரும் அபிவிருத்திகள் தற்போதைய நிறுவனங்களின் இயல்பினை மாற்றியமைக்க வல்லனவாகும். நாங்கள் தற்பொழுது பணிபுரிந்து வரும் அலுவலகங்கள் ஒருங்கிணைப்பு மையங்களாக மாற்றமடைய முடியும். அலுவலக ஊழியர்கள் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் மட்டுமே அலுவலகங்களுக்கு சமூகமளிக்க வேண்டிய தேவை ஏற்படலாம். பெரும்பாலான வேலைகளை அவர்கள் வீட்டிலிருந்து கொண்டே செய்ய முடியும். கணிப்பொறியை அடிப்படையாகக் கொண்ட தொடர்பாடல் பொறிமுறைகளுக்கு ஊடாக அவர்கள் ஒருவருடன் ஒருவர் தொடர்புகளை உருவாக்கிக் கொள்வார்கள். தொலை மாநாடு என தற்பொழுது அழைக்கப்பட்டு வரும் புதிய வழிமுறைகளுக்கு ஊடாக ஒருவருக்கொருவர் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

கல்வியைப் பொறுத்தவரையில் ஆசிரியர் வகித்து வரும் பங்கு மாற்றமடையவிருப்பதுடன், நிறுவனங்கள் என்ற முறையில் பாடசாலைகளின் பங்குப் பணியிலும் மாற்றங்கள் ஏற்படும். மாணவர்கள் வாரத்துக்கு 5 நாட்கள் சுமார் 5 அல்லது 6 மணிநேர நேரங்களை பாடசாலையில் தமது ஆசிரியர்களுடன் செலவிட வேண்டிய தேவை ஏற்படமாட்டாது. ஆசிரியரிடமிருந்து வழிகாட்டு தலை பெறுவதற்கென நாளொன்றுக்கு இரண்டு அல்லது மூன்று மணிநேரங்களுக்கென அல்லது வாரத்தில் மூன்று நாட்கள் அவர்கள் தமது ஆசிரியர்களை சந்திக்க வேண்டிய தேவை ஏற்படக் கூடும். மிகுதி நேரங்களிலும் மாலை நேரங்களிலும் மாணவர்கள் இன்டர்நெட் வசதிக்கு ஊடாக அல்லது பெருமளவுக்கு அபிவிருத்தி அடைந்துள்ள வேறு ஏதேனும் தொடர்பாடல் முறை ஒன்றுக்கு ஊடாக தமது ஆசிரியர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். பாடசாலையில் ஆசிரியர் கற்பிப்பதை விடவும் கூடுதலான தகவல்களை மாணவர் முறைசாராத விதத்தில் ஊடகங்களிலிருந்து கற்றுக் கொள்வார்கள். அத்தகைய ஒரு நிலைமையில் திறன்களை பயில்வதற்காக கற்றுக் கொள்வது என்ற விடயம் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறும்.

துரிதமாக மாற்றமடைந்து வரும் ஓர் உலகில் கல்வி என்பது ஒரே கல்லில் பறிக்கும் மாம்பழமாக இருந்து வரவில்லை. வாழ்நாள் முழுவதும் கல்வி என்ற கோட்பாட்டை அல்லது கல்வியை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டிய தேவையை நாங்கள் ஏற்கனவே ஏற்றுக் கொண்டுள்ளோம். தேவையான சந்தர்ப்பங்களில் வயது வந்தவர்களும் கல்வி கற்பதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படுதல் வேண்டும். மேலதிக கல்விக்கான நிறுவனங்களும் திறந்த முறையில் கல்வி கற்பதற்கான வாய்ப்புக்களும் அவசியமாகும். உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் என்பன கூட இத்தகைய தேவைகளை நிறைவு செய்து வைக்கக் கூடிய விதத்தில் நெகிழ்ச்சித் தன்மையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டி உள்ளது. மாற்றங்கள் துரித வேகத்தில் இடம் பெற்று வருவதனால் இன்னும் 10 வருடங்களில் என்ன நடக்கும் என்பதனை இப்பொழுது முன் உணர்ந்து கூற முடியாதுள்ளது.

மூன்றாவதாக, நாம் இன்று வாழும் உலகம் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டதாகவும் ஒன்றுடன் ஒன்று தங்கியிருப்பதாகவும் உருவாகியிருப்பதுடன் இந்தச் செயன்முறையை இனி ஒரு போதுமே மாற்றியமைப்பது சாத்தியமில்லை. வருங்கால நிறுவனங்கள் அகிலம் தழுவிய இயல்பினை கொண்டவையாகவே செயற்பட்டு வரும். அறிவுத் துறை தொழிலாளர்கள் நாட்டுக்கு நாடு தொழிலுக்கு தொழில் மாறிக் கொண்டே இருப்பார்கள். இந்தச் செயன்முறையின் போது அவர்கள் புதிய சூழ் நிலைகளுக்கு மட்டுமன்றி புதிய தொழில்களின் தேவைகளுக்கும் ஏற்ற விதத்தில் அனுசரித்துச் செல்வதற்கு பழகிக் கொள்ள வேண்டியிருக்கும். நிலைமையை அனுசரித்துச் செய்வது என்பது இந்தச் சூழ் நிலையில் உயிர் வாழ்தலுக்கு அத்தியவசியமானதாக இருந்து வரும்.

உலக மயமாக்கல் நிகழ்வுப்போக்கு வேறு நாடுகளுக்கு குடிபெயர்ந்து செல்பவர்களை மட்டுமன்றி தமது சொந்த நாட்டிலேயே வாழ்ந்து வரும் மக்களின் வாழ்க்கை மாதிரிகளிலும் தாக்கங்கள் எடுத்து வரும். நாங்கள் விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி தகவல்கள் பெரும் பிரவாகமாக எமது நாட்டுக்குள் வந்து கொண்டே இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை அனைத்தும் எமது பாரம்பரிய கலாசாரம் விழுமியங்கள் என்பவற்றில் தாக்கங்களை எடுத்து வரும். ஏற்கனவே எமது சமூகத்தில் நிலவி வரும் பாரம்பரிய உறவு முறைகள் சீர்குலைய ஆரம்பித்துள்ளன. அலுவலகங்களின் நிலை மாற்றம் மற்றும் முழுவதும் கணிப்பொறிகளில் தங்கியிருக்கும் நிலை என்பன மனிதனின் அந்நியமாதல் உணர்வுகளை மேலும் தீவிரப்படுத்தும். ஒருவர் தனது சமநிலையைப் பேணிக் கொள்வதற்கென எதிர்த்துச் சமாளிக்கும் திறன்களை பெற்றுக்கொள்ள வேண்டி இருக்கும். இந்தச் சூழ்நிலையில் 21 ஆம் நூற்றாண்டின் முதல் தசாப்தத்தின் போது பாடசாலைகளில் கல்வி பெறும் பெரும்பாலான மாணவர்கள் தமது வாழ்க்கையின் பெரும் பகுதியில் நாம் மேலே எடுத்துக் காட்டியுள்ள மாற்றங்களை அனுபவித்து வருவார்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

### கல்வித் துறையில் இலங்கையின் சாதனைகள்

கல்வியை பொறுத்தவரையில் புத்தாயிரமாவது ஆண்டின் உதயத்தில் இலங்கை எந்த இடத்தில் நிற்கிறது? குறிப்பாக தென்னாசியாவைச் சேர்ந்த ஏனைய நாடுகளின் நிலைமைகளுடன் ஒப்பிடும் பொழுது இலங்கை கல்வித் துறையில் முக்கியமான பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளது. நாடெங்கிலும் பரவி வியாவித்திருக்கும் சுமார் 10,000 க்கும் மேற்பட்ட பாடசாலைகள் அனைவருக்கும் கல்வி வாய்ப்புக்களை வழங்கி வருகின்றன. தரம் 1 இல் மாணவர் சேர்க்கை 95% ஆக உள்ளது. இடைநிலைக் கல்வி பெறும் மாணவர்கள் சுமார் 70% இனர் க.பொ.த. (சாதாரண தர) வகுப்புக்களுக்கு வருகின்றார்கள். க. பொ. த. (சாதாரண தர) வகுப்புக்களிலிருந்து சுமார் 25% க்கும் மேற்பட்டவர்கள் க. பொ. த. (உயர்தர) வகுப்புக்களுக்கு செல்கின்றார்கள். ஐந்து வயதுக்கும் பதினான்கு வயதுக்கும் இடைப்பட்ட வயதுத் தொகுதியிலிருக்கும் பிள்ளைகளுக்கு கட்டாயமாக கல்வி வழங்கப்பட வேண்டும் என்ற ஒழுங்கு விதிகள் சட்டமாக்கப்பட்டுள்ளன. இலங்கை மக்களில் எழுத்தறிவு பெற்றிருப்பவர்கள் 91.8% ஆகும். கல்வியை பொறுத்தவரையில் பால் ரீதியிலான பாரபட்சம் காட்டப்பட்டு வரவில்லை. பெண்களும் ஆண்களும் இணையான விதத்தில் கல்வி வாய்ப்புக்களை அனுபவித்து வருகின்றார்கள்.

உயர் கல்வித் துறையை பொறுத்த வரையில் எமது நாட்டில் சுமார் 12 பல்கலைக்கழகங்கள் உள்ளன. ஆனால், பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி கோரும் மாணவ மாணவியரில் இரண்டு சதவீதத்தினருக்கு மட்டுமே அவற்றால் வாய்ப்புக்களை வழங்கக் கூடியதாக உள்ளது. இலங்கைக்கு இணையான விதத்தில் அபிவிருத்தி மட்டங்களை கொண்டிருக்கும் ஏனைய நாடுகளின் பல்கலைக்கழக மாணவர் விகிதத்தைப் பார்க்கிலும் இது குறைவானதாகும். பல்கலைக்கழகம் சாராத மூன்றாம் நிலைத் துறையில் கல்விக்கான வாய்ப்புக்கள் வரையறுக்கப்பட்ட அளவிலேயே காணப்படுகின்றன. அவற்றின் தரமும் சிறந்ததாக இருந்து வரவில்லை. உயர் கல்வியை விரிவாக்குவதற்கான தெளிவான ஒரு தேவை இருந்து வருகின்றது. பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் பெற்று வெளியேறும் வரையறுக்கப்பட்ட அளவிலான பட்டதாரிகளும் கூட வளர்ச்சியின் உந்துவிசையாக இருந்து வரும் தனியார் துறையில் தொழில் வாய்ப்புக்களை பெற முடியாத நிலை காணப்படுகின்றது. இதன் காரணமாக பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறுபவர்களை அரசாங்கத் துறையின் உற்பத்தி சாராத துறைகளில் சமூக நலன் புரித் திட்டம் ஒன்றின் அடிப்படையில் வேலைகளில் அமர்த்த வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

எமது பல்கலைக்கழக கல்வியமைப்பை பொருத்தமான, தேவையை அடிப்படையாகக் கொண்ட கிராக்கி நிலவி வரும் கல்வியொன்றை வழங்கும் விதத்தில் மீளமைப்புச் செய்ய வேண்டிய அவசரத் தேவை இப்பொழுது நிலவுகின்றது. பல்கலைக்கழகம் சாராத மூன்றாம் நிலைத் துறை தொழில்நுட்ப மற்றும் தொழில் கல்வித் துறை என்பவற்றின் நிலைமை இதை விடவும் மோசமானதாகும்.

தற்போதைய கல்விச் சீர்திருத்தங்கள் நிகழ்ச்சித் திட்டம் பொதுக் கல்வியின் தரத்தை விருத்தி செய்தல் மற்றும் கல்வியில் அனைவருக்கும் சமத்துவமான முறையில் வாய்ப்புக்களை வழங்குதல் என்பவற்றை நோக்கங்களாக கொண்டுள்ளது. அடுத்து வரும் மூன்று அல்லது நான்கு வருட காலப் பிரிவுக்குள் அனைவருக்கும் ஆரம்பக் கல்வியை வழங்குதல், அனைவருக்கும் எழுத்தறிவு, அனைத்து ஆசிரியர்களுக்கும் தொழில்சார் பயிற்சி மற்றும் சிறந்த தரமான உள்ளீடுகளை வழங்குதல் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட குறிக்கோள்களை சாதித்துக் கொள்ள முடியும். எனினும், கல்வித் துறையிலிருந்து கல்வியைப் பெற்று வெளியேறிச் செல்பவர்களின் தரத்தை ஒரு குறுகிய காலப் பிரிவுக்குள் விருத்தி செய்துவிட முடியாது. மேலும், அளவு ரீதியான நியதிகளில் வெற்றியை கணிப்பிடவும் முடியாது. பொதுக் கல்வியில் மட்டுமன்றி உயர் கல்வித் துறையிலும் தொழில்நுட்ப மற்றும் தொழில்கல்வித் துறையிலும் சீர்திருத்தங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. எனினும், இந்த அமைப்பில் நிலவி வரும் இடையூறுகளை கவனத்தில் எடுக்கும் பொழுது இந்தக் கல்வியமைப்பின் மீது நல்ல தாக்கம் ஒன்று ஏற்படுவதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்றே தோன்றுகின்றது.

### வருங்கால நடவடிக்கைகளுக்கான துறைகள்

இலங்கை அடுத்து வரும் மூன்று அல்லது நான்கு வருட காலப் பிரிவுக்குள் அனைவருக்கும் கல்வி என்ற இலக்கினை சாதித்துக் கொள்ள முடியும். ஆனால், எழுத்தறிவு தொடர்பான கருதுகோளினை மாறிவரும் இன்றைய உலகின் தேவையின் அடிப்படையில் மீள வரைவிலக்கணப்படுத்த வேண்டியுள்ளது. கட்டாயக் கல்வி என்பது ஒரு பிள்ளைக்கு வாழ்க்கைக்குத் தேவையான அறிவையும் திறன்களையும் அதேபோல மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப அனுசரித்துச் செல்லும் பொருட்டு தொடர்ச்சியாக கல்வி பெறுவதற்கு ஒருவரை இயலச் செய்யக் கூடிய பயிலும் திறன்களைப் பெற்றுக் கொள்ளும் ஒரு செயன்முறையையும் உள்ளடக்கியிருக்க வேண்டும் என யுனெஸ்கோ யோசனை தெரிவித்துள்ளது. எழுதவும் வாசிக்கவும் கற்றுக்கொள்வது அடிப்படை எண்ணறிவையும் கூட்டல் முறையையும் கற்றுக் கொள்வது என்பன மட்டும் புதிய சூழ்நிலையைப் பொறுத்தவரையில் போதியதாக இருந்து வர மாட்டாது. சுமார் 10 அல்லது 11 வருட காலப் பிரிவைக் கொண்ட பொதுக் கல்வி ஒன்று இதற்கென அவசியமாகும். இப்பொதுக் கல்வி பாடத்திட்டம் எழுத்தறிவு, எண்ணறிவு மற்றும் படங்கள் என்பவற்றை உள்ளடக்கிய துறைகளில் ஒருவருக்கு தேர்ச்சிகளை பெற்றுக்கொள்வதற்கு வழிகோல வேண்டும். அது மட்டுமன்றி சூழல் தொடர்பான தேர்ச்சிகள் சமயம் மற்றும் தார்மீக நெறிமுறைகள் தொடர்பான தேர்ச்சிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் கற்பதற்கு கற்றல் தொடர்பான தேர்ச்சிகள் என்பவற்றையும் ஒரு பிள்ளை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. பிள்ளைகள் சுமார் 16 வயதை அடையும் வரையில் அவர்கள் பாடசாலைக்குச் சமூகமளிப்பதற்கு போதிய வசதிகளை நாங்கள் வழங்கி வந்தால் மட்டுமே இந்த பரந்த மட்டத்திலான குறிக்கோள்களை எம்மால் சாதித்துக் கொள்ள முடியும். இன்னும் சுமார் 5 வருட காலத்தில் கட்டாயக் கல்வி தொடர்பான எமது சட்டத்தினை வயது வரம்பை 16 வருடங்களாக உயர்த்தக் கூடிய விதத்தில் திருத்தியமைக்க வேண்டி நேரிடலாம். குடிசன வியலில் இடம் பெற்றுவரும் நிலை மாற்றம் சிறு குழந்தைகளின் சதவீதத்தை கணிசமான அளவில் குறைத்துவிடும். அந்த நிலையில் அனைவருக்கும் 16 வயது வரையில் கல்வி வசதிகளை வழங்குவதற்கு தற்பொழுது எம்மிடம் இருக்கும் உள்கட்டமைப்பு வசதிகள் பொருத்தமாக பராமரிக்கப்படுமிடத்து போதியவையாக இருந்து வரும்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் பாடசாலைகள் தொழில்நுட்பப் புரட்சியொன்றை எதிர்கொண்டு வருகின்றன. மைக்ரோ கம்ப்யூட்டர்களின் அறிமுகம் வகுப்பறைகளில் கற்றல் செயற்பாடுகளில் ஒரு புரட்சியை எடுத்து வந்துள்ளது. கணிப்பொறியுடன் இணைந்த இன்டர்நெட் வசதி மாணவர்கள் தாமே விடயங்களை தேடி கற்பதற்கான வாய்ப்பினை வழங்கி வருகின்றது. இதன் மூலம் அவர்கள் ஆசிரியர்களின் வழிகாட்டுதலை எந்த நேரத்திலும் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பும் உள்ளது. மாணவர்கள் பல்வேறு வெப் தளங்களிலும் தேடுதல் நடத்தி தமக்கு வேண்டிய விடயங்களை தாமே கற்றுக்கொள்ள முடியும். பல் ஊடகத் திரைகள், டிவி கள், வீடியோக்கள் மற்றும் ஏனைய தொழில்நுட்ப சாதனங்கள் என்பன வகுப்பறைப் போதனையின் தரத்தை உயர்த்துவதற்கு பெருமளவுக்கு உதவுகின்றன.

மாணவர்களுக்கு அடிப்படை கல்விச் சாதனங்களை கூட வழங்க முடியாதிருக்கும் இலங்கையைப் போன்ற ஒரு வளர்முக நாட்டை பொறுத்தவரையில் இவை அனைத்தும் வெறும் கனவுகளாகவே இருக்க முடியும் என ஒருவர் வாதிடலாம். ஆனால், கடந்த 6 அல்லது 7 வருட காலப் பிரிவின் போது தொலைக்காட்சிகள், தொலைபேசிகள் மற்றும் கணிப்பொறிகள் என்பவற்றின் பாவனைகளில் ஏற்பட்டு வந்துள்ள அதிகரிப்பினை பார்க்கும் பொழுது எவ்வளவு விரைவில் மாற்றங்கள் இடம்பெற முடியும் என்பதனை அறிந்து கொள்ள முடிகிறது.

கல்விச் சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மின்சார வசதி கிடைக்கும் அனைத்துப் பாடசாலைகளுக்கும் கணிப்பொறிகள் வழங்கப்படவுள்ளன. தற்பொழுது சுமார் 100 பாடசாலைகள் கணிப்பொறி மையங்களை கொண்டிருப்பதுடன், க. பொ. த. (சாதாரண தர) வகுப்புக்களிலும் க. பொ. த. (உயர்தர) வகுப்புக்களிலும் கல்வி பயின்று வரும் அனைத்து மாணவர்களுக்கும் அவை கணிப்பொறி தொடர்பான அறிவை வழங்கி வருகின்றன. தற்பொழுது செயற்படுத்தப்பட்டு வரும் வெளிநாட்டு நிதியுதவியுடன் கூடிய செய்திட்டங்களும் அடுத்து வரும் காலப் பிரிவில் செயற்படுத்தப்படவிருக்கும் அத்தகைய செய்திட்டங்களும் அடுத்த 3 வருட காலப் பிரிவின் போது ஆகக் குறைந்தது 1000 இடை நிலைப் பாடசாலைகளுக்கு கணிப்பொறி மையங்களை வழங்கும். மின்சாரம், தொலைபேசி இணைப்பு போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதே இது தொடர்பாக அரசாங்கத்தின் பணியாக இருந்து வரும்.

இந்த விஷயத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளில் இடம்பெற்று வரும் மாற்றங்களுடன் இணைந்து செல்வதற்கான முயற்சிகளை நாங்கள் மேற்கொள்ளாவிட்டால் தொடர்ந்தும் குறை விருத்தி நிலையிலேயே நிலைத்திருப்போம்.

மாறி வரும் சூழ்நிலை மற்றும் வகுப்பறைக்குள் தொழில்நுட்பத்தின் பிரவேசம் என்பன ஆசிரியரின் பங்குப் பணியிலும் அவசியமாகவே ஒரு மாற்றத்தை எடுத்து வரும். இனிமேல் ஆசிரியர் தேவைப்பட மாட்டார் என்றோ பிள்ளைகள் விடயங்களை தாமாகவே கற்றுக் கொள்ள முடியும் என்றோ எவரும் எண்ணத் துணியக் கூடாது. கணிப்பொறிகள் ஒரு போதுமே ஆசிரியர்களின் இடத்தை மாற்றீடு செய்ய முடியாது. ஆனால், ஆசிரியர் வகித்து வரும் பங்கு மாற்றமடைய வேண்டியுள்ளது. அவர் இனியும் அறிவின் உறைவிடமாக இருந்து அதனை மாணவர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்க வேண்டிய தேவை இருந்து வர மாட்டாது. நவீன கல்வி நடைமுறைகள் எடுத்துக் கூறுவது போல கற்பதற்கு வசதி செய்து கொடுக்கும் பணியினை நிறைவு செய்து வைப்பவராகவே ஆசிரியர் இனிமேல் இருந்து வருவார். அவர் மாணவர்களுக்கு புத்திமதிகளையும் வழிகாட்டுதலையும் வழங்கும் அதே வேளையில், தாமாகவே தூண்டப்பட்டுள்ள மாணவர்கள் விடயங்களைத் தேடி கற்றுக் கொள்வார்கள். ஆனால், தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் விதத்தினை ஆசிரியர்கள் அறிந்து கொள்ள வேண்டியிருப்பதுடன், அதன் மூலம் கிடைக்கும் அறிவினை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்வதற்கென அவர்களுக்கு பயிற்சியளிப்பது எப்படி என்பதனையும் ஆசிரியர்கள் அறிந்திருக்க வேண்டும். இதற்கென ஆசிரியர்கள் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்பட்ட தொழில்சார் வல்லுனர்களாக இருந்து வருவது அவசியமாகும். புதிய கல்விச் சீர்திருத்திருத்தங்களுக்கு அமைய அடுத்து வரும் 3 அல்லது 4 வருட காலப் பிரிவுக்குள் அனைத்து ஆசிரியர்களுக்கும் தொழில் சார் அடிப்படையில் பயிற்சி வழங்கப்படும். அதன் பின்னர் பயிற்றப்படாத எந்தவொரு ஆசிரியரும் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார். அனைத்து ஆசிரியர்களும் இறுதியில் தொழில்சார் ரீதியில் பயிற்றப்பட்ட பட்டதாரிகளாக உருவாக வேண்டும் என்பதே அடுத்த இலக்காக இருந்து வருதல் வேண்டும். அது இந்நாட்டின் ஆசிரியர் தொழிலை வளர்ச்சி அடைந்த நாடுகளில் அத்தொழில் பெற்றிருக்கும் அந்தஸ்துக்கு இணையாக உயர்த்திவிடும்.

சர்வதேச மொழி ஒன்றை படிக்க வேண்டிய அவசியம் எமது நாட்டு மக்களால் பரவலான முறையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆங்கிலம் முதன்மையான வெளிநாட்டு மொழியாக இருந்து வரும் அதேவேளையில், ஏனைய வெளிநாட்டு மொழிகளை கற்பதும் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும். பெருகிவரும் சர்வதேச தொடர்புகள் வெளிநாட்டு மொழிகளை கற்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும். ஆங்கிலம் கற்பிப்பவர்களின் தரத்தை விருத்தி செய்ய வேண்டிய அவசியத்தை கல்விச் சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டம் ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே ஆங்கில ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கென துரிதப்படுத்தப்பட்ட ஒரு திட்டம் அவசியமாக உள்ளது.

உலக மயமாக்கல் ஒரு புறம் முழு மனித குலத்தையும் ஒரு பூகோள குடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தில் ஒன்றாக இணைத்து வரும் அதே வேளையில் மறுபுறத்தில் நாடுகளுக்குள் பல்வேறு இன, சமய, சமூக குழுக்களுக் கிடையில் மோதல்கள் தோன்றி வரு வதுடன் நாடுகளுக்கிடையிலும் பகைமை நிலைமைகள் உருவாக்கி வருகின்றன. இந்நிலைமை பல இலட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் சொல்லொணாத் துன்பத்தை எடுத்து வந்துள்ளது. இந்த மோதல்களின் விளைவாக மரணங்களும், அங்கவீனங்களும் ஆயிரக் கணக்கில் மக்கள் இடம்பெயர்ந்து செல்லும் நிலைமைகளும் ஏற்பட்டுள்ளன. இந்த வன்செயல் வெறியாட்டங்களை ஒழித்துவிட முடியா விட்டாலும் கூட அவை கட்டுக்குள் எடுத்து வரப்படுதல் வேண்டும். அவ்வாறில்லாவிடில், கடந்த பல நூற்றாண்டு காலமாக விஞ்ஞானத்திலும் தொழில்நுட்பத்திலும் ஏற்பட்டு வந்திருக்கும் முன்னேற்றங்கள் காரணமாக மனித குலம் ஈட்டிக் கொண்டிருக்கும் நற்பயன்களை உலக மக்கள் தொகையில் கணிசமான ஒரு பங்கினர் அனுபவிக்க முடியாத ஒரு நிலைமை தோன்ற முடியும்.

இலங்கையில் வாழும் நாம் இன்று மிக மோசமான பின்விளைவுகளை எடுத்து வரக் கூடிய அழிவுகரமான போராட்டம் ஒன்றின் பொறியில் சிக்கியுள்ளோம். சமூகம் எங்கிலும் வன்செயல்கள் வியாபித்திருப்பதுடன், மனித உயிரின் மதிப்பு மிகவும் மலிவு நிலைக்கு வீழ்ந்துள்ளது. மக்களின் உள்ளங்களில் போராட்டத்துக்கான விதைகள் தூவப்படும் பொழுது இளைய தலைமுறையினரின் உள்ளங்களில் சமாதானம் மற்றும் அகிம்சை என்பவற்றின் கருத்துக்களை பதிய வைப்பதில் கல்வி மிகவும் முக்கியமான ஒரு பங்கினை வகித்து வருகின்றது. மனித குலத்தின் பன்முகத் தன்மை குறித்தும், அதேவேளையில் முழு மனித சமுதாயத்தினதும் ஒரு மித்த தன்மைகள் மற்றும் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் நிலை என்பவை குறித்தும் விழிப்புணர்வை தூண்டுவதே கல்வியின் பணி எனக் கூறப்படுகின்றது. பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்கள், பாடத்திட்டங்கள் மற்றும் இணை பாடத்திட்ட நடவடிக்கைகள் என்பன சமூக உறவுகளில் போட்டியை தூண்டுவதற்கு பதிலாக ஒத்துழைப்பு உணர்வினையும், பகிர்ந்து கொள்ளும் உணர்வினையும், மனிதர்களுக் கிடையில் பரஸ்பர மரியாதையையும் மேம்படுத்த வேண்டும். பிள்ளைகள் தம்மை மற்றவர்களின் இடத்தில் வைத்து அவர்களின் எதிர்விளைவுகளை புரிந்து கொள்ளக்கூடியவர்களாக இருந்து வர வேண்டும். பாடசாலைகளில் அத்தகைய உணர்வுகளை விருத்தி செய்வது வாழ் நாள் முழுவதும் சமூக நடத்தையின் மீது நல்ல விளைவுகளை எடுத்து வரும்.

பாடத்திட்டத்தை வகுப்பவர்கள், பள்ளி நிர்வாகிகள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் சமாதான காலாசாரம் ஒன்றை வளர்த்தெடுப்பதற்கென முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதே நேரத்தில் ஒருவர் தனது உரிமைகள் குறித்தும் அதே போல சமூகத்தின் மீதான கடப்பாடுகள் குறித்தும் அறிந்து கொள்ள வேண்டும். ஜனநாயக முறையிலான பங்கேற்பு என்பது ஒவ்வொரு பிரஜையினதும் உரிமையாகவும் அதேபோல கடமையாகவும் உள்ளது. சாத்தியமான சந்தர்ப்பங்களிலெல்லாம் இக் குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதற்கென பாரம்பரிய விழுமியங்கள் மேம்படுத்தப்பட்டு பேணி பாதுகாக்கப்படுதல் வேண்டும். பாரம்பரிய குடும்ப அமைப்பின் சிதைவு, புதிய தொழில் நுட்பத்தின் பிரயோகம் மற்றும் நவீன சமூகத்தில் அதிகரித்த அளவில் இடம் பெற்று வரும் போட்டி என்பன வளர்ச்சியடைந்த நாடுகளில் வாழ்ந்து வரும் மக்களிடையே இப்பொழுது ஒரு வித அன்னிய உணர்வை தோற்றுவித்துள்ளன. இப்போக்கு வெகு விரைவில் வளர்முக நாடுகளில் பரவ முடியும்.

விளையாட்டு மற்றும் ஓய்வு என்பவற்றை பயன்படுத்துவதுடன் தொடர்புபட்ட தேர்ச்சிகளையும் அன்றாட வாழ்க்கையில் ஒருவர் சந்திக்க வேண்டியிருக்கும் மன அழுத்த நிலைமைகளை சமாளிப்பதற்கான திறன்களையும் வழங்குவதில் இந்தப் பின்னணியில் கல்வி மிக முக்கியமான ஒரு பங்கினை வகிக்க வேண்டியுள்ளது.

அறிவை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகத்தை நோக்கி மனிதன் நகர்ந்து செல்வதானது முகாமை துறையை பொறுத்தவரையில் முக்கியமான பல தாக்கங்களை கொண்டிருக்கும். தகவல்களை அதிக அளவில் அறிந்து கொண்டிருக்கும் ஒரு நபரை அடுத்தவர்கள் ஏமாற்ற முடியாது. தலைமைத்துவத்தை வழங்குதல், தாமே முன்மாதிரியாக இருத்தல் என்பன மற்றவர்களை செயலுக்கு தூண்டும் முக்கிய வழிமுறைகளாக இருந்து வரும். பங்கேற்பு அணுகுமுறைகள் பெருமளவுக்கு வெற்றியளிப்பவையாக இருக்கும். கட்டுப்பாட்டை பன்முகப்படுத்துதல், பாடசாலைகளுக்கு அதிக அளவிலான தன்னாதிக்கத்தை வழங்குதல் மற்றும் பாடசாலை மட்ட முகாமை என்பன இந்த நிலைமாற்றத்தின் போது மேற்கொள்ளப்பட வேண்டி இருக்கும் ஒரு சில வழிமுறைகளாகும். பெற்றோரும் சமூகமும் பாடசாலை முகாமைச் செயன்முறையில் பங்கேற்பதற்கு தூண்டுதல் அளிக்கப்படும். பாடசாலை நிர்வாகிகள் தாம் பணி புரியும் சமூகத்துக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களாக இருந்து வருவார்கள்.

பல்கலைக்கழக கல்வியைப் பொறுத்தவரையில் பட்டதாரிகள் தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யக் கூடிய விதத்தில் கல்வியின் தரத்தை விருத்தி செய்வது ஓர் உடனடிப் பணியாக இருந்து வருகின்றது. அறிவுத் துறையின் உன்னதமான மையங்கள் என்ற முறையில் பல்கலைக்கழகங்கள் சமூக அபிவிருத்தியை மேம்படுத்துவதில் முக்கியமான ஒரு பங்கினை வகிக்க வேண்டியுள்ளன. பல்கலைக்கழகங்களின் பட்டதாரிகள் தலைமைத்துவத்தை வழங்க வேண்டும் என்றும் அதன் மூலம் ஏனையவர்களுக்கு அதிகளவிலான வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் பின்னணியில் பல்கலைக்கழக கல்வியின் தாக்கத் திறனை உயர்த்துவதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இதற்கென பாடநெறிகளின் கட்டமைப்புக்களும் பாடத்திட்டங்களும் போதனா முறைகளும் மதிப்பீட்டு முறைகளும் மாற்றியமைக்கப்படுவது அவசியமாகும்.

உயர் கல்வி தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டங்களில் பாரிய மாற்றங்களை எடுத்து வரும். பட்டதாரிகள் பல்வேறு பாடங்களையும் கற்றறிந்து கொள்ளும் வகையில் நெகிழ்ச்சித்தன்மையுடன் கூடிய பாடத்திட்டமும் பாடத் தொகுதி முறையும் அறிமுகம் செய்து வைக்கப்படும். பல்கலைக்கழக போதனா முறைகளிலும் மாற்றங்கள் எடுத்து வரப்படும். பல்கலைக்கழகங்கள் கல்வி பயிலும் முறையை விருத்தி செய்வதற்கென நவீன கல்வித் துறை தொழில் நுட்பங்களை பெற்றுக் கொள்வது அவசியமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு செலவுத்திட்டம் 2000: ஒரு கண்ணோட்டம்

வின்சன்ட் மேர்வின் பெர்னான்டோ
(மூத்த உதவிப் பணிப்பாளர், இலங்கை, மத்திய வங்கி)

*பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் ஆறாவது வரவு செலவுத் திட்டம் அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இது புதிய நூற்றாண்டின் முதலாவது வரவு செலவுத் திட்டமாகவும், சுதந்திரத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட 52 ஆவது வரவுசெலவுத்திட்டமாகவும் இருந்தது. வரவுசெலவுத்திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயங்கள் தொடர்பாக பொதுவாக நாட்டு மக்கள் அனைவருமே ஆர்வம் காட்டி வருகின்றார்கள். ஒரு சில வரவுசெலவுத் திட்டங்கள் வரலாற்று ரீதியாகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. இக்கட்டுரையின் முதல் பாகத்தில் சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டங்கள் வரலாற்று அடிப்படையில் நோக்கப்படுவதுடன், கட்டுரையின் இரண்டாவது பகுதியில் அண்மைக் கால வரவு செலவுத் திட்டங்களின் முக்கியமான குறிக்கோள்கள் தொடர்பாகவும் 2000 ஆவது ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் தொடர்பாகவும் நோக்கப்படுகின்றது.*

## சுதந்திரத்தின் பின்னர் வரவுசெலவுத்திட்டங்கள்

*1947 இலங்கை சுதந்திர சட்டவாக்கத்தின் கீழ் இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்பட்டதுடன் பிரதம மந்திரியின் தலைமையிலான அமைச்சரவையும் மக்கள் பிரதிநிதிகள் சபையும் உருவாக்கப்பட்டது. அதன் கீழ் இலங்கையின் முதலாவது வரவுசெலவுத்திட்டம் 1947 டிசம்பர் மாதம் 01 ஆம் திகதி அப்பொழுது நிதியமைச்சர் பொறுப்பை வகித்து வந்த திரு. ஜே. ஆர். ஜயவர்தன அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு 15 வருடங்களின் பின்னர் 1963 ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதியன்று வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும் வாய்ப்பு நிதியமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்ன அவர்களுக்குக் கிட்டியது. சுதந்திரப் பொன் விழாவின் போது நாட்டின் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும் வாய்ப்பு பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் நீதி, அரசியல் யாப்பு விவகார, இன விவகார, தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான பேராசியர் ஜீ. எல். பீரிஸ் அவர்களுக்கு கிடைத்தது. அதே வேளையில் புதிய நூற்றாண்டின் முதலாவது வரவுசெலவுத்திட்டத்தை சமர்ப்பிக்கும் வரலாற்று முக்கியத்தும் வாய்ந்த வாய்ப்பு நிதி அமைச்சர் என்ற முறையில் அதி மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு கிடைத்தது.*

*அடுத்து வரும் வருடம் தொடர்பாக செலவுகளை மேற்கொள்வதற்கென ஒப்புதலைப் பெற்றுக் கொள்வதற்கென, பல்வேறு காரணங்களினால் செலவு ஒதுக்கு மசோதா ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாது போகும் சந்தர்ப்பத்தில் அதற்குப் பதிலாக தற்காலிகமாக சமர்ப்பிக்கப்படும் ஓர் ஆவணமே இடைக்கால செலவு ஒதுக்காகும். போர் நிலைமைகள் பொதுத் தேர்தல்கள் போன்றவை இடம் பெறும் சந்தர்ப்பங்களில் இத்தகைய ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. இத்தகைய இடைக்கால செலவு ஒதுக்கு அரசாங்க வரவு செலவுத் திட்டத்திலிருந்தும் பல அம்சங்களில் வேறுபடுகின்றது. புதிய வரிகள், புதிய திட்டங்கள் என்பவை அதில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. மேலும், வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை அல்லது மிகை என்பன குறிந்து அதில் குறிப்பிடப்படுவதுமில்லை.*

*சுதந்திரத்துக்கு பின்னர் பல்வேறு நிதியமைச்சர்களினாலும் சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டங்களை நோக்கும் பொழுது அவற்றில் பல்வேறு விதமான அபிவிருத்தி உத்திகள், அபிவிருத்தித் திட்டங்கள் என்பன உள்ளடக்கப்பட்டிருந்ததனை காண முடிகிறது. 1948 க்கும் 1978 க்கும் இடைப்பட்ட காலப் பிரிவின் போது சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டங்களில் அடிப்படையாக அமைந்திருந்த விடயம் உள்நோக்கிய உத்தியொன்றை அடிப்படையாகக் கொண்ட சமூக நலனோம்பல் வரவு செலவுத் திட்டங்களாக அவை இருந்து வந்தமையாகும். அதன் கீழ் இறக்குமதிப் பிரதியீடு, செலாவணிக் கட்டுப்பாடு, நிலையான செலாவணி விகிதமுறை, வெளிநாட்டு முதலீடுகள் மீதான உச்ச வரம்பு, ஊக்குவிப்புக்கள், அரச ஏகபோகத்தை தொடர்ந்து நிலைநிறுத்துதல், பொருளாதாரத்தில் தனியார் துறைக்கான வாய்ப்புக்களை வரையறுத்தல், சமூக பொருளாதார நிலைமையை விருத்தி செய்யும் நோக்குடனான பல நடவடிக்கைகள் என்பன மேற்கொள்ளப்பட்டன. ஆனால், 1978 ஆம் வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்துடன் இந்த நிலைமையில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அதன் பின்னர் வெளிநோக்கிய உத்தி வரவுசெலவுத் திட்டங்களின் உள்ளார்ந்த ஒரு பாகமாக இடம்பெறத் தொடங்கியது. இந்த உத்தி கட்டற்ற சந்தைப் பொருளாதார முறை, திறந்த பொருளாதார முறை மற்றும் ஏற்றுமதி வழிப்பட்ட பொருளாதார முறை எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டு வருகின்றது. இதன் கீழ் இறக்குமதிகள் மீதான கட்டுப் பாடுகளைத் தளர்த்தல், செலாவணிக் கட்டுப்பாடுகளை தளர்த்துதல், ஏற்றுமதி மேம்பாடு, அரச துறையின் செயற்பாட்டை குறைந்த மட்டத்தில் வைத்துக் கொள்ளல், தனியார்மயமாக்கல், பொருளாதார அபிவிருத்தியில் தனியார் துறையின் பங்களிப்பை பெற்றுக் கொள்ளல், வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல், மானியங்களை வழங்கும் கொள்கையை பொருளாதார வளர்ச்சிக்கு பொருத்தமான விதத்தில் அமைத்துக் கொள்ளல், பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமான நிறுவனக் கட்டமைப்பை உருவாக்கிக் கொள்ளல். நிதிக் கட்டுப்பாடுகளை தளர்த்துதல் மற்றும் போட்டிக்கு வாய்ப்பளித்தல் போன்ற விரிவான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1977 க்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டங்களில் பொருளாதார வளர்ச்சியை அதிகரித்துக் கொள்வதிலும் பார்க்க மக்களின் சமூக, பொருளா தார நிலைமையை மேம்படுத்துவதில் அதிக அளவுக்கு கவனம் செலுத்தப்பட்டு வந்தது. இதன் விளைவாக, வருமானத்தின் அடிப்படையில் இலங்கை உலகின் குறை வருமானத் தொகுதியைச் சேர்ந்த நாடுகளில் ஒன்றாக இருந்து வந்த அதேவேளையில், சமூக, பொருளாதார விருத்தியைப் பொறுத்தவரையில் அது உயர் வருமான நாடுகளில் நிலவி வந்த நிலைமைகளை அண்மித்திருந்தது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானப் பகிர்வில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளை குறைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 1978 இன் பின்னர் இதுவரை காலமும் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டங்களின் அடிப்படைக் குறிக்கோள், சமூக நலனோம்பலிலும் பார்க்க பொருளாதார வளர்ச்சியை அதிகரித்துக் கொள்வதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொள்வதாகவே இருந்து வந்தது. பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தக் கூடிய விதத்தில் விலை உறுதிப்பாட்டை – அதாவது பணவீக்கத்தை – முடியுமான அளவுக்கு கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வதே அண்மைக் கால வரவுசெலவுத்திட்டங்களின் பிரதான குறிக்கோளாக இருந்து வந்தது.

எனவே, 1978 க்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டங்களையும் 1978 இன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டங்களையும் ஒன்றாக எடுத்து ஒரு ஒப்பீட்டை மேற்கொள்ள முடியாது. அந்தந்த காலகட்டங்களில் பின்பற்றப்பட்டு வந்த பொருளாதார அபிவிருத்தி உத்திகள் மற்றும் முன்னுரிமைகள் என்பவற்றின் அடிப்படையிலேயே அந்தந்த வரவு செலவுத் திட்டங்கள் நோக்கப்படுதல் வேண்டும். ஒரு சிலர் அவ்வக் காலங்களில் காணப்பட்ட வரவு செலவுத் திட்ட பற்றாக்குறைகளை ஒப்பீட்டு ரீதியில் எடுத்துக் காட்டி, வரவு செலவுத் திட்டங்களை விமர்சனம் செய்து வருகின்றனர். மேலும், மிகை காணப்படும் ஒரு வரவு செலவுத் திட்டம் ஒரு நல்ல வரவுசெலவுத்திட்டம் எனக் கருதும் ஒரு காலப் பிரிவும் இருந்து வந்தது. எவ்வாறிருப்பினும், பற்றாக்குறை வரவுசெலவுத்திட்டக் கொள்கையே வளர்முக நாடுகளுக்குப் பொருத்தமான கொள்கை என்ற விடயம் இப்பொழுது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எனினும், இப் பற்றாக்குறையை மொத்தத் தேசிய உற்பத்தியின் விகிதம் என்ற முறையில் மிகக் குறைந்த மட்டத்தில் பராமரித்து வருவது மிக முக்கியமாகும். 1948 தொடக்கம் இன்று வரையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவுசெலவுத்திட்டங்களின் சார்பு ரீதியான பற்றாக்குறைகள் படிப்படியாக அதிகரித்து வந்துள்ள போதிலும், சார்பு ரீதியான பற்றாக்குறை (நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சார்பு ரீதியில்) அதிகரித்துள்ளதா? இல்லையா? என்பதனை கண்டறியாது வரவு செலவுத் திட்டம் ஒன்றை விமர்சிப்பதில் பயனில்லை. 1948 ஆம் வருடம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது வரவு செலவுத் திட்டத்தில் இலங்கையின் அரச வருமானம் ரூ. 541 மில்லியனாக இருந்து வந்ததுடன், அரச செலவினம் ரூ. 588 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் சுதந்திர இலங்கையின் முதலாவது வரவுசெலவுத்திட்டம் 47 மில்லியன் ரூபாய் பற்றாக்குறையை காட்டியிருந்தது. அதன் பின்னர் 1953 வரையில் பற்றாக்குறை வரவுசெலவுத்திட்டங்களே தாக்கல் செய்யப்பட்டு வந்தன. 1954 மற்றும் 1955 ஆகிய இரு நிதியாண்டுகள் தொடர்பாக மிகை வரவு செலவுத்திட்டங்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த வரவு செலவுத்திட்ட மிகைகள் முறையே 5 மில்லியன் ரூபாவாகவும் 91 மில்லியன் ரூபாவாகவும் இருந்து வந்தன. 1955 தொடக்கம் இதுவரையில் தொடர்ச்சியாக பற்றாக்குறை வரவு செலவுத் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அவற்றின் பற்றாக்குறை விகிதங்கள் கீழே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன:

* முதலாவதாக வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை ரூபா 500 மில்லியனை தாண்டிய வருடம் 1966 (மொ. தே 2 6.8 வீதம்).
* முதல் தடவையாக வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை ரூபா 1000 மில்லியனை தாண்டிய வருடம் (மொ. தே 2 7.7%) 1971.
* வ செ திட்ட பற்றாக்குறை முதல் தடவையாக ரூ. 5000 மில்லியனை தாண்டிய வருடம் (1978) மொ தே உ (14.1%).
* வ செ திட்ட பற்றாக்குறை முதல் தடவையாக ரூபா. 20,000 மில்லியனை தாண்டிய வருடம் 1986 (மொ. தே. உ. 12.2%).
* வ செ திட்ட பற்றாக்குறை முதல் தடவையாக ரூபா. 50,000 மில்லியனை தாண்டிய வருடம் 1994 (மொ. தே. உ. 10%).
* வ செ திட்ட பற்றாக்குறை முதல் தடவையாக ரூபா 80,000 மில்லியனை தாண்டிய வருடம் (1998 மொ. தே. உ 9%)

1999 ஆம் வருடம் தொடர்பான வ செ திட்ட பற்றாக்குறை 89,000 மில்லியன் ரூபாவாக இருந்து வந்ததுடன், மொத்த தேசிய உற்பத்தியில் 7.9% ஆக இருந்தது. இந்த வகையில் நோக்கும் பொழுது 1978 இல் 5000 மில்லியன் ரூபாவாக இருந்து வந்த வ செ திட்ட பற்றாக்குறை தற்பொழுது 89,000 மில்லியன் ரூபா வரையில் கணிசமான அளவில் அதிகரித்துச் சென்றிருப்பதைக் காண முடிகிறது. எனினும், மொத்த தேசிய உற்பத்தியின் விகிதாசாரத்துடன் ஒப்பிடும் பொழுது இது 14% இலிருந்து 8% வரையில் வீழ்ச்சியடைந்திருப்பதனையும் அவதானிக்க முடிகிறது.

இந்த விகிதத்தை மேலும் குறைத்துக் கொள்வதற்கென பல்வேறு உத்திகள் பின்பற்றப்பட்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது. இது பெருமளவுக்கு பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த ஒரு போக்காகும்.

## வரவு செலவுத் திட்டத்தின் செல்வாக்கும் முக்கியத்துவமும்

ஒரு நாட்டின் வரவு செலவுத் திட்டம் அந்நாட்டில் வாழும் அனைத்துத் தரப்பு மக்களினதும் வாழ்க்கையின் மீது நேரடியான தாக்கங்களையும் மறைமுகமான தாக்கங்களையும் எடுத்து வருகின்றது. அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரிகள் மற்றும் மக்களின் நலன் புரிச் சேவைகளில் வெட்டுக்கள் மேற்கொள்ளப்படுதல் போன்ற வடிவங்களில் மக்களின் வாழ்க்கையின் மீது அது நேரடி தாக்கத்தை எடுத்து வருகின்றது. அரசாங்கத்தின் அபிவிருத்திச் செயல்பாட்டுக்கு உசிதமான ஒரு சூழ்நிலையை வழங்கும் குறிக்கோளுக்கு ஊடாக இன்றைய மக்கள் வாழ்க்கையிலும் வருங்கால தலைமுறையினரின் வாழ்க்கையிலும் ஒரு செழிப்பு நிலையை எடுத்து வருவதற்கு ஊடாக அது மறைமுகமான தாக்கத்தைக் கொண்டுள்ளது.

சுருக்கமாக சொல்வதானால் ஒரு வரவு செலவுத்திட்டம் என்பது அரசாங்கத்தின் வருமானங்கள் மற்றும் செலவுகள் என்பன தொடர்பாக முன்னரேயே தயாரித்துக் கொள்ளப்படும் ஓர் ஆவணமாகும். இந்த திட்டத்தில் அரசாங்கத்துக்கு வருமானம் கிடைக்கும் பல்வேறு வரி வழிமுறைகளும் வரி அல்லாத வழிமுறைகளும் அத்தகைய வருமானங்களிலிருந்து அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென செலவிடப்படும் நடப்புச் செலவுகளும், நீண்ட கால முதலீடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் அபிவிருத்திச் செலவுகளையும் உள்ளிட்ட மூலதனச் செலவுகள் போன்ற பல்வேறு கூறுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கப்படுகின்றன. அதே போல எதிர்பார்க்கப்படும் வருமானத்திலும் பார்க்க எதிர்பார்க்கப்படும் செலவு அதிகரித்துக் காணப்பட்டால் அதன் விளைவாகத் தோன்றும் ஒட்டுமொத்த வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையை நிறைவு செய்து வைக்கும் வழிமுறைகளும் இத்திட்டத்தில் உள்ளடக்கப்படுகின்றன.

வரவுசெலவுத்திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதற்கு பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற்றுக் கொள்வது ஜனநாயக நாடுகளில் காணப்படும் ஒரு நடைமுறையாகும். ஜனநாயக அமைப்பில் அரசாங்கத்தின் வருமானங்களையும் செலவுகளையும் பாராளுமன்றமே கட்டுப்படுத்தி வருகின்றது. இலங்கையின் அரசியல் யாப்பின் 148 தொடக்கம் 154 வரையான உறுப்புரைகள் அரசிறைக் கட்டுப்பாடு தொடர்பான அடிப்படை ஏற்பாடுகளை விதித்துரைத்துள்ளன. அரச வரவு செலவுத்திட்டத்தை தயாரிக்கும் பாரிய பொறுப்பு நிதியமைச்சு, பொது திறைசேரி என்பவற்றின் மூலம் நேரடியாக நிருவகிக்கப்பட்டு வரும் அனைத்து அமைச்சர்கள், திணைக்களங்கள் மற்றும் நியதிமுறைச் சபைகள் என்பவற்றைச் சார்ந்துள்ளது.

ஒரு பொருளாதாரத்தில் அரச வரவுசெலவுத்திட்டம் பல்வேறு வழிகளிலும் முக்கியத்துவம் பெறுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் நாட்டின் மிகப் பெரிய வருமானம் உழைக்கும் மூலமாக அரசாங்கம் இருந்து வருவது ஒரு முக்கிய அம்சமாகும். 1999 ஆம் வருடத்தில் இலங்கையின் அரச வருமானம் 20,000 கோடி ரூபாவாக இருந்து வந்ததுடன், அது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 17.7% ஆக இருந்தது. இந்த வருமானத்தில் சுமார் 87% ஆனவை பல்வேறு வரிகளுக்கு ஊடாகவே திரட்டப்பட்டு வருகின்றன. இதன் காராணமாக அரச வரவு செலவுத்திட்டம் ஒன்று பொருளாதாரத்தின் செற்பாட்டின் மீது பல்வேறு விதமான தாக்கங்களையும் எடுத்து வருகின்றது. செலவு அடிப்படையில் நோக்கும் பொழுது, இலங்கைப் பொருளாதாரத்தின் பாரிய செலவாளியாக அரசாங்கம் இருந்து வருவதனை அவதானிக்க முடிகிறது. வரவுசெலவுத்திட்டம் பொருளாதாரத்தில் கூடிய முக்கியத்துவம் பெறுவதற்கு வழிகோலும் மற்றொரு காரணி இதுவாகும். 1999 ஆம் வருடத்தில் இலங்கை அரசாங்கத்தின் மொத்தச் செலவினம் 28,900 கோடி ரூபாவாக இருந்தது. அது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 25.5% ஆகும். இச் செலவுகளில் முக்கால்வாசிக்கும் கூடிய பகுதி பொருளாதாரத்தின் அன்றாடச் செலவுகளான நடப்புச் செலவுகள் தொடர்பாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் அரைப் பகுதி வட்டிக் கொடுப்பனவுகளுக்காவும் பாதுகாப்புச் செலவினங்களுக்காகவும் செலவிடப்படுகின்றது. இதில் 1/4 பகுதி பொருளாதார பயனற்ற கொடுக்கல் வாங்கல்களுக்கென செலவிடப்பட்டு வருகின்றது. எனவே, இந்த அடிப்படையில் நோக்கும் பொழுது பொருளாதாரத்துக்குள் இடம்பெற்று வரும் அரச செலவுகளில் பெரும்பாலானவை வெறுமனே நுகர்வுச் செலவுகளாக இருந்து வருவதனை காண முடிகிறது. அதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்கு கிடைக்கும் பங்களிப்பு மிகவும் குறைவானதாகும். ஆகவே, அரசாங்கத்தின் செலவுகளுக்கூடாகவும் கூட பல்வேறு பொருளாதாரத் தாக்கங்கள் ஏற்படுகின்றன.

மொத்த அரசாங்க வருமானம் 18% ஆகவும், மொத்த அரச செலவினம் 26% ஆகவும் இருந்து வரும் நிலையில் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை 8% ஆக காணப்படுகிறது. அரசாங்க வரவுசெலவுத்திட்டம் குறித்து நாம் கவனம் செலுத்த வேண்டிய மூன்றாவது காரணி இதுவாகும். இத்தகைய பற்றாக்குறையை நிவர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு பல்வேறு கடன் மூலாதாரங்கள் பயன்படுத்திக் கொள்ளப்படுவதனால் அவற்றுக்கு ஊடாக வெளிநாட்டுக் கடன் சுமை, உள்நாட்டுப் பணவீக்கம், உற்பத்தி மட்டம், தனியார் துறையின் செயற்பாடு, ஒட்டுமொத்த முதலீடு மற்றும் நுகர்வு என்பவற்றின் மீது பல்வேறு விதமான தாக்கங்கள் தோன்றுகின்றன.

1995 ஆம் ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் தொடக்கம் இதுவரையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டங்கள் வரையில் பொருளாதாரத்தில் நிலவி வந்த அமைப்பு ரீதியான பலவீனங்கள் சிலவற்றை அகற்றுவதற்கு அவசியமான ஒரு பின்புலம் கட்டியெழுப்பப்பட்டு வந்துள்ளது. அதாவது, 1995 வரையில் தொடர்ச்சியாக நிலவி வந்த வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறைகள் காரணமாக பணவீக்க வேகம் 10% ஐயும் தாண்டிச் சென்றிருந்ததுடன், வட்டி விகிதமும் உயர் அளவில் நிலவி வந்தது. உயர் பணவீக்க விகிதங்கள் செலாவணி விகிதத்தின் பெறுமதியிறக்கத்துக்கு வழிகோலியிருந்தன. மேலும், உயர் அளவிலான வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைகள் பண நிரம்பலையும் அரச கடன் மட்டத்தையும் அதிகரிக்கச் செய்திருந்தன. எனவே, இந்த நிலையில் ஒட்டுமொத்த வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையை குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதற்கு தேவையான உத்திகளை வகுத்துக் கொள்வதே அண்மைக் காலத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டங்களின் அடிப்படைக் குறிக்கோளாக இருந்து வந்துள்ளது. பணவீக்க வேகத்தை குறைவடையச் செய்தல், உற்பத்திசார் தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதல், வறுமை நிலையை தணித்தல், சேமிப்பு மற்றும் முதலீடு என்பவற்றை அதிகரித்தல் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் தனியார் துறையின் முனைப்பான பங்கேற்பை பெற்றுக்கொள்ளல் என்பன இதன் துணைக் குறிக்கோள்களாக இருந்தன.

ஒட்டுமொத்த வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையை குறைத்துக் கொள்வதற்கென பின்பற்றப்பட்டு வரும் வழிமுறைகள் குறுங்கால வழிமுறைகள் மற்றும் நடுத்தர கால வழிமுறைகள் என இரு வகைகளில் அடங்குகின்றன. உற்பத்தி வரிகள், கலால் வரிகள் மற்றும் தேசிய பாதுகாப்பு வரிகள் என்பவற்றை திருத்தியமைத்தல், நாட்டைக் காக்கும் நிதியம் மற்றும் மோட்டார் வாகன வரிச் சட்டம் ஆகியவை வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை குறைத்துக் கொள்வதற்கென மேற்கொள்ளப்பட்டிருக்கும் குறுங்கால வழிமுறைகளாகும். மேலும், வீண் செலவுகளையும் அதேபோல பயனற்ற செலவுகளையும் வெட்டி விடுதல், ஊழியர் எண்ணிக்கை தொடர்பான முகாமையை விருத்தி செய்தல், அரச கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கு அரச வருமானங்களை உபயோகித்துக் கொள்ளல், அரசாங்கத்தின் செயற்பாட்டுச் செலவுகளைக் குறைத்தல், தொழில் முனைவோரின் நட்டங்களைக் குறைத்தல், கோதுமை மாவுக்கான மானியத்தை அகற்றுதல், நலன்புரிச் செலவுகளை பயனுள்ள முறையில் மறுசீரமைத்தல் மற்றும் நிதி முகாமையை விருத்தி செய்தல் என்பன இதற்கென மேற்கொள்ளப்பட்டு வரும் ஏனைய குறுங்கால வழிமுறைகளாக இருந்து வருகின்றன.

ஒட்டுமொத்த வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையை குறைத்துக் கொள்ளும் நோக்குடன் அண்மைக் கால வரவு செலவுத் திட்டங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட நடுத்தர கால வழிமுறைகளில் சேர்க்கப்பட்ட பெறுமதியின் மீது வரி விதிக்கப்படும் எளிமையான வரி முறையொன்றை அறிமுகம் செய்து வைத்து திரிபு நிலையுடன் கூடிய முன்னைய வரி முறை அகற்றப்பட்டமை, வரி அடித்தளத்தை விரிவாக்குதவதன் மூலம் வரி நிருவாகத்தை விருத்தி செய்தமை, அரச கடன்களை மீளமைப்புச் செய்தமை, அரச துறை நடவடிக்கைகளை பயனுள்ள விதத்தில் மீள ஒழுங்குபடுத்தியமை, அரச தொழில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகள் மீதான சீர்திருத்தங்களை துரிதப்படுத்ியமை முதலியவற்றை எடுத்துக் காட்டலாம். இந்த வழிமுறைகளை மேலும் முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட 2000 ஆவது ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தை இப்பொழுது நோக்குவோம்.

### வரவுசெலவுத்திட்டம் 2000

2000 ஆவது வருடத்துக்கான வரவு செலவுத்திட்டம் குறித்து ஒரு பகுப்பாய்வை மேற்கொள்ளும் பொழுது வரவு செலவுத்திட்ட உரை என அழைக்கப்படும் வ செ திட்டத்தின் முதலாவது பாகத்தையும் வரவு செலவுத் திட்ட யோசனைகள் என அழைக்கப்படும் அதன் இரண்டாவது பாகத்தையும் பகுப்பாய்வுக்கு உட்படுத்துவது முக்கியமாகும்.

வ செ திட்ட உரையின் பிரகாரம் அரசாங்கத்தின் செல்நெறி குறித்தும் அபிவிருத்தி உத்திகள் குறித்தும் சில விடயங்களைப் புரிந்து கொள்ள முடிகிறது. இந்த வரவு செலவுத் திட்டத்தை ஜனாதிபதி அவர்களே பாராளுமன்றத்துக்கு வருகை தந்து சபையில் சமர்ப்பித்தார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை மேலும் ஜனநாயக மயமாக்குவதும் இறுதியில் அதனை ஒழிப்பதுமே அரசாங்கத்தின் குறிக்கோளாக இருந்து வருகின்றது என்பதும் இங்கு எடுத்துக் கூறப்பட்டது. அது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமான அரசியல் உறுதிப்பாட்டை எடுத்து வருவதற்கான ஒரு முதல்படியாக அமைய முடியும். மேலும், பாராளுமன்றம் போன்ற மிக உயர்ந்த ஒரு நிறுவனத்தின் தரத்தை உயர்த்திக் கொள்வதற்கும் பயனுள்ள கலந்துரையாடல்கள் இடம்பெறுவதற்கும் பாராளுமன்ற ஒழுக்காறுகள் தொடர்பாக நிலவிவரும் ஒருசில சிக்கல்களை தீர்த்து வைப்பதற்கும் இது உறுதுணையாக அமைய முடியும். மேலும், சமாதான முயற்சியின் உள்ளார்ந்த ஒரு பாகம் என்ற முறையில் புதிய அரசியல் திட்டம் ஒன்றை உருவாக்குவதன் முக்கியத்துவமும் அதற்கென சம்பந்தப்பட்ட கட்சிகளினதும் குழுக்களினதும் இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை குறித்தும் ஜனாதிபதியின் உரையின் போது முக்கியமாக வலியுறுத்தப்பட்டது. நாட்டின் பொருளாதார முன்னேற்றப் பயணத்தில் நாங்கள் வெற்றியீட்ட வேண்டுமானால் அதற்கான அரசியல் பின்புலம் சரியான முறையில் உருவாக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்ற முக்கியத்துவத்தையே இந்த விடயங்கள் சுட்டிக் காட்டுகின்றன. வருங்காலத்தில் இலங்கைப் பொருளாதாரத்தின் செல் நெறியின் மீது பெரும் செல்வாக்கினை எடுத்து வரக் கூடிய ஒரு தனிக் காரணி இனப் பிரச்சினைக்கான தீர்வாகும். வரவு செலவுத் திட்டத்துடன் "இலங்கையின் பொருளாதாரம் 1999 மற்றும் நடுத்தர கால வாய்ப்புக்கள்" என்ற தலைப்புடன் கூடிய ஓர் ஆவணமும் சமர்ப்பிக்கப்பட்டது. இனப் பிரச்சினைக்கான தீர்வை அடிப்படையாகக் கொண்டு அடுத்து வரும் 10 வருடங்களுக்கான இலங்கைப் பொருளாதாரத்தின் குறிக்கோள்கள் குறித்த ஒரு மதிப்பீட்டினை இரு விதங்களில் நாம் மேற்கொள்ள முடியும் என அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த ஆவணத்தில் 2000 ஆவது வருடத்தில் சமாதான உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்படும் என்றும் 2001 ஆவது ஆண்டில் அது செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் அதன் மூலம் மோதல் நிலைமைகளுக்கு ஒரு தீர்வு வந்துவிடும் என்றும் ஒரு எடுகோள் கையாளப்பட்டுள்ளது. அத்தகைய சமாதான உடன்படிக்கையொன்றை உருவாக்கிக் கொள்ள முடியாது போனால் அதன் விளைவாக பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் என்னவாக இருக்கும் என்பதனை இரண்டாவது எடுகோள் கவனத்தில் எடுக்கின்றது.

இந்த இரு கண்ணோட்டங்களையும் நாங்கள் இக்கட்டுரையின் இறுதியில் நோக்குவோம். அதற்கு முன்னர் 2000 ஆவது வருடத்துக்கான வரவு செலவுத் திட்ட உரையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள பொருளாதாரச் சூழல் குறித்து சற்று நோக்குவோம்.

### பொருளாதார உத்தியும் அரசாங்கத்தின் கடமைப் பொறுப்பும்.

நடுத்தர கால கொள்கைத் திட்ட கட்டமைப்பொன்றுக்குள் சந்தைச் சக்திகளுக்கு உசிதமான விதத்திலான உத்தியொன்றை ஸ்தாபித்துக் கொள்வது அரசாங்க பொருளாதார முகாமைத்துவத்தின் ஒரு முக்கியமான கூறாக இருந்து வருகின்றது. சந்தைப் பொருளாதாரம் ஒன்றுக்குள் அரசு வகித்து வர வேண்டிய பங்குப் பணி குறித்து 2000 ஆவது வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தில் மிகத் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

1. கல்வி, சுகாதாரம், சூழல் கிராமிய சிறு கைத்தொழில் துறை, வறிய சமூகப் பிரிவினருக்கான சமூகப் பாதுகாப்பினை திட்டமிடல் மற்றும் சமூக, கலாசார, அபிவிருத்தி போன்ற சந்தைச் செயன்முறைக்கு ஊடாக சிறந்த முறையில் நிறைவு செய்து கொள்ள முடியாத துறைகளில் அரசு செயற்படுதல்.

2. பாரிய அளவிலான மூலதன முதலீடுகள் தேவைப்படும் வணிக இயல்பிலான உள்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியில் தனியார் துறையின் பங்கேற்புக்கு ஊக்கமளித்தல்.

3. வெளிநாட்டு தனியார் முதலீடுகளுக்கு ஊக்கமளித்தல்.

4. விலை உறுதிப்பாட்டுக்கு முன்னுரிமை வழங்கும் பொருட்டு வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையை முடியுமான அளவுக்கு குறைத்துக் கொள்ளல்.

### பொருளாதாரச் சீர்திருத்தங்கள்

கடந்த வருடங்களில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டங்களின் மூலம் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட பெருந் தொகையான பொருளாதாரச் சீர்திருத்தங்கள் குறித்து இந்த வரவுசெலவுத்திட்டத்திலும் வலியுறுத்தப்பட்டது.

1. **அரசிறை சீர்திருத்தங்கள்**

- சர்வதேச வர்த்தகத்துடன் சம்பந்தப்பட்ட வரிகளை படிப்படியாக குறைத்தல்.
- சேர்க்கப்பட்ட பெறுமதியின் மீது வரி அறவிடும் ஒரு முறையை அதாவது பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி (GST) முறையை அறிமுகம் செய்து வைத்தல்.
- உற்பத்தி வரிகளை எளிமைப்படுத்துதல்.
- சேமிப்பு மற்றும் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கென வருமான வரிகளை குறைத்தல்.
- வரி நிருவாகத்தை பயனுள்ள விதத்தில் விருத்தி செய்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நிலைத்து நிற்கக்கூடிய பொருளாதார அபிவிருத்தி ஒன்றுக்குத் தேவையான பின்புலத்தை உருவாக்குதல்.

2. **நிதித் துறைச் சீர்திருத்தங்கள்**

- சந்தை அமைப்புக்கு ஏற்ப நெறிப்படுத்தப்படும் நிதிக் கருவிகளை அடிப்படையாகக் கொண்டு நிதிக் கொள்கையை உருவாக்குவதும் அமுல் செய்வதும்.

- நிதிக் கொள்கையை நெறிப்படுத்துவதில் இலங்கை மத்திய வங்கிக்கு சுதந்திரமாக செயற்படுவதற்கு இடமளித்தல்.

- நிதிச் சந்தையில் கடுமையான போட்டி நிலை தோன்றுவதற்கு வாய்ப்பளித்தல்.

- கடன்களைப் பெற்றுக் கொள்ள விரும்புவோரின் கடன் பெறும் தலைமையை நிர்ணயித்துக் கொள் வதற்கான நிறுவனம் ஒன்றை அல்லது கடன் குறியீட்டு முகவரகம் ஒன்றை (Credit Rating Agency) ஸ்தாபித்தல்.

- நிதித் துறையுடன் சம்பந்தப்பட்ட புதிய நிறுவனங் களை உருவாக்குதல்.

- வங்கிச் சட்டத்தை திருத்தியமைத்தல்.

- கடன் பிணைப் பத்திரங்களுக்கான சந்தையை ஊக்கு வித்தல்.

இத்தகைய அரசிறைக் கொள்கைகள் மற்றும் நிதிக் கொள் கைகள் என்பவற்றிலான சீர்திருத்தங்களுக்கு ஊடாக பொரு ளாதாரத்தின் மீதான கட்டுப்பாடுகளை தளர்த்தும் செயன்முறை பயனுள்ள விதத்தில் இடம்பெற்றதுடன், அதன்மூலம் தனியார் துறையை அபிவிருத்தியில் பங்கேற்கச் செய்வதற்கான நட வடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன.

கடந்த 5 வருட காலத்தின் போது இலங்கை ஈட்டிக் கொண்டுள்ள பொருளாதார சாதனைகள் குறித்தும் 2000 ஆவது வருடத்துக்கான வரவு செலவுத்திட்ட உரையில் வலி யுறுத்தப்பட்டிருந்தது. அவற்றைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

- மெக்சிக்கோ நெருக்கடி, ரஷ்ய நிதி நெருக்கடி மற்றும் கிழக்காசிய நிதி நெருக்கடி என்பவற்றுக்கு மத்தியில் இலங்கை கடந்த 5 வருட காலத்தின் போது 5% பொருளாதார வளர்ச்சி மட்டத்தை பேணி வந்துள்ளது.

- மின்சார நுகர்வு குடித்தொகையின் 30% இலிருந்து 55% வரையில் அதிகரித்தமை.

- எல் பி கேஸ் சிலிண்டர் எண்ணிக்கை 200,000 தொடக்கம் 10,00000 வரையில் அதிகரித்தமை.

- தொழில் வாய்ப்புகள் 7 இலட்சத்துக்குப் மேற்பட்ட அளவில் அதிகரித்தமை.

- வேலையில்லாத் திண்டாட்டம் 13% இலிருந்து 8% வரையில் வீழ்ச்சியடைந்தமை.

- சுமார் 650,000 வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டமையினால் 70,000 மில்லியன் ரூபாய் வருமானம் கிடைத்தமை.

- தலைக்குரிய வருமானம் 650 டொலர்களிலிருந்து 1000 டொலர்கள் வரையில் அதிகரித்தமை.

- பணவீக்க வேகம் 10% இலிருந்து 5% ஆக வீழ்ச்சி யடைந்தமை.

- திறைசேறி உண்டியல்களின் வட்டி 20% இலிருந்து 10%-12% மட்டத்துக்கு வீழ்ச்சியடைந்தமை.

- தேசிய சேமிப்பு விகிதம் 18% இலிருந்து 23% வரை யில் அதிகரித்தமை.

**பொருளாதாரத்தில் ஏற்பட்ட பின்னடைவுகள்:**

- விவசாய விளைதிறனில் ஏற்பட்ட வீழ்ச்சி.

- உற்பத்திகள் கைத்தொழில் துறையில் உற்பத்தித் திறன் வீழ்ச்சியடைந்தமை.

- பொதுமக்களுக்கான சேவைகளை வழங்குவதில் அதிகாரிகள் காட்டிய கால தாமதம்.

- அரச முதலீட்டு வேலைத்திட்டத்தை செயற்படுத்து வதில் இடம்பெற்ற கால தாமதம்.

- படித்த இளைஞர்களிடையே நிலவிவந்த வேலை யில்லாத் திண்டாட்டம்.

- நகரப் பிரதேசங்களின் வாழ்க்கைச் செலவு அதி கரித்தமை.

**2000 ஆவது ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் முன் வைக்கப்பட்டிருந்த எதிர்பார்ப்புக்கள்.**

- பொருளாதார வளர்ச்சி வேகத்தை வருடாந்தம் 7% - 8% வரையிலான ஒரு மட்டத்துக்கு எடுத்து வரு தல்.

- தலைக்குரிய வருமானத்தை 850 அமெரிக்க டொலர் களிலிருந்து 2010 ஆவது ஆண்டளவில் 2500 அமெரிக்க டொலர்களாக அதிகரித்துக் கொள்ளல்.

- வறிய மக்கள் பிரிவினர் தற்பொழுது தேசிய வரு மானத்தில் 4% ஐ மட்டுமே பெற்று வருகின்றனர்; இந்த மட்டத்தை 2010 இல் 15% வரையில் உயர்த் திக் கொள்ளல்.

- வ செ திட்ட பற்றாக்குறை 1999 இல் 8% வரையில் வீழ்ச்சியடைந்திருந்தது; இதனை 2010 இல் 3% வரையில் குறைத்துக் கொள்ளல்.

- பணவீக்க வேகம் தற்பொழுது 5% வரையில் வீழ்ச்சியடைந்திருப்பதுடன் அதனை 3% மட்டத்துக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தேசிய சேமிப்பு விகிதம் இப்பொழுது 23% ஆகும்; இதனை 2010 இல் 35% வரையில் உயர்த்திக் கொள்ளல்.

- ஒட்டுமொத்த போக்குவரத்துக் கட்டமைப்பையும் நவீனமயமாக்குதல்.

- அனைவருக்கும் மின்சாரம், குடி நீர் மற்றும் இருப்பிட வசதிகள் என்பவற்றை வழங்குதல்.

- கிராமிய வைத்தியசாலைகளை விருத்தி செய்தல்.

- உள்நாட்டு விவசாயத் துறையை நவீனமயமாக்குதல்.

- பெருந்தோட்ட துறையை பன்முகப்படுத்துதல்.

## வரவு செலவுத் திட்ட யோசனைகள்

2000 ஆவது வருடத்துக்கான வரவு செலவுத் திட்ட யோசனைகளை முக்கியமாக இரு பிரிவுகளில் எடுத்துக் காட்டலாம்.

1. அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென மேலும் மேலும் ஊக்குவிப்புக்களை வழங்கும் யோசனைகள்.

2. வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதுடன் சம்பந்தப்பட்ட யோசனைகள்.

அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான யோசனைகளில் அடிப்படை வசதிகளை வழங்கும் பொருட்டு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சலுகை நியதிகளின் கீழ் நிதி வசதிகளை அளித்தல், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடுகளை அதிகரித்தல், விவசாய விளை பொருட்களை சந்தைப்படுத்தல் மற்றும் நீண்ட காலத்துக்கு பாதுகாத்து வைத்தல், விவசாயத் துறையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென ஊக்குவிப்புக்களை வழங்குதல். முதலீட்டுச் சபையின் 25 வீடமைப்புத் திட்டங்கள் தொடர்பான வேலைத்திட்டம், 50 தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்களை அமைக்கும் வேலைத்திட்டம், பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு தேவைப்படும் உள்ளீடுகளை உற்பத்தி செய்தல், இளைஞர் அபிவிருத்தி படையணியொன்றை உருவாக்குதல், பொலிஸ் திணைக்களத்துக்கென உயர் பயிற்சி நிறுவனம் ஒன்றை ஸ்தாபித்தல், பெற்றோலிய துறை தொடர்பான கட்டுப்பாடுகளை தளர்த்துதல், நிதித் துறை மீதான கட்டுப்பாடுகளை தளர்த்துதல், கூறு நம்பிக்கைகளில் முதலீடுகளை மேற்கொள்ளும் பொருட்டு வதிவிடப் பிரஜைகள் அல்லாதவர்களுக்கு வாய்ப்புக்களை அளித்தல், நட்டவச்ச மூலதன கம்பனிகள் தொடர்பான சட்டங்களை திருத்தியமைத்தல், உயர் தொழில்நுட்பத்துக்கென வரிச் சலுகைகளை வழங்குதல், இலங்கை - இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை செயற்படுத்துதல் மற்றும் முதலீட்டுச் சபையினால் வழங்கப்படும் ஊக்குவிப்புக்களை பயனுள்ள முறையில் வழங்குவதற்கு வகை செய்தல் என்பனவும் அடங்குகின்றன.

வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான யோசனைகளில் வரி நிர்வாகம், வரி செலுத்தும் அளவு என்பவற்றை உயர்த்துதல், தேசிய பாதுகாப்பு வரி சேவைத் துறையையும் உள்ளடக்கும் விதத்தில் வரி அடித்தளத்தை விரிவாக்குதல், குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் அறிவிடப்படும் நிருவாகக் கட்டணங்களை திருத்தியமைத்தல், இதுவரையில் பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியிலிருந்து விலக்குப் பெற்றிருந்த ஒரு சில பண்டங்களுக்கும் சேவைகளுக்கும் விலக்களித்தமை, பண்டங்கள், சேவைகள் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்த சீமெந்து, மரம், கோழி இறைச்சி, ஏனைய இறைச்சி வகைகள் என்பவற்றை பதப்படுத்தல் வரிக்கு உட்படுத்தியமை, அரச கூட்டுத்தாபனங்கள், வங்கிகள் மற்றும் நியதிமுறைச் சபைகள் என்பவற்றின் கட்டாய சேமிப்புக்களை 2000 ஆவது வருடத்துக்கான மீளவரும் செலவின் 5% ஆக நிர்ணயித்தமை, அரச கடன்களுக்கான வட்டிக் கொடுப்பனவுகளை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுத்தமை மற்றும் செலவுகளை சிக்கனமாக மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் என்பனவும் அடக்கியிருந்தன.

## ஒட்டுமொத்த வரவு செலவுத் திட்ட நிலை

புதிய வரி தொடர்பான யோசனைகள் மற்றும் செலவு தொடர்பான யோசனைகள் என்பவற்றுக்கான சீராக்கங்களை செய்த பின்னர் பொருளாதார வகையீட்டின் பிரகாரம் 2000 ஆவது வருடத்துக்கான ஒட்டுமொத்த வரவு செலவுத் திட்ட நிலைமையை பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்:

**2000 ஆவது வருடத்துக்கான<br>வ செ திட்டம் - ஒட்டுமொத்த நிலை**

| விடயம் | ரூ. (100 கோடி) | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவிகிதமாக |
|---|---|---|
| 1. மொத்த வருமானம் | 234 | 18.6 |
| 1.1 வரி வருமானம் | 202 | 16.1 |
| 1.2 வரி அல்லாத வருமானம் | 32 | 2.5 |
| 2 மொத்தச் செலவுகள் | 330 | 26.2 |
| 2.1 மீளவரும் செலவுகள் | 227 | 18.0 |
| 2.2 அரச முதலீடுகள் | 102 | 8.1 |
| 2.3 மீளமைப்புச் செலவுகள் | 5 | 0.4 |
| 2.4 ஏனையன | -43 | -0.3 |
| 3 நடைமுறைக் கணக்கு மிகை | (1-21) | 0.6 |
| 4. ஒட்டுமொத்த வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை | 96 | 7.6 |
| 5. பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல் | | |
| 5.1 வெளிநாட்டுக் கொடைகள் | 8 | 0.6 |
| 5.2 வெளிநாட்டுக் கடன்கள் (தேறியது) | 14 | 1.1 |
| 5.3 உள்நாட்டுக் கடன்கள் (தேறியது) | 44 | 3.5 |
| 5.4 அரச தொழில் முயற்சிகளை மீளமைப்புச் செய்தல் | 30 | 2.4 |

(2000 ஆவது வருடத்துக்கான வரவு செலவுத் திட்ட யோசனைகள் குறித்த ஒரு மீளாய்வு அடுத்த இதழில் இடம் பெறும்.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை அஞ்சல் அலுவலகத்தில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு எண்: **QD/27/News/99**

## பொருளியல் நோக்கு

மக்கள் வங்கியின் மும்மொழி வெளியீடான *பொருளியல் நோக்கு* சஞ்சிகை புத்தாயிரமாம் ஆண்டின் உதயத்துடன் 25 வருடங்களைப் பூர்த்தி செய்கின்றது. இக்காலப் பிரிவின் போது சமகால அரசியல், பொருளாதார, சமூக விடயங்களை ஆழமான முறையில் பகுப்பாய்வு செய்வதற்கும் கலந்துரையாடுவதற்குமான ஒரு களத்தை அது வழங்கி வந்துள்ளது. அண்மையில் அது பின் வரும் தலைப்புக்களில் அது சிறப்பிதழ்களை வெளியிட்டுள்ளது:

* உணவுப் பாதுகாப்பு
* நிதிச் சந்தைகள்
* கிழக்காசிய நெருக்கடி
* இலங்கையின் கைத்தொழில் கொள்கை
* தகவல் தொழில்நுட்பம்
* இலங்கையில் நெல் விவசாயம்

அடுத்து வரவிருக்கும் இதழ்கள்

* யூரோ
* உலகமயமாக்கல்
* கல்விச் சீர்திருத்தங்கள்
* வங்கித் தொழில்

மக்கள் வங்கி தலைமையகத்தில் அமைந்துள்ள விற்பனை நிலையத்திலிருந்தும் முக்கிய புத்தக நிலையங்களிலும் *பொருளியல் நோக்கு* இதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

(பழைய இதழ்களைப் பெற விரும்புவோர் எமது விற்பனை நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்)

சந்தா (12 இதழ்கள்) - ரூ. 300/-

வெளிநாட்டு சந்தா: சார்க் நாடுகள் US$ 30
ஏனைய நாடுகள் US$ 35
(தபால் செலவு உட்பட)

காசோலைகள்/ காசுக் கட்டளைகள்
People's Bank — Economic Review என்ற பெயருக்கு வரையப்படுதல் வேண்டும்.

முகவரி:
ஆராய்ச்சி பணிப்பாளர், ஆராய்ச்சிப் பிரிவு, மக்கள் வங்கி,
தலைமையலுவலகம், கொழும்பு 02.
தொலைபேசி: 327082/436940
பெக்ஸ்: 434526
மின் அஞ்சல்: info@res.people's.lk

பிரதி விலை: ரூ. 25/-

உரிய முறையில் *பொருளியல் நோக்கு* இதழின் பெயரைக் குறிப்பிட்டு, அதில் இடம்பெறும் கட்டுரைகளை மேற்கோள் காட்டவோ மீளப் பிரசுரிக்கவோ முடியும்.

Cover printed at the Sumathi Book Printing (Pvt) Ltd. Colombo 14, Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org